
வான் புலிகளின்... 06


சிங்களத்தின் இனஅழிப்பும்... 05


செல்லுபடியாகா வல்லாண்மை 13


இரவல் சீலையில்... 03

விடுதலைப்புலிகள்


வரலாறும் தேசியமும் 08

குரல்: 135 | பங்குனி - சித்திரை. 2007 | அன்பளிப்பு: 12/=

# சிங்களத்தை உலுக்கியெடுக்கும் புலிகளின் வான் தாக்குதல்கள்

**குறுகிய கால இடைவெளிக்குள் மூன்று வான் தாக்குதல்களை வான் புலிகள் நிகழ்த்தியுள்ளனர். இராணுவ – மற்றும் பொருண்மிய இலக்குகளே வான் புலிகளின் தாக்குதல்களுக்குள்ளாகியுள்ளன. கட்டுநாயக்கா வான் தளமும் – பலாலிப் பெருந்தளமும் சிங்களத்தின் அதியுச்ச இராணுவ இலக்குகளாகும். இவை இரண்டும் அடுத்தடுத்து வெற்றிகரமாகத் தாக்கப்பட்டுள்ளன.**

கொழும்பு எரிபொருள் சேமிப்புக் குதங்கள் மீதான வான் தாக்குதல்கள் சிங்களத்திற்கு பொருண்மிய நெருக்கடிகளை உண்டு பண்ணியுள்ளன. சிங்களத்தின் சுற்றுலாத்துறை பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

தமிழர்க்கெதிரான ஆக்கிரமிப்புப் போரின் அரசியல் - இராணுவ மற்றும் கட்டளை மையமான கொழும்புநகர் வான் புலிகளின் குண்டு வீச்சுக்களுடன் குழம்பிப்போயுள்ளது. பதட்டமும் - பீதியும் நிறைந்த இடமாகச் சிங்களத்தின் மையபீடம் உருமாறியுள்ளது.

தமிழர் மீதான வான் தாக்குதல்களின் கோரத்தையும் அது தமிழர்களிடம் ஏற்படுத்தியுள்ள பீதியையும் சிங்கள தேசமும் அனுபவிக்கும் சூழல் பிறந்துள்ளது.

தமிழரின் விடுதலையை வென்றெடுப்பதற்காக முப்படையின் அவசியத்தைத் தலைவர் பிரபாகரன் அடிக்கடி எடுத்துரைப்பார். தரைப்படை, கடற்படை, வான்படை என்ற அந்த முப்படையையும் இன்று அவர் உருவாக்கி அவற்றை வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருகின்றார். ஒவ்வொரு படைக் கட்டுமானத்தையும் நன்கு திட்டமிட்டு, கட்டியமைத்து, சரியான நேரத்தில் அவற்றை வெளிப்படுத்திக்காட்டும் தலைவரின் அற்புதமான தலைமைத்துவச் செயற்பாட்டை இன்று உலகமே வியந்து பாராட்டிவருகின்றது.

கிழக்கு நிலத்தைக் கைப்பற்றி - வடக்கில் ஒரு படைய நெருக்கடியைப் புலிகள் இயக்கத்திற்குக் கொடுத்துவருவதாகச் சிங்கள அரசு செய்த பரப்புரையை மூன்று வான் தாக்குதல்கள் மூலம் தகர்த்தெறிந்துள்ள தலைவர் அவர்கள், தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஒரு பாய்ச்சல் வளர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளார்.

புலிகளிடமுள்ளது இலகுரக - மிதவேக விமானங்கள். தம்மிடமுள்ளது சக்திவாய்ந்த - அதிவேகக் குண்டுவீச்சு விமானங்கள். உயர் தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் ஆயுதங்கள் என்றெல்லாம் சிங்கள அரசு பெருமைபேசி வந்தது.

ஆயினும், அதிவேகங்களையும் - உயர் தொழில் நுட்பங்களையும் வான் புலிகளின் திறமையும், சாதுரியமும், அர்ப்பண உணர்வும் முறியடித்து வெற்றிவாகை சூடியுள்ளன என்பதே உண்மையாகும்.

(02 ஆம் பக்கம் பார்க்க)




தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# வான்படையின் பிறப்பு புலிகளின் புதிய போர்ப்பரிமாணம்

கட்டுநாயக்கா சிங்கள வான்தளம் மீது வெற்றிகரமான ஒரு மரபுவழிக் குண்டு வீச்சுத் தாக்குதலுடன் தமது வான்படையின் பிறப்பைப் புலிகள் இயக்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

வான் படையின் பிறப்புடன் தமிழரின் விடுதலைப் போராட்டமும் புதியதொரு அரசியல் - இராணுவப் பரிமாணத்துள் பிரவேசித்துள்ளது.

செயற்திறனுள்ள தரைப்படை - கடற்படை - வான்படை என்ற முப்படையும் கொண்ட ஒரு விடுதலை இயக்கமாக புலிகள் இயக்கம் தரஉயர்வு கண்டுள்ளது.

வான் புலிகளின் தாக்குதல் இலக்குகள் சிங்களத்தின் இராணுவ - பொருண்மிய இலக்குகளாகவே இனங்காணப்பட்டுள்ளன. கொழும்பில், குளிரூட்டி அறைகளுக்குள் இருந்து கொண்டு தமிழர் தாயகப் பகுதிகளில் இன அழிப்பு நோக்கம் கொண்ட ஆக்கிரமிப்புப் போருக்கு உத்தரவுகளை வழுங்கிக் கொண்டிருக்கும் அரசின் உயர்மட்டத் தலைவர்கள் - தளபதிகளை உலுக்கியெடுக்கும் வகையில் வான் புலிகளின் தாக்குதலும் - இலக்குகளும் அமைந்திருந்தன.

இராணுவ ரீதியில் சிங்கள அரசை மிரட்டும் வகையில் புலிகள் இயக்கம் இராணுவ வெற்றிகளைப் பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் போரின் யதார்த்தமான போக்கை இனங்கண்டு தமிழ் - சிங்கள இனப்பிணக்கிற்கு நியாயமான வகையில் அரசியல் தீர்வைத் தேடுவதைக் கைவிட்டு விட்டு உலகநாடுகளிடம் ஓடிச்சென்று புலிகளின் பல வளர்ச்சியைத் திரித்துக்காட்டி உலகிற்கான ஒரு பயமுறுத்தலாக வர்ணிப்பது சிங்கள ஆட்சியாளர்களின் மரபாகும்.

வான் புலிகளின் பிறப்பையும் - அது சிங்கள அரசிற்குக் கொடுத்துள்ள அதிர்ச்சி வைத்தியத்தையும் உலகிற்கான பயமுறுத்தலாகக் காட்ட மகிந்த அரசு படாதபாடுபடுகின்றது.

''புலிகளிடமுள்ள வான் பலம் இலங்கைக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கும் ஆபத்தானது'' என்று இந்திய அரசிடம் கூறியுள்ளது சிங்கள அரசு.

அதேசமயம் கொழும்பிலுள்ள ஐரோப்பிய நாடுகளின் தூதர்களை அழைத்துப்பேசிய சிங்களத்தின் வெளிவிவகார அமைச்சர் "புலிகளின் வான் பலம் ஆசியாக் கண்டத்திற்கு மட்டுமல்ல உலகிற்கே ஆபத்தை விளைவிக்கக்கூடியது'' என்று விளக்கமளித்துள்ளார்.

புலிகள் இயக்கத்தின் வான்பல வளர்ச்சிக்கு எதிராக சிங்கள அரசுடன் உலக நாடுகளும் இணைய வேண்டும் என்ற ஒரே நோக்கிலேயே இவ்வாறு ஆளுக்கொரு விதமாக சிங்கள அரசு விசமப் பிரச்சாரம் செய்கின்றது.

வான் புலிகளின் உருவாக்கம் தமிழரின் விடுதலையுடன் சம்பந்தப்பட்டது. தமிழ் மக்களின் தற்காப்புடன் தொடர்புடையது. புலிகளின் தரைப்படை - கடற்படை போல புலிகளின் வான்படையும் சிங்களத்தின் ஆக்கிரமிப்புப் படைகளைத் தமிழர் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தும் போர்ச் செயற்பாடுகளிலேயே ஈடுபடுகின்றது.

சிங்கள அரசு கூறுவதுபோல புலிகளின் வான்படை இந்தியாவிற்கோ அல்லது வேறெந்த நாட்டிற்கோ அச்சுறுத்தலாக இருக்கப்போவதில்லை. தமிழரின் படைப்பலம் தமிழரின் விடுதலைக்கான கருவியேயன்றி உலகநாடு களை அச்சுறுத்தும் நோக்கம் கொண்டதல்ல.

தமிழரின் படைப்பல வளர்ச்சிக்கான புறச்சூழலை சிங்கள இனவாத அரசே உருவாக்கிவருகின்றது. தமிழர் தாயக நிலத்தில் சிங்களத்தின் இராணுவ அட்டூழியம் தலைவிரித்தாடிய போது புலிகளின் தரைப்படை பிறந்தது.

தமிழரின் கடலில் சிங்களக் கடற்படையின் கொலைவெறி தாண்டவமாடி - தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டபோது கடற்புலிகளின் தேவை எழுந்தது. அதேபோன்று சிங்களத்தின் வான் படை தமிழர்களை இனக்கொலை செய்யவும் - அவர்களை அச்சமூட்டிப் பணியவைக்கவும் முயன்ற சூழலில் அதற்கெதிராக புலிகளின் வான்படை பிறப் பெடுத்துள்ளது.

எனவே புலிகளின் இராணுவப் பல வளர்ச்சிக்கு வித்திட்டு - நீர் ஊற்றுவது சிங்கள அரசின் இன வெறி நடவடிக்கைகளும் - இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேட மறுக்கும் அதன் இணங்காப் போக்குகளுமே யாகும். சிங்கள அரசின் இன அழிப்பு நோக்கிற்குப் பதிலடியாகவும் தற்காப்பேற்பாடாகவுமே புலிகளின் அரசியல் - இராணுவ கட்டுமானங்கள் பிறப்பெடுத்து வளர்ந்து வருகின்றன. இந்த அரசியல் யதார்த்தத்தை உலக நாடுகள் புரிந்துகொள்ள வேண்டும் என்று புலிகள் இயக்கம் எதிர்பார்க்கின்றது.

வான்புலிகள் இதுவரை நடாத்திய மூன்று குண்டு வீச்சுத் தாக்குதல்களும் இராணுவ - பொருண்மிய நிலைகள் மீது - சிவிலியன் இழப்புக்கள் அற்று நடாத்தப்பட்டிருப்பது உலக சமூகத்திற்கு மன நிறைவைக் கொடுத்திருக்கும் என்று புலிகள் இயக்கம் நம்புகின்றது.

ஏனெனில் சிங்கள வான்படை இதுவரை நடாத்தியுள்ள குண்டுவீச்சுக்களில் மிகப்பெரும்பாலானவை அப்பாவித் தமிழ் மக்களை இலக்குவைத்தே நடாத்தப்பட்டிருக்கின்றன. சிங்களத்தின் வான் தாக்குதல்களில் சிக்கிக் கொல்லப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்மக்களின் மரணங்களே இதற்குச் சாட்சிகளாகும்.

வான் புலிகளின் பிறப்பும் - அவர்களின் வெற்றிகரமான போர்ச் செயற்பாடுகளும் சிங்களப் படைகளுடனான போரில் பெரும் திருப்பு முனைகளை உண்டுபண்ணும் சக்தியுடன் உள்ளது. தமிழரின் படைப் பல வளர்ச்சிதான் அவர்களுக்கு அரசியல் விடுதலையைப் பெற்றுக்கொடுக்கும் ஒரே ஒரு மார்க்கமாக உள்ளது என்பதே இலங்கையின் அரசியல் யதார்த்தமாகும். அந்தப் பல வளர்ச்சியில் வான் புலிகளின் பிறப்பு தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியையும் - நம்பிக்கையையும் அளித்துள்ளது. ●

---

*(01ஆம் பக்கத் தொடர்ச்சி)*

ஒரு போரில் நவீன ஆயுதங்கள் முக்கியமான இடத்தை வகிக்கின்றன என்பது சரிதான்.

ஆயினும், ஆக்கிரமிப்பிற்கெதிரான விடுதலைப் போராட்டங்களில் நவீன ஆயுதங்கள் முதன்மைப் பாத்திரத்தை வகிக்கவில்லை.

ஏனெனில் ஆக்கிரமிப்புப் போரும் - விடுதலைப் போரும் பண்பு ரீதியாக வேறுபாடானவை.

ஆக்கிரமிப்புப் போர் பண்பின் அம்சங்களாக நவீன ஆயுதங்களும் - ஆளணிப் பலமும் - பொருண்மிய பலமும் முக்கிய விடயங்களாக இருக்கும்.

ஆனால், விடுதலைப் போர் பண்பின் முதன்மை அடையாளங்களாக இலட்சியப் பற்றும் - மன உறுதியும், அர்ப்பண உணர்வுமே விளங்கும்.

அதனால்தான் நவீன தொழில்நுட்பங்களையும், சக்தி வாய்ந்த அழிவாயுதங்களையும் விடுதலை வேட்கை கொண்ட போராளிகளால் வெற்றி கொள்ள முடிகின்றது.

வான் புலிகளும் அவ்வாறுதான் ஆழமான விடுதலைப் பற்றின் உந்தலால் சிறப்பான வகையில் செயல்வீரத்தை வெளிப்படுத்தி - துல்லியமான தாக்குதல்களைத் துணிகரமாக நிகழ்த்தித் தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்குப் புது மெருகூட்டியுள்ளனர்.

தமிழருக்கு வான்படை என்ற தலைவர் பிரபாகரனின் கனவும் - அதை நனவாக்க அவர் எடுத்த பல வருட முயற்சிகளும் இப்போது செயல்வடிவம் பெற்றுள்ளன.

வரலாற்றில் முதற்தடவையாகத் தமிழினம் ஒரு வான்படையை இப்போது கொண்டுள்ளது. தரை எல்லை, கடல் எல்லை தமிழருக்கிருப்பதுபோல இப்போது வான் ஆதிக்கமும் தமிழருக்குக் கிடைத்துள்ளது. தமிழரின் வான் பரப்பில் சிங்கள வான்படை இதுவரை காலமும் வைத்திருந்த வான் ஏகபோகம் இப்போது உடைத்தெறியப்பட்டுள்ளது.

வான் புலிகளின் அடுத்த குண்டுவீச்சு எங்கே எப்போது என்று கேள்விமேல் கேள்விகேட்டு சிங்கள தேசம் அச்சமடைகின்றது.

புலிகளின் வான்தாக்குதலைத் தடுக்கும் நோக்குடன் பல்லாயிரம் கோடி ரூபா செலவு செய்து விமானங்களையும் - இராணுவ தளபாடங்களையும் வாங்கச் சிங்கள அரசு நிர்ப் பந்திக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே போர்ச்செலவால் நசுங்கிப் போயுள்ள சிங்கள அரசுக்கு இது மேன்மேலும் பொருண்மிய நெருக்கடிகளை உண்டுபண்ணப்போகின்றது.

மொத்தத்தில், வான் புலிகளின் விமானத் தாக்குதல்கள் சிங்கள தேசத்தையும் அச்சத்திற்குள்ளாக்கி, சிங்களத்தின் பொருண்மியத்தையும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. ●

# இராஜபக்ஷக்களின் ஒரே தீர்மானம், ஒரே வழி : அரியாசன ஆசைக்கு தமிழரே பலி ஆடுகள்

- சாரணன் -

**"வடக்கு - கிழக்கு வாழ் மக்களின் வாழ்க்கை நிலை மூன்று தசாப்தங்களுக்கு மேல் பின்தங்கியுள்ளது"** என இலங்கைக்கான ஒரு வெளிநாட்டுத் தூதர் கூறியுள்ள கூற்று மிகவும் கவனத்திற்குரியது. உண்மையில் தமிழீழ மக்களது வாழ்க்கை நிலை புராதன காலத்திற்குத் தள்ளப் பட்டுள்ளது என்றே கூறலாம். தென்னாசியாவில் அதிக எழுத்தறிவைக் கொண்டவர்களாயும் அதிக நவீன சாதனங்களை உள்வாங்கியவர்களாயும் கணிக்கப் பட்ட இந்த மக்கள் இப்படி ஒரு பின்தங்கிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளமையானது அரசியல் சமூகவியல் ரீதியில் மிகவும் ஆழ்ந்த பரிசீலனைக்குரிய விவகாரமாகும்.

இன ஒடுக்குமுறை அரசிய லானது இந்த மக்களை இப்படி ஒரு அவலநிலைக்குத் தள்ளியுள்ளது. அரசியல், இராணுவ ரீதியில் இவ்வின ஒடுக்குமுறையானது தமிழீழ மக்களின் வாழ்வையும், வளத்தையும் அபிலாசைகளையும் சின்னாபின்னப் படுத்தி சல்லரையாக்கியுள்ளது. அதேவேளை சிந்தனா ரீதியில் சிங்கள ஆதிக்க ஊடகங்கள் தமது ஒடுக்கு முறைத் தேவை பொறுத்துச் சிங்கள மக்களின் மூளைகளையும் இதயங்களையும் அரித்துண்ணு கின்றன. இங்ஙனம் ஆளும் குழாத்தினர் தமிழீழ மக்களை அழிக்கும் பாதையில் சிங்கள மக்களுக்கும் புதைகுழிகளைத் தோண்டிச்செல்கிறார்கள் என்பது உண்மையேயாயினும் இவ்விவ காரத்தில் நேரடிப் பலியாடுகளாய் தமிழீழ மக்களே உள்ளனர்.

தமிழீழ மக்கள் மீதான இன ஒடுக்குமுறையானது தற்போது மிக தெளிவான, மிக திட்டவட்டமான வடிவத்தினைப் பெற்றுள்ளது. சிங்கள ஆளும் வர்க்கம் இராஜபக்ஷ தலைமையில் ஒருமனம், ஒருமுடிவு, ஒரு பாதை, ஒரு நடைமுறை என்ற மிகத்தெளிவான ஓர் ஒற்றைவழிப் பாதையில் ஆனால் பல்பரிமாணத்து டன் இன ஒடுக்குமுறையை அரங் கேற்றிவருகின்றது. வரலாற்றில் முன்னெப்பொழுதும் காணப்படாத ஸ்திரத்தன்மையையும் காட்டொன்று துண்டு இரண்டான முடிவையும் சிங்கள இனவாதம் இராஜபக்ஷ தலைமையில் காட்டி வருகின்றது.

ஒற்றையாட்சி, இறைமை, இலங்கைத்தீவின் பிரதேச ஒருமைப் பாடு, தேசிய பாதுகாப்பு ஆகிய இவை அனைத்தையும் அடைவதற்கான இராணுவத்தீர்வு என மேற்படி ஐந்து அம்சங்களையும் ஒன்றில் இருந்து இன்னொன்றைப் பிரிக்க முடியாததால் ஒன்றுகலந்து ஒரு மூலோபாயத்தின் கீழ் இன ஒடுக்குமுறை ஒருங்கிணைக் கப்பட்டுள்ளது. இராஜபக்ஷ அரசாங்கத்தின் இத்தகைய ஒடுக்கு முறையை முழுநீளக் கொள்கை ஆய்விற்கு உட்படுத்தி இதன் அனைத்து அம்சங்களையும் அடையாளங்கான வேண்டியது முதற்கண் அவசியமாகும்.

ஒரு முடிவு - அதிகாரம்
ஒரு நிலைப்பாடு - நானே மன்னன்
ஒரே தீர்வு - இராணுவத்தீர்வு
இதுதான் இராஜபக்ஷக் களின் அரசியல் பாதை.
ஒரு கொள்கை - இராஜபக்ஷ வம்ஸ ஆட்சி
ஒரே ஒரு ஆயுதம் - தமிழின ஒழிப்புவாதம்
ஒரு முகமூடி - தேசபக்தன்
ஒரு கவசம் - இறைமை
இதுதான் இராஜபக்ஷக்களின் செயற்திட்ட அட்டவணை.

முதல் எதிரி - பண்டாரநாயக்க வம்சம்
முதல் நண்பன் - ஜே.வி.பி.யின் சிறுபிள்ளைத்தனம்
முதற் பணி - வெள்ளரச மரத்தின் கீழ் பலியிடப்படும் தமிழின ஆட்டுக்குட்டிகளின் இரத்த ஆற்றுக்குள் பண்டாரநாயக்க வம்ஸத்தை மூழ்கடித்தல்.

"ஆட்சி அதிகாரமே எனது ஆசைநாயகி" என்றார் நெப்போலியன்.

"நானே மன்னன்" என்றார் 14ஆம் லூயி.

"மன்னவரும் நீரோ வளநாடும் நின்னதோ" என்று கோபாவேசத்துடன் குலோத்துங்க சோழனை கேட்டார் கம்பர்.

"போர் என்றால் போர், சமாதானமென்றால் சமாதானம்" என்று டச்சுக்காரரைப் பார்த்து கண்டி மன்னன் விமலதர்மசூரியன் அறைகூவல் விடுத்தான்.

இதே அறைகூவலை 1977ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆயுதம் தரிக்காத அப்பாவித் தமிழ் மக்களைப் பார்த்து விடுத்தார்.

"சமாதானத்திற்கான யுத்தம்" என்று 1995ஆம் ஆண்டு சந்திரிக்கா யுத்தப்பேரிகை முழங்கினார்.

"யுத்தமும் சமாதானமும்" ஒன்றாய்ப் பயணிக்கலாம் என்று களைக் கூத்தாடுகின்றார் இராஜபக்ஷ.. கம்பனைத் தவிர மேற்படி அனை வருமே ஒரே விடயத்தைத்தான் வேறுவேறு விதமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"அரசியல் அதிகாரமே எனது ஆசை நாயகி"

என்ற நெப்போலியனது வெளிப்படையான கூற்றுத்தான் இங்கு நிதர்ஷனமாய் இருக்கின்றது. அதுதான் ஒரேயொரு உண்மையாக




இருக்கின்றது. இதுதான் நிர்வாண மான உண்மை. இந்த நிர்வாண கோலத்தைத் தமது மார்பளவு மறைக்க தமிழரின் இரத்தாற்றுக்குள் இராஜபக்ஷக்கள் குளிக்கின்றார்கள்: தேசபக்தி எனும் முகமூடியை அணிகிறார்கள். அப்பாவித் தமிழரின்

**தமிழ், முஸ்லீம், சிங்களம் என கிழக்கு இன ரீதியாக மூன்று முரண்பட்ட அலகுகளாக வெட்டிப் பிரிக்கப்பட்டுள்ளதுடன் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களும் பௌதீக ரீதியாக மட்டக்களப்பு, திருகோணமலை என பல்வேறு கூறுகளாகத் துண்டாடப்பட்டுள்ளது. மொத்தத்தில் பொத்துவில் முதல் பொலிகண்டி வரை தமிழீழப் பிரதேசம் முழுவதுமே துண்டுதுண்டாய் வெட்டப்பட்டு பல சிறை அறைகளாய், பெரும் மதிற்சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன.**

இரத்த ஆற்றில்தான் அதிகார சுகம் தோணிகட்டி ஓடுகின்றது.

மேற்படி அதிகார வெறிக்கான இன அழிப்பு நடவடிக்கையானது தமிழீழப் பிரதேசத்தைத் துண்டாடு வதிலும், தமிழீழ மக்களின் பொருளா தாரக் கல்வி வளர்ச்சியைப் பின்தள்ளலிலும்தான் தளமிடப் பட்டுள்ளது. அதாவது பிரதேசங் களைத் துண்டாடல், பொருளாதார வாழ்நிலையை முற்றிலும் பின்தள்ளல், கல்வி வளர்ச்சியை முடக்குதல் ஆகிய இவற்றின் மூலம் தமிழீழத் தேசியத் தன்மையை என்றென்றைக்கும் எழவிடாது தடுத்திடுவதுதான் இதன் பிரதான மூலோபாயமாகும்.

முதலாவது தமிழீழப் பிரதேசம் வாள்போட்டு அரித்தாற் போல் பல துண்டுகளாகப் பிளக்கப்பட்டுள்ளது. வடக்கை எடுத்துக் கொண்டால் அது குடாநாடு, வன்னி, வவுனியா நகர்ப்புறம், மன்னார் என பல துண்டுகளாக அரியப்பட்டுள்ளது. வடக்கிலிருந்து கிழக்கு பௌதீக ரீதியாக அரியப்பட்டுள்ளதுடன் அரசியல், நிர்வாக ரீதியாகவும் தெளிவுற வெட்டிப் பிரிக்கப்பட்டுள்ளது.

தமிழ், முஸ்லீம், சிங்களம் என கிழக்கு இனரீதியாக மூன்று முரண்பட்ட அலகுகளாக வெட்டிப் பிரிக்கப்பட்டுள்ளதுடன் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களும் பௌதீக ரீதியாக மட்டக்களப்பு, திருகோண மலை என பல்வேறு கூறுகளாகத் துண்டாடப்பட்டுள்ளது. மொத்தத்தில் பொத்துவில் முதல் பொலிகண்டி வரை தமிழீழப் பிரதேசம் முழுவதுமே துண்டுதுண்டாய் வெட்டப்பட்டு பல சிறை அறைகளாய், பெரும் மதிற்சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. இத்துண்டாடல்களானது முதற்கண் தமிழீழத் தேசிய சமூகப் பரிவர்த்தனையை இல்லாது செய்துள்ளது. ஒரு தேசிய இனத்தின் பலத்திற்கும் வளர்ச்சிக்கும் சமூகப்பரிவர்த்தனை மிகவும் அடிப்படையானது. அத்தகைய ஒரு சமூகப் பரிவர்த்தனைக்கூடாகத்தான் பல்வேறு வகை வளக்குவிவும் தேசிய எண்ண உணர்வு ஒருங்கிணைவும் உருவாகமுடியும். இது உடனடி எதிர்காலத்தில் தேசிய இனத்தைச் சின்னாபின்னப்படுத்தி ஒடுக்கு முறையை வளப்படுத்திவிடுவதுடன் நீண்ட எதிர்காலத்தில் தேசிய இன உருத்திரட்சியையே இல்லா தொழித்துவிடுகின்றது. இத்துடன் கல்வி வளர்ச்சியை முடக்குதல் என்பது நீண்ட எதிர்காலத்தில் தேசிய இன அழித்தொழிப்பிற்கான மிகக் கூரிய ஆயுதமாகும்.

குறிப்பாக இது விடயத்தில் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள் என்போரை நேரடி அர்த்தத்தில் கொல்வதுடன் பொது வாகவே கல்வி விருத்தியை அடிப் படையில் ஸ்தம்பிதத்திற்கு உள்ளாக்கி விட்டனர். இதன் விளைவு துல்லிய மாய் தெரியவர இன்னும் ஒரு தசாப்தம் போதும். கல்வி, ஊடகம், அறிவியல் ஆகிய மூன்றும் ஒன்றிலிருந்து இன்னொன்றைப் பிரித்துப் பார்க்கமுடியாத அளவிற்கு அவை ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த அம்சங்களாகும். இம் மூன்றும் இணைந்த விடயமே ஒரு தேசிய இன உருவாக்கத்தின் முதுகெலும்பாகும்.

ஒரு தேசிய இன ஒடுக்கு முறையானது இந்த முதுகெலும்பை உடைப்பதிற்றான் தன் இறுதி வெற்றியை ஈட்டுகின்றது. அதற்கு முதல் அது உடனடி வெற்றிகளை பொருளாதார ஒடுக்குமுறையில் தளமிட்டு இராணுவ நடவடிக்கை களை அதற்குக் கருவியாக்கிக் கொள்கின்றது.

இதனை நாம் மேற்கொண்டு விரிவாக ஆராய்வோம், கிழக்கை வடக்கிலிருந்து வெட்டிப்பிரித்து,

(14ஆம் பக்கம் பார்க்க)

# இராஜபக்ஷக்களின் ஒரே தீர்மானம், ஒரே வழி : அரியாசன ஆசைக்கு தமிழரே பலி ஆடுகள்

**"வடக்கு – கிழக்கு வாழ் மக்களின் வாழ்க்கை நிலை மூன்று தசாப்தங்களுக்கு மேல் பின்தங்கியுள்ளது"** என இலங்கைக்கான ஒரு வெளிநாட்டுத் தூதர் கூறியுள்ள கூற்று மிகவும் கவனத்திற்குரியது. உண்மையில் தமிழீழ மக்களது வாழ்க்கை நிலை புராதன காலத்திற்குத் தள்ளப் பட்டுள்ளது என்றே கூறலாம். தென்னாசியாவில் அதிக எழுத்தறிவைக் கொண்டவர்களாயும் அதிக நவீன சாதனங்களை உள்வாங்கியவர்களாயும் கணிக்கப் பட்ட இந்த மக்கள் இப்படி ஒரு பின்தங்கிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளமையானது அரசியல் சமூகவியல் ரீதியில் மிகவும் ஆழ்ந்த பரிசீலனைக்குரிய விவகாரமாகும்.

இன ஒடுக்குமுறை அரசிய லானது இந்த மக்களை இப்படி ஒரு அவலநிலைக்குத் தள்ளியுள்ளது. அரசியல், இராணுவ ரீதியில் இவ்வின ஒடுக்குமுறையானது தமிழீழ மக்களின் வாழ்வையும், வளத்தையும் அபிலாசைகளையும் சின்னாபின்னப் படுத்தி சல்லரையாக்கியுள்ளது. அதேவேளை சிந்தனா ரீதியில் சிங்கள ஆதிக்க ஊடகங்கள் தமது ஒடுக்கு முறைத் தேவை பொறுத்துச் சிங்கள மக்களின் மூளைகளையும் இதயங்களையும் அரித்துண்ணு கின்றன. இங்ஙனம் ஆளும் குழாத்தினர் தமிழீழ மக்களை அழிக்கும் பாதையில் சிங்கள மக்களுக்கும் புதைகுழிகளைத் தோண்டிச்செல்கிறார்கள் என்பது உண்மையேயாயினும் இவ்விவ காரத்தில் நேரடிப் பலியாடுகளாய் தமிழீழ மக்களே உள்ளனர்.

தமிழீழ மக்கள் மீதான இன ஒடுக்குமுறையானது தற்போது மிக தெளிவான, மிக திட்டவட்டமான வடிவத்தினைப் பெற்றுள்ளது. சிங்கள ஆளும் வர்க்கம் இராஜபக்ஷ தலைமையில் ஒருமனம், ஒருமுடிவு, ஒரு பாதை, ஒரு நடைமுறை என்ற மிகத்தெளிவான ஓர் ஒற்றைவழிப் பாதையில் ஆனால் பல்பரிமாணத்து டன் இன ஒடுக்குமுறையை அரங் கேற்றிவருகின்றது. வரலாற்றில் முன்னெப்பொழுதும் காணப்படாத ஸ்திரத்தன்மையையும் வெட்டொன்று துண்டு இரண்டான முடிவையும் சிங்கள இனவாதம் இராஜபக்ஷ தலைமையில் காட்டி வருகின்றது.

**— சாரணன் —**

ஒற்றையாட்சி, இறைமை, இலங்கைத்தீவின் பிரதேச ஒருமைப் பாடு, தேசிய பாதுகாப்பு ஆகிய இவை அனைத்தையும் அடைவதற்கான இராணுவத்தீர்வு என மேற்படி ஐந்து அம்சங்களையும் ஒன்றில் இருந்து இன்னொன்றைப் பிரிக்க முடியாததால் ஒன்றுகலந்து ஒரு மூலோபாயத்தின் கீழ் இன ஒடுக்குமுறை ஒருங்கிணைக் கப்பட்டுள்ளது. இராஜபக்ஷ அரசாங்கத்தின் இத்தகைய ஒடுக்கு முறையை முழுநீளக் கொள்கை ஆய்விற்கு உட்படுத்தி இதன் அனைத்து அம்சங்களையும் அடையாளங்கான வேண்டியது முதற்கண் அவசியமாகும்.

ஒரு முடிவு – அதிகாரம்
ஒரு நிலைப்பாடு – நானே மன்னன்
ஒரே தீர்வு – இராணுவத்தீர்வு
இதுதான் இராஜபக்ஷக் களின் அரசியல் பாதை.
ஒரு கொள்கை – இராஜபக்ஷ வம்ஸ ஆட்சி
ஒரே ஒரு ஆயுதம் – தமிழின ஒழிப்புவாதம்
ஒரு முகமூடி – தேசபக்தன்
ஒரு கவசம் – இறைமை
இதுதான் இராஜபக்ஷக்களின் செயற்திட்ட அட்டவணை.

முதல் எதிரி – பண்டாரநாயக்க வம்சம்
முதல் நண்பன் – ஜே.வி.பி.யின் சிறுபிள்ளைத்தனம்
முதற் பணி – வெள்ளரச மரத்தின் கீழ் பலியிடப்படும் தமிழின ஆட்டுக்குட்டிகளின் இரத்த ஆற்றுக்குள் பண்டாரநாயக்க வம்ஸத்தை மூழ்கடித்தல்.

"ஆட்சி அதிகாரமே எனது ஆசைநாயகி" என்றார் நெப்போலியன்.

"நானே மன்னன்" என்றார் 14ஆம் லூயி.

"மன்னவரும் நீரோ வளநாடும் நின்னதோ" என்று கோபாவேசத்துடன் குலோத்துங்க சோழனை கேட்டார் கம்பர்.

"போர் என்றால் போர், சமாதானமென்றால் சமாதானம்" என்று டச்சுக்காரரைப் பார்த்து கண்டி மன்னன் விமலதர்மசூரியன் அறைகூவல் விடுத்தான்.

இதே அறைகூவலை 1977ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆயுதம் தரிக்காத அப்பாவித் தமிழ் மக்களைப் பார்த்து விடுத்தார்.

"சமாதானத்திற்கான யுத்தம்" என்று 1995ஆம் ஆண்டு சந்திரிக்கா யுத்தப்பேரிகை முழங்கினார்.

"யுத்தமும் சமாதானமும்" ஒன்றாய்ப் பயணிக்கலாம் என்று களைக் கூத்தாடுகின்றார் இராஜபக்ஷ.. கம்பனைத் தவிர மேற்படி அனை வருமே ஒரே விடயத்தைத்தான் வேறுவேறு விதமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"அரசியல் அதிகாரமே எனது ஆசை நாயகி" என்ற நெப்போலியனது வெளிப்படையான கூற்றுத்தான் இங்கு நிதர்ஷனமாய் இருக்கின்றது. அதுதான் ஒரேயொரு உண்மையாக இருக்கின்றது. இதுதான் நிர்வாண மான உண்மை. இந்த நிர்வாண கோலத்தைத் தமது மார்பளவு மறைக்க தமிழரின் இரத்தாற்றுக்குள் இராஜபக்ஷக்கள் குளிக்கின்றார்கள்: தேசபக்தி எனும் முகமூடியை அணிகிறார்கள். அப்பாவித் தமிழரின் இரத்த ஆற்றில்தான் அதிகார சுகம் தோணிகட்டி ஓடுகின்றது.




> **தமிழ், முஸ்லீம், சிங்களம் என கிழக்கு இன ரீதியாக மூன்று முரண்பட்ட அலகுகளாக வெட்டிப் பிரிக்கப்பட்டுள்ளதுடன் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களும் பௌதீக ரீதியாக மட்டக்களப்பு, திருகோணமலை என பல்வேறு கூறுகளாகத் துண்டாடப்பட்டுள்ளது. மொத்தத்தில் பொத்துவில் முதல் பொலிகண்டி வரை தமிழீழப் பிரதேசம் முழுவதுமே துண்டுதுண்டாய் வெட்டப்பட்டு பல சிறை அறைகளாய், பெரும் மதிற்சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன.**

மேற்படி அதிகார வெளிக்கான இன அழிப்பு நடவடிக்கையானது தமிழீழப் பிரதேசத்தைத் துண்டாடு வதிலும், தமிழீழ மக்களின் பொருளா தாரக் கல்வி வளர்ச்சியைப் பின்தள்ளலிலும்தான் தளமிடப் பட்டுள்ளது. அதாவது பிரதேசங் களைத் துண்டாடல், பொருளாதார வாழ்நிலையை முற்றிலும் பின்தள்ளல், கல்வி வளர்ச்சியை முடக்குதல் ஆகிய இவற்றின் மூலம் தமிழீழத் தேசியத் தன்மையை என்றென்றைக்கும் எழவிடாது தடுத்திடுவதுதான் இதன் பிரதான மூலோபாயமாகும்.

முதலாவது தமிழீழப் பிரதேசம் வாள்போட்டு அரித்தாற் போல் பல துண்டுகளாகப் பிளக்கப்பட்டுள்ளது. வடக்கை எடுத்துக் கொண்டால் அது குடாநாடு, வன்னி, வவுனியா நகர்ப்புறம், மன்னார் என பல துண்டுகளாக அரியப்பட்டுள்ளது. வடக்கிலிருந்து கிழக்கு பௌதீக ரீதியாக அரியப்பட்டுள்ளதுடன் அரசியல், நிர்வாக ரீதியாகவும் தெளிவுற வெட்டிப் பிரிக்கப்பட்டுள்ளது.

தமிழ், முஸ்லீம், சிங்களம் என கிழக்கு இனரீதியாக மூன்று முரண்பட்ட அலகுகளாக வெட்டிப் பிரிக்கப்பட்டுள்ளதுடன் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களும் பௌதீக ரீதியாக மட்டக்களப்பு, திருகோண மலை என பல்வேறு கூறுகளாகத் துண்டாடப்பட்டுள்ளது. மொத்தத்தில் பொத்துவில் முதல் பொலிகண்டி வரை தமிழீழப் பிரதேசம் முழுவதுமே துண்டுதுண்டாய் வெட்டப்பட்டு பல சிறை அறைகளாய், பெரும் மதிற்சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. இத்துண்டாடல்களானது முதற்கண் தமிழீழத் தேசிய சமூகப் பரிவர்த்தனையை இல்லாது செய்துள்ளது. ஒரு தேசிய இனத்தின் பலத்திற்கும் வளர்ச்சிக்கும் சமூகப்பரிவர்த்தனை மிகவும் அடிப்படையானது. அத்தகைய ஒரு சமூகப் பரிவர்த்தனைக்கூடாகத்தான் பல்வேறு வகை வளக்குவிவும் தேசிய எண்ண உணர்வு ஒருங்கிணைவும் உருவாகமுடியும். இது உடனடி எதிர்காலத்தில் தேசிய இனத்தைச் சின்னாபின்னப்படுத்தி ஒடுக்கு முறையை வளப்படுத்திவிடுவதுடன் நீண்ட எதிர்காலத்தில் தேசிய இன உருத்திரட்சியையே இல்லா தொழித்துவிடுகின்றது. இத்துடன் கல்வி வளர்ச்சியை முடக்குதல் என்பது நீண்ட எதிர்காலத்தில் தேசிய இன அழித்தொழிப்பிற்கான மிகக் கூரிய ஆயுதமாகும்.

குறிப்பாக இது விடயத்தில் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள் என்போரை நேரடி அர்த்தத்தில் கொல்வதுடன் பொது வாகவே கல்வி விருத்தியை அடிப் படையில் ஸ்தம்பிதத்திற்கு உள்ளாக்கி விட்டனர். இதன் விளைவு துல்லிய மாய் தெரியவர இன்னும் ஒரு தசாப்தம் போதும். கல்வி, ஊடகம், அறிவியல் ஆகிய மூன்றும் ஒன்றிலிருந்து இன்னொன்றைப் பிரித்துப் பார்க்கமுடியாத அளவிற்கு அவை ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த அம்சங்களாகும். இம் மூன்றும் இணைந்த விடயமே ஒரு தேசிய இன உருவாக்கத்தின் முதுகெலும்பாகும்.

ஒரு தேசிய இன ஒடுக்கு முறையானது இந்த முதுகெலும்பை உடைப்பதிற்றான் தன் இறுதி வெற்றியை ஈட்டுகின்றது. அதற்கு முதல் அது உடனடி வெற்றிகளை பொருளாதார ஒடுக்குமுறையில் தளமிட்டு இராணுவ நடவடிக்கை களை அதற்குக் கருவியாக்கிக் கொள்கின்றது.

இதனை நாம் மேற்கொண்டு விரிவாக ஆராய்வோம், கிழக்கை வடக்கிலிருந்து வெட்டிப்பிரித்து,

(14ஆம் பக்கம் பார்க்க)





# சிங்களத்தின் இன-அழிப்பும் சர்வதேசத்தின் மௌனமும்

**கிழக்கு மாகாணத்தில் சிங்களத்தின் படையெடுப்பு நடவடிக்கைகளால் படுவான்கரைப் பகுதியைச் சேர்ந்த முழு மக்களும் வீடு வாசல்களைத் துறந்து அகதிகளாகியுள்ளனர். சுமார் இரண்டு இலட்சம் தமிழர் அகதி முகாம்களில் வாழ அங்கே நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.**

**– எல்லாளன் –**

'புலிகளின் வான்பலம் இலங்கைக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கும் ஆபத்தானது' என்று இந்திய அதிகாரிகளிடம் சிங்கள அரசு கூறியுள்ளது. அதேசமயம் ஐரோப்பிய நாடுகளின் இராஜதந்திரிகளை அழைத்த சிங்களத்தின் வெளிவிவகார அமைச்சர் ''புலிகளின் வான்பலம் ஆசியாக்கண்டத்திற்கு மட்டுமல்ல முழு உலகிற்கும் ஆபத்தானது'' என்று மிரட்டியுள்ளார்.

புலிகள் இயக்கத்திற்கு எதிராக முடிந்தளவுக்கு உலக நாடுகளை ஒன்றுதிரட்ட வேண்டும் என்ற ஆசையில் ஒவ்வொரு நாடுகளிடமும் ஒவ்வொரு விதமாகப் பேசி மகிந்த அரசு மாஜாயாலம் செய்துபார்க்கின்றது.

புலிகள் இயக்கத்தைத் தனித்து நின்று எதிர்கொள்ள முடியாத யதார்த்தத்தைச் சிங்கள அரசு ஏற்றுக் கொண்டுள்ளதையே மேற்குறித்த விடயங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

**'சார்க்'** அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளைத் தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக அணிதிரட்ட மகிந்த அரசு எடுத்த அரசியல் நடவடிக்கைகள் தோல்வியில் முடிந்துள்ளன.

வழமைபோலவே 'பயங்கரவாதத்திற்கெதிரான' என்ற சொல்லாடலைப் பயன்படுத்தித் தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக ஒரு இராணுவ ஒத்துழைப்பை ஏற்படுத்த முயன்ற மகிந்த அரசு அது நிறைவேறாமல் திரும்பியுள்ளது.

'சார்க்' மாநாட்டு அமர்வுகளில் பங்குபெற இந்தியா சென்ற மகிந்தர் தலைமையிலான அரச உயர்மட்டக் குழுவினர் வெறுங்கையுடன் நாடுதிரும்பியுள்ளனர் என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகளும் கருத்துவெளியிட்டுள்ளன.

சிங்களத்தின் கட்டுநாயக்கா வான்தளம் மீது வான்புலிகள் நடாத்திய மரபுவழி வான்தாக்குதலை உலக நாடுகளுக்கு எதிரான அச்சுறுத்தல் போல மிகைப்படுத்திக்காட்டி ஆதரவுதேட மகிந்த அரசு எடுத்த முயற்சியும் பிசுபிசுத்துவிட்டது.

புலிகளின் வான்தாக்குதல் தொடர்பாக இந்திய அதிகாரிகளிடம் ஒரு கருத்தையும் – ஐரோப்பிய இராஜதந்திரிகளிடம் இன்னொரு விதமான கருத்தும் என்று அவரவர்கட்கு ஏற்றாற்போல கருத்துக்களை வெளியிட்டு ஆதரவுதேட மகிந்த அரசு முயற்சிக்கின்றது.

புலிகளின் மரபுவழி வான்தாக்குதல் ஒரு புதிய இராணுவ பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளது என்றே உலக வல்லுனர்கள் கூறியுள்ளனர். அது ஒரு புதிய அரசியல் பரிமாணத்தையும் வெளிப்படுத்தியுள்ளது என்பதும் உண்மையாகும்.

புலிகளைப் போரில் வெல்லமுடியாது, தமிழரின் இனப்பிரச்சினைக்கு அரசியல் வழியில்தான் தீர்வு தேடவேண்டும் இராணுவ வழியில் போராட்டத்தை அழித்தொழிக்கச் சிங்கள அரசால் முடியாது என்ற உண்மைகள் அடிக்கடி சிங்களத்திற்கு உரைக்கப்படுகின்றன. ஆனால், அவற்றை ஏற்று அதன் வழிநடக்க சிங்களஅரசு மறுத்துவருகின்றது.

புலிகள் இயக்கம் வெளிப்படுத்தியுள்ள வான்பல நடவடிக்கையும் சிங்களத்திற்கு அதன் இராணுவவழித் தீர்வு முயற்சிகள் வெற்றிபெறாது என்பதையே சுட்டிக்காட்டியுள்ளன.

புலிகளின் வான்தாக்குதலை உலக நாடுகள் கண்டிக்கும் என்று சிங்கள அரசு எதிர்பார்த்திருந்தது. ஆனால் அது நடைபெறவில்லை. எந்த ஒரு உலக அரசும் கட்டுநாயக்கா தளம் மீதான புலிகளின் மரபுவழி வான்தாக்குதலைக் கண்டிக்கவில்லை. அந்தத் தாக்குதல் முற்றுமுழுதாக ஒரு இராணுவ நிலைமீது – துல்லியமாகவும், திறமையாகவும் நடாத்தப்பட்டுள்ளது. அதில் கண்டிப்பதற்கு ஒரு விடயமும் இருக்கவில்லை என்று உலக நாடுகள் கருதியுள்ளன.

இவ்விதம் கண்டனங்கள் வாராததால் சிங்கள அரசு சீற்றம் கொண்டுள்ளது. ஒவ்வொரு நாடுகளின் தூதுவர்களைத் தனித்தனியாக அழைத்துப் பேசிப்பார்த்தும் சிங்களத்திற்கு ஒரு நன்மையும் கிடைக்கவில்லை.

'உயிர்த்தெழுந்த ஞாயிறு' நாளன்று போப்பாண்டவர் விடுத்த செய்தியிலும் தமிழ் – சிங்கள இன முரண்பாடு பேசப்பட்டிருந்தது.

சிங்களத்தின் போர் முயற்சியை நிராகரித்து போப்பாண்டவர் அமைதியையும் – சமாதானத்தையும் – அரசியல்தீர்வு முயற்சியையும் வலியுறுத்திக் கூறியிருந்தார்.

இதனால் மிரண்ட மகிந்தஅரசு தனது பிரதிநிதி ஒருவரை உடனடியாகவே ரோமிற்கு அனுப்பி போப்பாண்டவரைச் சந்தித்து – தனது இராணுவ அணுகு முறைகளை விளக்க முயற்சிக்கின்றது.

மனிதஉரிமை மீறல் விவகாரத்தில் உலகநாடுகள் அனைத்தும் சிங்கள அரசைக் குற்றம் சாட்டியபடியே உள்ளன. ஐ.நா சபையும் தற்போது சிங்கள அரசின் மனிதஉரிமை மீறல் தொடர்பாக அதிககவனம் செலுத்துகின்றது.

ஐ.நா சபையின் கண்காணிப்பு அலுவலகம் ஒன்றை இலங்கையில் நிறுவவேண்டும் அதற்கு சிங்கள அரசு அனுமதிதர வேண்டும் என்று ஐ.நா சபை அரசை வேண்டியுள்ளது. ஆனால், அதற்கு அனுமதிதர மகிந்த அரசு மறுத்துவருகின்றது. அப்படி அனுமதி கொடுத்தால் தனது மனிதஉரிமை மீறல் நடவடிக்கைகளை ஐ.நாசபை ஆதாரத்துடன் பதிவு செய்துவிடும் என்று சிங்களஅரசு அஞ்சுகின்றது. அதனாலேயே அனுமதிதர மறுத்துவருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் சிங்களத்தின் படையெடுப்பு நடவடிக்கைகளால் படுவான்கரைப் பகுதியைச் சேர்ந்த முழு மக்களும் வீடு வாசல்களைத் துறந்து அகதிகளாகியுள்ளனர். சுமார் இரண்டு இலட்சம் தமிழர் அகதி முகாம்களில் வாழ அங்கே நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

உலக உணவுத்திட்ட அமைப்பும், யூ.என்.எச்.சி.ஆர் அமைப்பும் மக்களின் அவலநிலை தொடர்பாக அரசைக் கண்டித்து அறிக்கைகளும் வெளியிட்டுள்ளன.

அங்குள்ள அகதி முகாம்களுக்குள் நுழைந்த ஒட்டுக்குழுக்கள் செய்யும் அடாவடித்தனங்களை இந்த உலக அமைப்புகள் பகிரங்கப்படுத்தியுள்ளன.

மக்களை அவர்களின் வீடுகளில் இருந்து விரட்ட குண்டுத்தாக்குதலை நடாத்துவதும். பின்னர் சில வாரங்களில் அதே மக்களை அவரவர் வீடுகளில் குடியமர்த்த வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்வதையும் மனிதஉரிமை அமைப்புக்கள் கண்டித்தபடியே உள்ளன.

வடக்கு – கிழக்கில் மட்டுமல்ல – தென் இலங்கையிலும் அரசின் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளன. கொழும்பில் தமிழர் காணாமல்போவதை – கடத்தப்பட்டுக் கொல்லப்படுவதை கண்காணிக்கும் தமிழர் அமைப்பொன்றைச் சந்தித்துப்பேசவே மகிந்த ராஜபக்ச மறுப்புத் தெரிவித்துள்ளார்.

போ.நி.கண்காணிப்புக் குழு – இணைத்தலைமை நாடுகள் என்று இன்னமும் இந்த சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் இலங்கை அரசியலில் தலையீடு செய்திருந்தும் சிங்கள அரசின் தமிழர் விரோத நடவடிக்கைகளை நிறுத்தவோ! அல்லது அரசைத் தட்டிக்கேட்கவோ முற்படாதது தமிழ் மக்களை அதிர்ச்சிக்கும் – கவலைக்கும் ஆளாக்கியுள்ளது.

வெறும் கண்டன அறிக்கைகள் தமிழரைப் பாதுகாக்கமாட்டாது. சர்வதேச தலைமீட்டின் பின்னர் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளின் முன்னிலையிலேயே தமிழர்கள் சிங்கள அரசால் இனக்கொலை செய்யப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. சர்வதேசத்தின் மௌனமும் அருவருப்பாகவே உள்ளது. தமிழரை சிங்களப்படைகள் இனக்கொலை செய்கின்றன என்றால், அதைப் பார்த்தபடி சும்மாவிருந்து சர்வதேச சமூகமும் அதற்கு ஒத்துழைப்பை நல்கின்றதா! என்ற வரலாற்று வினாவுக்கு சர்வதேச சமூகம் என்றோ ஒருநாள் விடையளித்தே தீரவேண்டும். ●

# வான் புலிகளின் தொடரும் விமானத்தாக்குதல்கள்:
## புதிய பரிமாணத்தில் ஈழப்போர்

- சீ. புலித்தேவன் -

விடுதலைப்புலிகள் அண்ணளவாக ஒரு மாதகால இடைவெளிக்குள் மூன்று வெற்றிகரமான விமானத்தாக்குதல்களை நடத்தியமை முழு உலகையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது. இவற்றில் இரண்டு தாக்குதல்கள் சிறிலங்காவின் தலைநகரான கொழும்பு நகரத்தின் மையப்பகுதியில் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நடத்தப்பட்டுள்ளது. கட்டுநாயக்கா இராணுவ விமானத்தளம் மீதான வான்புலிகளின் தாக்குதல்கள் கடந்த மார்ச் மாதம் 26ம் திகதி அதிகாலை 1.45 மணியளவில் இடம்பெற்றது. இதன்பின் வான் புலிகள் கடந்த 24ம் திகதி அதிகாலை 1.20 மணியளவில் யாழ் குடாநாட்டில் அமைந்துள்ள பலாலி கூட்டுத்தளம் மீது ஒரு தாக்குதலை மேற்கொண்டார்கள். தற்போது வான்புலிகளின் இரண்டு ஸ்குவார்டன்கள் கடந்த ஏப்ரல் 29ம் திகதி அதிகாலை கொழும்பு நகரின் மையப்பகுதிக்கு வான் வழியாக ஊடுருவி கொலன்னாவ எண்ணெய் குதங்கள் மீதும் கேரவலப்பிட்டிய, வத்தளை பகுதியில் அமைந்துள்ள முத்துராயவெல எரிவாயு நிலையங்கள் மீதும் வெற்றிகரமான தாக்குதல்களை மேற்கொண்டுவிட்டு தமது தளங்களுக்கு பாதுகாப்பாக திரும்பியுள்ளன.


இதற்கிடையில் கடந்த ஏப்ரல் 26ம் திகதி இரவு 10.00–11.00 மணியளவில் இரண்டு புலிகளின் விமானங்கள் கட்டுநாயக்கா மற்றும் வவுனியா இராணுவ முகாம்களை நோக்கி பறப்பதாகக் கிடைத்த செய்திகளைத் தொடர்ந்து சிறிலங்கா படையினர் விமான எதிர்ப்பு நடவடிக்கைக் கட்டமைப்புக்களை இயக்கினார்கள். பயப்பீதியும் அச்சமும் அடைந்த சிறிலங்காவின் முப்படையினரும் விமான எதிர்ப்பு ஆயுதங்களாலும் சாதாரண துப்பாக்கிகளாலும் வானத்தை நோக்கிப் பல்வேறு திசைகளில் சுட்டுத்தள்ளியதால் கட்டுநாயக்கா விமான நிலையத்திலும் ஏனைய பகுதிகளிலும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள், விமானநிலையப் பணியாட்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் பயப்பீதியால் அங்கும் இங்கும் ஓடித்திரிந்தனர். இதைவிட மோசம் என்னவென்றால், இச்சமயத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தரையிறங்குவதற்காக வந்துகொண்டிருந்த எமிரேட்ஸ் மற்றும் சிங்கப்பூர் விமானங்கள் மீதும் கீழிருந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டதுதான். இதன் காரணமாக எமிரேட்ஸ், சிங்கப்பூர், கதே பசுபிக் விமானங்களின் கட்டுநாயக்கா விமானத்தளத்திற்கான உள்வருகை திசைதிருப்பப்பட்டு தென்னிந்தியா விமானநிலையங்களுக்கு அனுப்பப்பட்டது. இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போன்று கடந்த ஏப்ரல் 29ம் திகதி வான்புலிகளின் கொழும்பு நகரத் தாக்குதலுக்குப் பிறகு சம்பவங்கள் நடந்தேறின. கொழும்பு நகரில் வாழும் 10 இலட்சம் மக்களில் பெரும்பான்மையோர் வீடுகளிலும் பொதுஇடங்களிலும் இரவு முழுவதும் நித்திரை கொள்ளாது சிறிலங்கா–அவுஸ்ரேலியா கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான உலகக்கிண்ணப் போட்டியினை பார்த்துக்கொண்டிருந்த வேளை திடீரென வாண வேடிக்கை போன்று வெடிச்சத்தங்கள் கேட்கத்தொடங்கின. முதலில் மக்கள் உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டியினை கொண்டாடுவதற்கான வெடிச்சத்தங்கள் கேட்பதாக நினைத்தார்கள். எனினும் உடனடியாக மின்சாரம் கொழும்பு நகர மற்றும் புறநகர்ப்பகுதிகளில் நிறுத்தப்பட்டதுடன் குண்டுச்சத்தங்களும் வெடிச்சத்தங்களும் தொடர்ச்சியாகக் கேட்கத்தொடங்கியதும் ஏதோ விபரீதம் இடம்பெற்றுள்ளது என்பதை உணர்ந்துகொண்டார்கள். வீடுகளிலும் கட்டடங்களிலும் இருந்து மக்கள் வெளியே சென்று பார்த்தபோது கட்டுநாயக்காவில் இருந்து இரத்மலானை வரையும் இராணுவ முகாம்கள், சோதனை நிலையங்கள். காவலரண்கள் ஆகியனவற்றில் கடமையிலிருந்த பயப்பீதியடைந்திருந்த சிறிலங்காவின் முப்படைகளைச் சேர்ந்தவர்களும் தமது துப்பாக்கிகளினால் வானத்தை நோக்கி ரம்போ படங்களில் இடம்பெறுவது போன்று நீள் வளைய வடிவத்தில் சுட்டுத்தள்ளினார்கள். இவர்கள் பயன்படுத்திய ரேசர் ரவைகள் இரவு நேர வானத்திலே மத்தாப்புக்கள் வெடித்ததுபோன்று அனைத்துக் கட்டடங்களிலும் இருந்து வான்நோக்கிச் சென்று வர்ணக் கோலங்களை வரைந்தது.



இவ்வாறான சம்பவங்களினால் அச்சமும் திகிலும் அடைந்திருந்த கொழும்பு நகர விடுதிகளில் தங்கியிருந்த உல்லாசப் பிரயாணிகள், வர்த்தகர்கள் மற்றும் ஏனைய பிரமுகர்கள் உடனடியாக தமது அறைகளை விட்டு வெளியேறி தரைப்பகுதியில் இருக்கின்ற வரவேற்பு பகுதிக்கு கீழே இறங்கிவருமாறு பணிக்கப்பட்டார்கள். மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில் பல்லடுக்கு மாடிகளைக் கொண்ட உல்லாச விடுதிக் கட்டடங்களில் இருந்து மாடிப் படிகள் ஊடாக இறங்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை இவர்களுக்கு ஏற்பட்டது. பயப்பீதியும் கோபமும் அடைந்திருந்த பல உல்லாசப்பிரயாணிகள் இதுதான் சிறிலங்காவிற்கான தமது கடைசிப் பயணம் எனத் தெரிவித்தார்கள்.

இத்தாக்குதல்களின் மூலோபாய, அரசியல் மற்றும் பொருளாதாரத் தாக்கங்களையும் விளைவுகளையும் சிங்கள தேசம் உடனடியாகவே அனுபவிக்கத்தொடங்கிவிட்டது. கொங்கொங்கினைத் தளமாகக் கொண்டியங்கும் கதே பசுபிக் விமான நிறுவனம், டுபாயினை தலைமையகமாகக் கொண்டியங்கும் எமிரேட்ஸ் ஆகிய நிறுவனங்கள் தமது கொழும்பிற்கான விமான சேவைகளை தற்காலிகமாக நிறுத்துவதாக அறிவித்தன. இவை தவிர, சிங்கப்பூர் விமான நிறுவனம் தனது சிறிலங்காவிற்கான பறப்புக்களை பகல் வேளைகளில் மட்டும் மேற்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளது. அத்தோடு ஐரோப்பிய நாடுகள் பலவற்றுடன் அவுஸ்ரேலியாவும் தமது மக்களுக்கு சிறிலங்காவிற்குப் பயணிப்பதால் எதிர்கொள்ளவேண்டியிருக்கும் உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் நெருக்கடிகள் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. மேலும் சிறிலங்கா அரசாங்கம் பாதுகாப்பு காரணங்களுக்காக மே 10ம் திகதியில் இருந்து இரவு 10.30 தொடக்கம் அதிகாலை 4.30 வரை சர்வதேச விமானநிலையம் மூடப்பட்டிருக்கும் என்று அறிவித்துள்ளது. இந்த அறிவிப்புக்களின் விளைவுகள் பொருளாதாரத்தைப் பொறுத்த வரை தென்னாசியாவில் விமானம் மற்றும் கப்பல்களின் போக்குவரத்து மையமாக விளங்கும் சிறிலங்காவிற்குப் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தவல்லது.

சாதாரணமாகக் கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் ஒரு நாளைக்கு சராசரியாக 70 வரையிலான விமானங்கள் இறங்கி ஏறுவது வழக்கம். விமானநிலையத்தினை இரவு வேளை மூடுவதால் அண்ணளவாக 40வீதமான விமானங்களின் வருகைகள் தடைப்படப்போகின்றது. அத்துடன் சிறிலங்கா ஏயார் லைன்ஸ் நிறுவனத்தின் 43.6 வீதப் பங்கினை எமிரேட்ஸ் நிறுவனம் வாங்கியுள்ளதுடன் நிர்வாக முகாமைத்துவம் முழுவதும் எமிரேட்ஸ் நிறுவனவத்தினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. எனவே எதிர்காலத்தில் எமிரேட்ஸ் நிறுவனமானது தனது தென் மற்றும் தென்கிழக்காசிய




'போரிலே ஒரு ஜெனரல் விடக்கூடிய மிகவும் மோசமான தவறு என்ன வென்றால் கடந்த காலப் போர்களையோ சமர்களையோ போன்றுதான் எதிர் காலப் போர்களும் சமர்களும் அமையும் என்று நம்புவது'

– லெப்.கேனல் போல் ஜிங்கினின் அமெரிக்காவின் 3வது கவசப்படைத் துணைத் தளபதி

நாடுகளுக்கான பறப்புக்களுக்கு பாதுகாப்பு காரணங்களுக்காக கொழும்பினை தவிர்த்து மாலைதீவு, தென் இந்தியா, சிங்கப்பூர் போன்ற விமானநிலையங்களைப் பயன்படுத்த முற்பட்டால் ஏற்கனவே பொருளாதார மற்றும் நிர்வாக நெருக்கடிகளுக்குள் சிக்கியுள்ள சிறிலங்கா ஏயார் லைன்ஸ் நிறுவனத்திற்கு விரைவில் மூடுவிழா வைக்கவேண்டிய நிலையும் உருவாகும். உல்லாசப் பிரயாணத்துறை யானது சிறிலங்காவின் பொருளாதாரத்தில் வருமானம் ஈட்டுவது தொடர்பாக முக்கிய பங்கினை வகிக்கின்றது. வருடத்திற்கு ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான உல்லாசப் பிரயாணிகள் சிறிலங்காவிற்கு விடுமுறையைக் கழிப்பதற்காக வருகை தருவதினால் 410 மில்லியன் டொலர்கள் வருமானம் ஈட்டப்படுகின்றது. இத்துறை சிறிலங்காவின் மூன்றாவது பெரிய வருமானத்தை ஈட்டும் அமைப்பாகக் கணிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே தொடர்ச்சியான சிறிலங்கா அரசின் போர் நடவடிக்கைகள் காரணமாக 36வீதத்தினால் ஆட்களின் வருகை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் புலிகளின் வான்தாக்குதல்களும் அதனைத் தொடர்ந்து விமானநிலைய மற்றும் உல்லாச விடுதி அதிகாரிகளின் நெருக்கடிகளை கையாளத்தெரியாத, முட்டாள்த்தனமான அணுகுமுறையும் (கடந்த ஏப்ரல் 26ம் திகதி நூறு வரையிலான பெல்ஜிய நாட்டு உல்லாசப்பிரயாணிகள் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புலிகளின் வான்தாக்குதல் இடம்பெறலாம் என்ற அச்சத்தின் காரணமாக நிலத்தில் குப்புற படுக்கும்படி விமானநிலைய பணியாட்களால் கட்டாயப் படுத்தப்பட்டார்கள்.) இணைந்து மேலும் உல்லாசப்பிரயாணத் துறையை சீரழிக்கப்போவதாக பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்காவின் பொருளாதார மானது ஏற்கனவே 17வீத பணவீக்கத்தினால் மற்றும் வரவுசெலவு பற்றாக்குறை மொத்த தேசிய உற்பத்தியில் 8.4வீதமாகக் காணப்படுவதாலும் மூச்சுத்திணறிக்கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் வான்புலிகளின் புதிய சவால்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்வதற்கு மிகவும் விலை கூடிய வான் கண்காணிப்புக் கருவிகள், வானூர்தி களை இரவில் கண்டுபிடிப்பதற்கான உபகரணங்கள் மற்றும் வான் பலத்தினை அதிகரிப்பதற்கு புதிய விமானங்கள் கொள்வனவு போன்ற நடவடிக்கை களுக்காக 2007ம் ஆண்டிற்கான பாதுகாப்புச் செலவீனமானது 139 பில்லியன் ரூபாய் களில் இருந்து 200 பில்லியன் ரூபாய்களாக (20,000 கோடி ரூபா) அதிகரிக்கப்படவுள்ள தாக முன்னாள் விமானப்படைத் தளபதி ஏயார் மாசல் 'ரி குணதிலக்கா கூறியுள்ளார். இவ் பாதுகாப்பு செலவதிகரிப்பானது ஏற்கனவே வரவுசெலவு பற்றாக்குறையால் திண்டாடும் சிங்கள அரசிற்கு மேலும் சிக்கல்களை ஏற்படுத்தப்போகின்றது.

### மூலோபாய போரியலில் கேணல் வார்டனின் 'ஐந்து வளையக் கோட்பாடு':

அமெரிக்க விமானப்படையின் கேணலாக கடமையாற்றிய ஜோன் வார்டன், ஒரு எதிரி அரசின் போரிடும் ஆற்றல்களைப் பௌதீக ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் அழிப்பதற்கு அல்லது முடக்குவதற்கு இந்த ஐந்து வளையக் கோட்பாட்டினை ஒரு எளிய வடிவமாக முன்வைக்கின்றார். இக்கோட்பாட்டினை சிறப்பாகப் பயன் படுத்துவதற்கு எதிரியின் பிரதான தலைமைப்பீடம் மற்றும் கட்டளை மையங்களை குறிப்பாக அடையாளப்படுத்தி அதன் மீது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் அவசியமானது என்று வலியுறுத்துகின்றார் வார்டன்.

(15ஆம் பக்கம் பார்க்க)

யுத்தம் நிச்சயிக்கப்பட்டுவிட்டது என்றாகிவிட்டால் யுத்தத்தின் வெற்றிக்காக வியூகம் வகுப்பதே தமிழர் தரப்பின் கடன். வருகின்ற யுத்தம் எந்த வகையிலேனும் யுத்தத்தின் முடிவைநோக்கிக் கொண்டுசெல்லும் சக்திமிக்கதாக இருக்கும் என்று ஒரு பொதுவான கருதுகோள் உண்டு. அரசியலில் தீர்மானகரமான ஒரு காலத்தில் யுத்தம் நிச்சயிக்கப்பட்டு விட்டது என்பதுதான் இதன் மிகுந்த கவனத்திற்குரியது. எனவே வரும் யுத்தமே அரசியலைத் தீர்மானித்துவிட வல்லதாக இருக்கிறது.

எனவே யுத்தத்தின் முடிவு, யுத்தத்தின் விளைவு, யுத்தத்தின் பெறுபேறு என்ன என்பதுவே மொத்தக் கவனத்தை ஈர்க்கும் விவகாரம். இக்கவன ஈர்ப்பு எழுப்பும் விடயம் என்னவென்றால் தலைவிதியைத் தீர்மானிப்பதான இந்த யுத்தத்தை வெற்றிகொள்வதற்கான வலிமை, நம்பிக்கை எதில் அடங்கியிருக்கிறது என்பதுதான்.

யுத்தத்தின் இறுதி வெற்றியில் தாக்கம் செலுத்தும் காரணிகள் பலவாயினும் வரலாறு ஒரு பொதுப்படையான உண்மையை எமக்குத் தருகின்றது. அது எதுவெனில் யுத்தத்தரப்புக்களில் எத்தரப்பில் அது மக்களின் சொந்த யுத்தமாகப் பரிணமிக்கின்றதோ அதுவே இறுதிவெற்றியைப் பெற்றுக்கொள்ளும் என்பதுவே.

இங்கு ஆக்கிரமிப்பு யுத்தமொன்றில் ஆக்கிரமிப்பாளர்களால் யுத்தத்தை தங்கள் மக்களின் யுத்தமாக மாற்றக்கூடிய ஏதுக்கள் இருப்பதில்லை. மாறாக ஆக்கிரமிப்பிற்கு எதிராகப் போரிடுபவர்கள் அதை மக்களின் யுத்தமாக பரிணமிக்க வைக்கமுடியும். விடுதலை யுத்தங்களிற்குரிய வீரியம் இதுவே.

வரலாற்று விஞ்ஞானியான ஏங்கல்ஸ் கூறினார் தங்கள் சுதந்திரத்தை மீளப்பெறுவதற்காகப் போராடுபவர்கள் போரை நடத்துவதில் மரபுவழிப்பட்ட முறைகளோடு நின்றுவிடமுடியாது. தேசம் தழுவிய வெகுஜன படும்போது அது மன்னர்களின் யுத்தமாகச் சுருங்குவதில்லை. பதிலாக யுத்தத்தை எதிர்கொள்ளும் தேச மக்கள் தாங்கள் அன்னியர்களால் ஆக்கிரமிக்கப்படுவதான உணர்வால் எழுச்சியடைவார்கள் என்பதனால் அத்தேசத்திற்கு அதை மக்கள் யுத்தமாக மாற்ற வாய்ப்பிருக்கும். நெப்போலியன் ரஷ்யா மீது படையெடுத்துத் தோற்றது இதன் அடிப்படையில்தான். ரஷ்யா மன்னர் ஆட்சி நாடாக இருந்தபோதும் அந்த யுத்தம் மரபுப்படைகளோடு மட்டுமல்லாது மக்கள்மயப்பட்ட யுத்தமாக மாற்றுவிக்கப்பட்டது. விளைவு இலட்சக்கணக்கான படையுடன் வந்த நெப்போலியன் தோல்விகாண நேர்ந்தது. ஐரோப்பாவில் தோற்றறியாத படை அவமானகரமான தோல்வியைச் சந்தித்தது.

இரண்டாம் உலக யுத்தத்தில் கிட்லர் அறிமுகம் செய்த மின்னல் வேகப் போர்முறை ஐரோப்பாவில் வெற்றிமுகம் கண்டது. பல நாடுகளை வென்று முன்னேறியது. பிரான்சையே மிகச் சுலபமாக வீழ்த்தியது. ஆனால் சோவியத் யூனியனுக்குள் நாசிப் படைகள் புகுந்தபோது அவை தோல்விமுகம் காணத்தொடங்கின. காரணம் அங்கு யுத்தம் மரபுவழிப் படைகளுடன் மட்டுப்படாமல் யுத்தம் மக்கள் மயப்படுத்தப்பட்டது. மின்னல் போர்முறை லெனின்கிராட் மக்கள் யுத்தத்தால் தாக்குப்பிடிக்க இயலாமல் போய் விட்டது. ஆனால் ஐரோப்பிய நாடுகளை கிட்லரின் படை வெல்லும் போது இந்த நிலை இருக்கவில்லை.

சீனாவில் ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தை மாவோ எதிர்கொண்ட போது தொடக்கத்தில் தோல்வி முகம் கண்டார். பின் அதற்கான காரணத்தை அவர் கண்டறிந்து தன் சேனைகளுக்கு இப்படி விளக்கினார். நாங்கள் யப்பானுக்கு எதிரான யுத்தத்திற்கு மக்களை விழிப்படைய வைக்கவில்லை. ஜப்பானுக்கு எதிராக மக்கள் அணிதிரட்டப்பட்டிருக்கவில்லை. அப்படியிருக்க வெறுமனே சேனைகளை வைத்து யுத்தத்தை எதிர்கொண்டதே தோல்விக்கான காரணம். எனவே வியாபித்த சீன தேசத்தை ஜப்பானிற்கு எதிராக விழிப்புறவும் அணிதிரட்டவும் வேண்டும் என உத்தரவிட்டார். இத்தகைய பணித்திட்டம் முன்னெடுக்கப்பட்டதும் யப்பானிற்கு எதிரான போரை மாவோ வெற்றிகொண்டார்.

அமெரிக்கா வியட்நாமை ஆக்கிரமித்தபோது உலகப்பலம் வாய்ந்த வல்லரசு தன் கூட்டணி நாடுகளின் பலத்தோடு விடாப்பிடியாக செய்யும் யுத்தத்தின் பரிமாணத்தை விளங்கிக்கொண்ட வியட்நாமியத் தளபதி ஜெனரல் கியாப் 'யுத்தத்தை வியட்நாமிய மயப்படுத்துதல்' என்ற யுத்தக்கோட்பாட்டை முன்வைத்தார். யுத்தத்தின் தோல்வியிலிருந்து வியட்நாம் தப்பவேண்டுமாயின் யுத்தம் ஒவ்வொரு வியட்நாமிய மக்களுடையதாகவும் மாற்றப்படவேண்டும் என உணர்ந்துகொண்டார். விளைவு வியட்நாமின் எல்லாச் சமர்களிலும் வெற்றிகண்ட அமெரிக்கா இறுதியில் யுத்தத்தில் தோற்றுப்போயிற்று.

அண்மையில் அமெரிக்கப் படைகள் ஈராக்கை ஆக்கிரமித்தன. அமெரிக்கப் படைகளை எதிர்கொள்ள ஈராக்கிய மக்கள் யுத்தம் ஒன்றைக் கொண்டுநடத்த ஆட்சியாளர்களால் முடிந்திருந்தால் அமெரிக்க ஆக்கிரமிப்பு இவ்வேளையில் தோற்கடிக்கப்பட முடிந்திருக்கும். ஆனால் சதாம் ஹூசைன் ஈராக்கியப் பெரும்பான்மை மக்களாகிய சியாமுஸ்லீம் பிரிவினர் மற்றும் ஈராக்கியக் குருதீஸ்கள் மீது புரிந்த உரிமை மறுப்பு, கொடூரம் அடக்குமுறை என்பன ஈராக்கிய மக்கள் மயப்படுத்தப்பட்ட யுத்தம் ஒன்றைச் சாத்தியமற்றதாக்கிவிட்டது. இந்த வகையில் அமெரிக்க வெற்றியை நிச்சயித்தது ஈராக்கிய ஆட்சியாளர்களேதான். சுலபமான வெற்றிக்கும் ஈராக்கிய அவமானத் தோல்விக்கும் இதுவேதான் காரணமாயிற்று.



– கு.கவியழகன் –

# யுத்தத்தில் வெற்றி பெறும் வியூகம் வரலாறு தந்த படிப்பினை

எழுச்சிகள், புரட்சி நடவடிக்கைகள், நாடெங்கினும் கெரில்லாத் தாக்குதல்கள் என இயங்கவேண்டும். சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்களைத் தோற்கடிப்பதற்கான வழியும், வலுக்குறைந்த சேனை வலுக்கூடிய சேனையைத் தோற்கடிப்பதற்கான வழியும் இதுவொன்றுதான்.

அவர் யுத்தம் பற்றிய தனது ஆய்வுரை ஒன்றில் இதற்கு உதாரணமாக ஆஸ்திரியா இத்தாலியை ஆக்கிரமிக்க முடிந்ததையும், பிரஸ்சியா பிரான்சை ஆக்கிரமிக்க முடிந்ததையும் சுட்டுகின்றார். ஆஸ்திரியா இத்தாலியை ஆக்கிரமிக்க முயன்றபோது பியட்மொன்ட்சே தலைமையிலான இத்தாலியப் படை தோற்றதற்கு அவர்கள் தொழில்முறை சார் மரபுப் படையை மட்டும் நம்பி யுத்தத்தை எதிர்கொண்டமையே காரணம் என்கிறார். மாறாக மக்களை அணிதிரட்டக்கூடிய வாய்ப்பைப் பயன்படுத்தியிருந்தால், அது மக்கள் யுத்தமாக மாற்றப்பட்டிருந்தால் ஆஸ்திரிய ஆக்கிரமிப்பு முறியடிக்கப்பட்டிருக்கும். 1871ல் பிரஸ்சியா பிரான்சை ஆக்கிரமித்தபோது பிரான்சின் 1/6 பகுதியையே கைப்பற்றியிருந்தது. மென், பரிஸ் கோட்டைகள் அதன் வசம் இருந்தன. பிரான்சியப் படை தன் மரபுப்படைக்கு அப்பால் பிரான்சிய மக்கள் மயப்படுத்தப்பட்ட யுத்தம் ஒன்றிற்கு மிகுதியான பெரும் பிரதேசத்திலிருந்து மக்களைத் தயார்ப்படுத்தியிருக்க முடியும். அவ்வாறு நிகழ்ந்திருந்தால் பிரஸ்சியப்படைகள் தோற்றோடவேண்டிய நிலைமை உருவாகியிருக்கும் என்கிறார் ஏங்கல்ஸ்.

உலகப் பிரசித்தமான சமூகவியல் விஞ்ஞானி அமிர்கால் கப்றைல் வெல்லப்படமுடியாத நெப்போலியன் தோற்றதற்கான காரணத்தை விளக்குகிறார். நெப்போலியன் ஒத்த கலாச்சார மக்கள் வாழும் தேசங்கள் மீது யுத்தம் தொடுத்தபோது அவை எல்லாவற்றையும் வெல்லமுடிந்தது. ஆனால் பிறிதான காலாச்சாரம் கொண்ட மக்கள்தேசம் மீது யுத்தம் தொடுத்த போது அவர் தோற்க நேர்ந்தது என்கிறார். அதை இன்னொரு வகையில் விளங்குவோமானால் பிறிதான காலாச்சாரம் கொண்ட மக்கள் மீது யுத்தம் தொடுக்கப்

**யுத்தத்தின் இறுதி வெற்றியில் தாக்கம் செலுத்தும் காரணிகள் பலவாயினும் வரலாறு ஒரு பொதுப்படையான உண்மையை எமக்குத் தருகின்றது. அது எதுவெனில் யுத்தத்தரப்புக்களில் எத்தரப்பில் அது மக்களின் சொந்த யுத்தமாகப் பரிணமிக்கின்றதோ அதுவே இறுதிவெற்றியைப் பெற்றுக்கொள்ளும் என்பதுவே.**

இன்று ஈரான் மீதும் சரி, வடகொரியா மீதும்சரி யுத்தம் புரிய அவர்கள் விரும்புகிறார்கள். ஆயினும் அவர்கள் அஞ்சும் விடயம் ஈராக் போன்ற நிலை ஈரானிலோ கொரியாவிலோ இல்லையென்பதுதான். அங்கு யுத்தம் வெறும் அரசுப் படைகளினுடையது அல்ல. யுத்தத்தில் அந்நாடுகள் கைப்பற்றப்படினும் கூட அங்கு ஆக்கிரமிப்பாளர்களின் இருப்பு மக்கள் மயப்பட்ட யுத்தத்தால் தோற்கடிக்கப்படும் வாய்ப்பே அஞ்சுதற்குரியது. மக்கள் மயப்பட்ட யுத்தத்திற்கான வாய்ப்பே இன்றுவரை அங்கு யுத்த அபாயத்தை தவிர்ப்பதற்கான காரணிகளில் ஒன்றாக உள்ளது.

சமாதான காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இன்ரப்போல் அதிகாரி யாழ்ப்பாணப் பாதுகாப்பு நிலவரங்களைப் பார்வையிட்ட பின்பு இலங்கைப் படைத்தரப்பிற்கு வழங்கிய ஆலோசனை என்னவென்றால் யாழ்ப்பாணத்தின் பொங்குதமிழ் எழுச்சி தான் எதிர்காலத்தில் மெய்யான யாழ்ப்பாணத்தின் பாதுகாப்புச் சவால் என்றார்.

உலகில் போர்களை இருவகையாக்கலாம் ஆக்கிரமிப்புப் போர்கள், ஆக்கிரமிப்பிற்கு எதிரான போர்கள் என. இத்தகைய போர்களின் வரலாற்றுப் பாடம், வெற்றியின் இரகசியம் ஆக்கிரமிப்பிற்கு எதிராகப் போர் புரியும் எமக்கு சமர்ப்பணமாய் இருக்கிறது. கற்பதும் அதன்படி நிற்பதுமே வெற்றிக்குப் பிரயாசைப்படும் தமிழர் கடன். ▲



**கலாச்சாரம் உயர்நிலை எய்தும் போதே ஒரு இனம் மகிமை பெறுகின்றது, மனித வாழ்வு உன்னதம் அடைகிறது, மனிதம் உயர் வளர்ச்சியை எட்டுகிறது.**

**– தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் –**

# வரலாறும் தேசியமும்




**ஒரு** இனம் தன்னுடைய பண்டைய வரலாற்றினைக் கற்றுணரவேண்டிய தேவை இருக்கிறது. எவ்வளவு தூரம் எமது வரலாற்றினைப் பின்னோக்கிப் பார்க்க எம்மால் முடியுமோ அவ்வளவு தூரம் எம்மால் முன்னேற முடியும் என்று சொல்லப் படுகிறது. வரலாறு வழிகாட்டியாகவும், வரலாற்றுத் தவறுக ளைத் தவிர்ப்பதற்கு உதவும் நண்பனாகவும் இடம்பெறுகிறது. வரலாறு கற்கையில் தொல்பொருளியல், மொழியியல், ஆதி வரலாறு, அரசியல், புவியியல், சமூகவியல், இலக்கியம் என்பன முக்கிய இடம் வகிக்கின்றன. ஒரு இனத்தின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை அறிவதற்கு இவையனைத்தும் உதவுகின்றன. தன்னினத்தின் தொன்மையும், தொல்காலச் சுவடுகளையும் ஒரு தேசிய இனம் உய்துணரும்போது விடுதலை வேட்கையும் நாட்டுப்பற்றும் மேன்மை அடைகின்றன. பிற இனங்களின் பண்பாட்டு இயல்புகள், வரலாற்றுப் போக்கு, அரசு முறை என்பவற்றையும் நாம் கற்றுணர வேண்டும். நமது அயல்நாடுகள் எம்மீது பாதிப்புக் களை ஏற்படுத்து கின்றன. அவர்கள் மேற்கொள்ளும் இராசதந்திர மற்றும் அரசியல் அணுகுமுறைகளை விளங்கிக்கொள்வதற்கு அந்த நாடுகளின் வரலாறும் பாரம்பரியமும் எமக்கு உதவுகின்றன. இவ்வகையான வரலாற்றுக் கற்கை எமது வெளியுறவைப் பலப்படுத்துவ தோடு எமது தற்காப்புக் கவசமாகவும் இடம்பெறுகிறது.

தொடர்ச்சியாக எழுதப்பட்ட வரலாறு ஈழத்தமிழர் களுக்கு இல்லாமை தேசிய உணர்வை ஓரளவுக்குப் பாதிக்கின்றது. தமிழ்மொழி பழமை மிக்கதாகவும், தனி மரபுகொண்டதாகவும், தானே முகிழ்த்ததாகவும், மற்றைய மொழிகளிலிருந்து கிளைக்காததாகவும், தன்னகத்தே பெருவளமிக்க தொன்மையான இலக்கியமுள்ளதாகவும் இருப்பதால் எமது தேசியமும் தமிழுணர்வும் குன்றாதிருக் கின்றன. இருப்பினும் தமிழகத்திலோ இங்கோ தொடர் சியான வரலாற்று நூல்கள் இல்லாக்குறையை நிவர்த்தி செய்ய முடியாதிருக்கின்றது. சிங்கள மக்களைப் பொறுத்தளவில் புனைகளுடனாவது ஒரு எழுதப்பட்ட வரலாறு மகாவம்ச உருவத்தில் இருக்கிறது. தமிழ் என்று முதன் முதலாக சங்க இலக்கியத்திலும் தொல்காப்பியத் திலும் குறிப்பிடப்படுகிறது. தமிழ் என்ற சொல் இவற்றில் ஒரு மொழி, ஒரு இனம், ஒரு நாடு என்பவற்றைக் குறிப் பிடும் பதமாகப் பயன்படுகின்றது. பொதுவாக மொழியைக் குறிக்கும் சொல், அம்மொழி பேசும் மக்கள், மொழி வழங்கும் நாடு என்பனவற்றைக் குறிக்கும். இது தமிழ் மொழிக்கும் பொருந்தும், ஆனால் தமிழ் மேலும் விரிவான பல பொருள்களைக் கொண்டுள்ளது. "இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" என்று பிங்கல நிகண்டு கூறுகிறது. சேரன் செங்குட்டுவனின் வடபுலச் செலவு பற்றிக் குறிப்பிடும் இளங்கோவடிகள் தமிழ் என்பது வீரத்தைக் குறிப்பிடவைத்துள்ளார்.

"வடதிசை மருங்கின் மன்னவரெல்லாம்
தென்தமிழ் ஆற்றல் காணகுதும் யாமென"

சிலப்பதிகாரம் 26:185

தமிழ் என்பது தமிழ் நூலையும் குறிப்பிடும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுவார்கள்.

தமிழீழத்தவரான தவத்திரு தனிநாயகம் அடிகளார் ஐம்பதாண்டுகளுக்கு முன்பு உலகின் பல பாகங்களிற்குச் சென்று தமிழின் பெருமை பற்றிப் பேசியுள்ளார். தமிழின் தொன்மை, இலக்கியவளம் என்பன பற்றி அவர் பல்வேறு பல்கலைக்கழகங்களின் மேலாளர்களுக்கு எடுத்துக் கூறினார். தமிழைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் சேர்க்கவேண்டும் என அவர் வேண்டுகை விடுத்தார். சமஸ்கிருதம் போன்ற உயர் நிலை தமிழுக்கு இல்லையென்று சில பல்கலைக்கழகங்கள் அவருடைய கோரிக்கையை நிராகரித்துவிட்டன. இருப்பினும் இங்கிலாந்து, ருசியா, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகள் தமது சில பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறையைத் தொடங்கின. ஆனால் இந்திய மொழிகள் என்ற தலைப்பின் கீழ் மாத்திரம் அவை கற்பித்தலைத் தொடங்கின. தமிழைத் தனியாக வளர்க்க அவர்கள் முன்வரவில்லை. இப்போது தமிழ் பற்றிய புதிய விழிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அறிவுசார் மானிடத் தின் பொது மூததை மொழி தொல் திராவிட மொழியாகத்தான் இருத்தல் வேண்டும் என்ற கருதுகோளின்படி தமிழார்வம் முகிழ்த்துள்ளது. எமது விடுதலைப்போரும் தமிழார்வத்திற்கு இன்னுமோர் காரணமாகலாம்.

சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் வேத நூலான மகாவம்சத்தின் முன்னணிக் கதாநாயகனாகத் துட்டகாமினி நிறுத்தப்பட்டுள்ளான். மகாநாம என்ற புத்தபிக்கு எழுதிய இன் நூலில் தமிழர்களின் படுகொலை நியாயப்படுத்தப்பட்டுள்ளது. இது இன முரண்பாட்டிற்கு அடித்தளம் அமைத்ததோடு ஒரு வரலாற்றுப் புரட்டையும் உருவாக்கியுள்ளது. பல நூற்றாண்டு களுக்கு முன் எழுதப்பட்ட மகாவம்சத்தின் சுவடிகள் நெடுங் காலமாகக் காணாமற் போயிருந்தன. 1826 ஜோர்ஜ் ரேனர் (GEORGE TURNER) என்ற பிரிட்டிஷ் நிர்வாக அதிகாரி அம்பாந்தோட்டைப் பகுதியில் உள்ள முல்க்கிரிகல புத்த விகாரையில் பாதுகாக்கப்பட்ட ஓலைச் சுவடிகளைக் கண்டு பிடித்தார். 200m உயரமான குன்றின் மேலுள்ள இந்த விகாரை சிறிலங்காவின் மிகப் பழமை வாய்ந்தவற்றில் ஒன்றாகும். பாளிமொழியில் இருந்த மகாவம்சத்தை மொழிபெயர்ப்புச் செய்த வில்கெல்ம் கைகர் (WILHELM GEIGER) அதுபற்றி பின்வருமாறு கூறுகின்றார். "இலங்கை வரலாற்றை ஆராயும் போது என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைவிட என்ன சொல்லப்படவில்லை என்பதை ஆராய்வதே மிகச் சிரமமான காரியமாக உள்ளது" இலங்கை வரலாறு பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வோர் இரு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக் கின்றனர். மகாவம்சம் போன்ற நூல்களில் இருக்கக்கூடிய உண்மைகளைப் பகுத்தறிவது. இந்த நூல்களில் மறைக்கப் பட்டவற்றை வெளிக்கொணர்வது. இந்த இரண்டையும் செய்வதில் ஆய்வாளர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் ஏராளம். அத்தோடு வரலாற்றுச் சான்றுகள் திட்டமிட்டு அழிக்கப்படு கின்றன. புதிய சான்றுகள் உருவாக்கப்படுகின்றன.

தான் போரில் கொன்ற எல்லாளனின் சமாதிக்கு அருகிலுள்ள பாதையில் செல்வோர் கால் நடையாகச் செல்ல வேண்டும் என்று துட்டகாமினி கட்டளையிட்டதாக மகாவம்சம் கூறுகின்றது. பிரிட்டிஷார் காலத்தில் சிவிகை போன்றவற்றில் செல்லும் பயணிகள்கூட இறங்கி நடந்து சென்றதாக ஆங்கிலேயர்களின் நூல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் 1948இற்குப் பின் எல்லாளனின் சமாதி இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. சமாதியை அடையாளமிடும் கற்கட்டிடம் அகற்றப்பட்டுள்ளது. எல்லாளன் சமாதி எங்கே என்று கேட்டால் அதைக் காட்ட முடிவதில்லை. தமிழ் - சிங்கள உறவுகளை இன்றுவரை தீமானிக்கும் எல்லாளன் - துட்டகாமினி போரானது மகாவம்சம் எழுதப்படுவதற்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பாக நடைபெற்றது. ஒரு ஆட்சியைப் பிடிக்கும் போரை இனப்போராக மாற்றியவர் பிக்கு மகாநாமதேரர். சமஸ்கிருத இதிகாச நூல்களின் பாணியில் இவர் காவியமுறையில் இப் போரைச் சித்தரித்துள்ளார். தனது காலத்துப் போர்முறைகளை முன்னைய காலத்திற்கு உரியதாக வடித்துள்ளமையானது வரலாற்றுச் சான்றாகமாட்டாது. சிறிலங்காவின் முதலாவது தொல்லியல் ஆணையாளராகப் பதவிவகித்த டாக்டர் செனரத் பறண விதானவும்(ARCHAEOLOGICAL COMMISSIONER, DR.SENERATH PARANAVITHNA) இதே தவறைச் செய்துள்ளார். அதாவது இப்போர் தமிழ் - சிங்கள இனப்போர் என்பது இவருடைய நிலைப்பாடு.

இலங்கையில் ஆங்கிலேயர் அல்லாத முதலாவது தொல்லியல் ஆணையர் பறணவிதான மகாநாம தேரருக்கு நிகரான பௌத்த - சிங்களப் பேரினவாதியாக இடம்பெறு கின்றார். அவர் வெளியிட்ட நச்சுக்கருத்துக்கள் சிங்கள வெறி யையும் தமிழர் விடுதலைத் தீவிரத்தையும் தூண்டுகின்றன. 1940 தொடக்கம் 1956 வரை அவர் இப்பதவியில் இருந்த காலத்தில் உடைந்த பௌத்த சின்னங்களைத் தமிழர்களின் பாரம்பரிய பூமியில் புதைத்துவைத்தார். சிறிது காலத்தின் பின் தானே அவற்றை வெளிக்கொணர்வதில் ஈடுபட்டார். இக் கயமையைத் தமிழர்கள் உணராது மாத்திரமல்ல அவருடைய கண்டுபிடிப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினர். தமிழர் பூமியில் நிலவிய மாபெரும் கடலோரச் சந்தையான மாந்தை அல்லது மாதோட்டம் என்று அழைக்கப்படும் பகுதியில் கிடைத்த தமிழர் களின் வர்த்தக மற்றும் அரசியல் சிறப்பை உணர்த்தும் எச்சங் களைப் பறணவிதான தனது பதவிக்காலத்தில் மறைத்துவிட்டார் என்று குற்றம் சுமத்தப்படுகிறது. 1956இல் இளைப்பாறிய பின் பறணவிதான பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்தார். ஒரு ஆதாரபூர்வமான இலங்கை வரலாறு எழுதும் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டது. அவர் மகாவம்சத் தகவல்களை வரலாறாக உறுதிப்படுத்துவதில் தீவிரமாக இறங்கினார். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் இலங்கை வரலாறு (UNIVERSITY OF CEYLON: HISTORY OF CEYLON) என்ற நூலின் ஆரியக் குடியேற்றங்கள், சிங்களவர்கள் (THE, ARYAN SETTLEMENTS: THE SINHALESE) என்ற அத்தியாயத்தில் மகாவம்சக் கூற்றை உறுதிசெய்துள்ளார்.

விஜயன் தலைமையில் இலங்கைக்கு வந்த ஆரியர் கள் இலங்கையின் மூத்த குடிகள் என்ற உண்மைக்குப் புறம் பான செய்தியை மகாவம்சம் கூறுகின்றது. விஜயன் என்ற ஒருவன் இருந்தானா, இங்கு வந்தானா என்பது வாதத்திற்கு உரிய விடயம். பறணவிதான இதுபற்றிக் கவலைப்படாமல் ஆரியக்குடியேற்றத்திற்கு இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தை வழங்கியுள்ளார். ஆரிக்குடியேற்றம் என்பது சிங்களவர் மனதில் மிக ஆழமாகப் பதிவதற்குப் பல்கலைக் கழகம் வெளியிட்ட வரலாற்று நூல் சான்றாகியுள்ளது. பறணவிதான அவ்வளவோடு நிறுத்தவில்லை. துட்ட காமினியின் வெற்றி (THE TRIUMPH OF DUTHAGAMANI) என்ற அத்தியாயத்தில் (UNIVERSITY OF CEYLON: HISTORY OF CEYLON. VOL.1.1.PP 144 - 163) அவர், தமிழர்கள் துட்ட காமினியின் படைகளால் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டதையும் தமிழர் ஆதிக்கம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதையும் விரிவாக விளக்கியுள்ளார். புறச்சான்றுகள் அற்ற சம்பவங்களுக்கு ஒரு பல் கலைக்கழகம் தனது அங்கீகாரத்தை வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதே சமயத்தில் கந்தரோடையில் சேர்.போல்பீரிஸ் (SIR. PAULE PIERIS) வெளிக்கொணர்ந்த பௌத்த சின்னங்களை தமிழ் பௌத்தத்தின் எச்சங்கள் என்று பறணவிதான ஏற்றுள்ளார். இதை மாத்திரம் சிங்களப் பௌத்த பேரின வாதிகள் ஏற்க மறுத்துள்ளனர். தனது இறுதிக் காலத்தில் பறணவிதான மனநோயால் பாதிக்கப் பட்டார். மனநோயின் பாதிப்பில் அவர் கந்தரோடை எச்சங்களைத் தமிழர்களுக்குரியவை என்று கூறிவிட்ட தாகப் பேரினவாதிகள் விளக்கம் தருகிறார்கள்.

அது எந்த நாடாகவோ இனமாகவோ இருக் கட்டும் "தற்கால அரசியலுடன் கடந்த கால வரலாறு பிரிக்க முடியாமல் பிணைக்கப்பட்டுள்ளது" என்ற கோட்பாடு அரசறிவியல் விஞ்ஞானிகளால் ஏற்கப்படு கிறது. இதை அவர்கள், HISTORY IS INEXTRICABLY BOUND WITH CONTEMPORARY POLITICS) என்று அறுதியிட்டுள்ளனர். எமது தேசிய எழுச்சி கூர்மை அடைந்துள்ள இக்காலகட்டத்தில் நாம் வரலாற்றுச் சான்றுகளின் சேகரிப்புக்களிலும் சேமிப்பி லும் அவை பற்றிய குறிப்புக்கள் கால அளவீடுகள் செய்வதிலும் தீவிர கவனம் செலுத்தவேண்டும். இது ஓரளவு நடைமுறையில் உள்ளது பற்றி அவதானிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. வரலாறு இல்லாத இனம் என்ற மனிதகுலம் கிடையாது. முயற்சி செய்யாத மனிதகுலம் தான் உண்டு. ஆணைக்கோட்டை ஆய்வு களை மேற்கொண்ட பேராசிரியர் ரகுபதி, பூநகரி ஆய்வுகள் மேற்கொண்ட பேராசிரியர் பரமு புஸ்பரத் தினம் ஆகியோர் போற்றுதற்குரியவர்கள். அக்கராயன் ஆய்வுகள் மேற்கொள்ளும் திரு.குணரத்தினத்தையும் நாம் விதந்து பாராட்டுகின்றோம். நாம் தன்னாட்சி பெற்றதும் செய்யவேண்டிய முதற்பணி வரலாற்றுச் சான்றாதாரத் தேடலும், அவை பற்றிய ஆதாரபூர்வமான எழுத்துக்களுமாகும். வரலாறு தேசியத்தை உரமூட்டுவதோடு எழுச்சியுறச் செய்கிறது.

தேசியம் என்பது 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிரமாண்டமான மக்கள் சக்தி. தேசியம் என்பது மக்களின் மண், மொழி, இனம், தேசிய கட்டமைப்புக்கள், பழக்கவழக்கங்கள், உணவுப் பாரம்பரியங்கள், கலைகள், இலக்கியம் போன்ற இன்னோரன்ன துறைகள் மீதான பற்றும், பாசமும், வாஞ்சையு மாக இடம்பெறுகிறது. இவற்றை அழியாது காத்த இனம் காலத்தைவென்று நிற்கிறது. கி.பி70 - கி.பி 1948 வரை தமக் கென நாடில்லாமல் உலகெலாம் அலைந்த யூத இனம் மேற் கூறியவற்றைப் பாதுகாத்தபடியால் இன்றும் யூத இனமாக வாழ் கின்றது. கோஷர் (KOSHER) என்ற யூத உணவுக் கட்டுப் பாட்டை மிகவும் இறுக்கமாக அவர்கள் கடைப்பிடித்தார்கள். என்னுடையதென்று பெருமிதத்தோடு கூறுவதற்குச் சொந்த மண் இல்லாத காலத்திலும் அவர்கள் இந்த அம்சத்தில் கவனமாக இருந்தார்கள். யூதர்கள் கல்விக்கும் நிதி முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கும் வர்த்தகத்திற்கும் கொடுத்த முன்னுரிமை அளப்பரியது. இஸ்ரேல் நாடு பிரகடனப்படுத்தப்பட முன்பே பாரன்றோத் ஷீல்ற் (VARON ROTHSCHILD) போன்ற யூதர்கள் வழங்கிய நிதியுதவியில் கொள்வனவு செய்த பாலஸ்தீன மண் ணில் யூதர்கள் குடியேறத் தொடங்கிவிட்டார்கள் றோத்ஷீல்ற் குடும்பம் ஜேர்மனியில் கிட்டத்தட்ட அடிமை வாழ்வு நடத்திய யூதர்கள். இவர்கள் சில்லறை வியாபாரத்தில் ஆரம்பித்து அரசு களுக்கும் அரசர்களுக்கும் கடன்வழங்கும் தனியார் வைப்பகச் சொந்தக்காரர்களாக வளர்ச்சியடைந்தனர். இக்குடும்பத்தின் வைப்பகக் கிளைகள் ஜேர்மனியைவிட இங்கிலாந்து, ➪

➪ பிரான்ஸ், அவுஸ்திரேலியா போன்றவற்றில் காணப்படுகின்றன. கல்வியும் நிதிமுகாமைத்துவமும் யூதர்களுக்கு இரு கண்கள் போன்றுள்ளன. இவை யூதர்களின் தேசிய அடையாளங்கள்.

பாலஸ்தீனத்தில் சிறிய குடியேற்றங்களைத் தனியார் நிதியுதவியுடன் ஆரம்பித்த யூதர்கள் வேகமாகக் கல்வி நிலையங்களை ஆரம்பித்தனர். 1925இல் உலகப் பிரசித்தமான ஈபுரு பல்கலைக்கழகத்தை (HEBREW UNIVERSITY) பேராசிரியர் ஜுடோ மைக்கனஸ் (1827 - 1948) தலைமையில் ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் அதன் விவசாய ஆராய்ச்சிப் பிரிவு பாலைநிலத்தைப் பசுமையாக்கும் திட்டத்தை நடாத்தியது. பின்பு மொழியியல், தொல்லியல், வரலாற்றியல் ஆகியவற்றில் அது ஆராய்ச்சிகளைத் தொடங்கியது. அமெரிக்காவில் யூதப் பெண்கள் ஆரம்பித்த ஹடசா மருத்துவ நிலையத்தோடு ஈபுரு பல்கலைக்கழகம் இணைப்பை மேற்கொண்டது. HADASSA மெடிக்கல் நிலையம் உலகின் தலைசிறந்த ஆராய்ச்சிப் பிரிவைக் கொண்டுள்ளது. யூத தேசியத்தோடு தொடர்புடைய இன்னுமோர் சொல்லான டயஸ் போறா (DIASPORA) ஒரு கிரேக்கமொழிச் சொல். நாலாபக்கமும் விசிறப்பட்ட விதை தானியம் என்பது இதன் நேரடிப்பொருள். ஆனால் நாளடைவில் சிதறுண்டு நாடு நாடாக அலையும் மக்கள் கூட்டத்தைக் குறிக்கும் சொல்லாக மாறிவிட்டது. ஸ்ற்றாபோ (STRABO BC 64 - AD 19) என்ற கிரேக்க வரலாற்றாசிரியர் யூதர்கள் இல்லாத நாடே கிடையாது என்று எழுதியுள்ளார். இன்றைய டயஸ் போறாக்களுக்கும் ஆரம்பகால யூத டயஸ்போறாக்களுக்கும் இடையில் நிறைய வித்தியாசம் இருக்கின்றது. அன்று தொலைத்தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவு. இதனால் வாழும் இடைச்சூழலோடு கரைந்துபோகும் ஆபத்து நிறையவுண்டு. யூதர்களுக்குத் தாயகம் (HOME-LAND) இருக்கவில்லை. அப்படியிருந்தும் அவர்கள் கரைந்து போகாமல் இருந்ததற்கு அவர்களுடைய தேசியப் பற்று காரணமாக அமைந்தது என்கிறார் பேராசிரியர் சொலைமன் கிறேய்செல் (A HISTORY OF THE JEWS: PROF SOLOMON GRAYZEL: THE JEWISH PUBLICATION SOCIETY OF AND ERICA 1968).





இப்போது ஈரான் நாட்டிற்கு நெருக்கடி மிகுந்த காலம். அணு உலைகளை மூடிவிடும்படி மேற்கு நாடுகள் அதை நிர்ப்பந்திக்கின்றன. அணு உலைகளை மின்சாரத் தேவைக்கு இயக்கும் சாட்டில் அது அணுகுண்டைத் தயாரித்துவிடக்கூடும் என்ற அச்சம் மேற்கு நாடுகளுக்கு உண்டு. இந்தியாவும் பாகிஸ்தானும் திருட்டுத்தனமாக அணுவாயுதம் தயாரித்துள்ளன. அவை அமெரிக்காவின் நட்புநாடுகள். அதனால் பரவாயில்லை. ஐ.நா பாதுகாப்புச் சபை ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க உத்தேசித்துள்ளது. ஐ.நாவின் அனுமதியின்றி ஈராக் மீது நடத்தப்பட்ட தாக்குதல் போல ஈரான் மீதும் தாக்குதல் நடத்தப்படலாம் என்று அஞ்சப்படுகின்றது. இறைமை, தேசியம், வரலாற்றுச் சிறப்புப் போன்ற எண்ணங்கள் ஈரான் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது. தமது நெடிய வரலாற்றுப் பாரம்பரியத்தை அவர்கள் மீட்டுப்பார்க்கத் தொடங்கியுள்ளனர். 2500 வருடங்களுக்கு முன் பாரசீக சாம்ராசியம் (ஈரானின் பழைய பெயர் பாரசீகம்) இன்றைய லிபியாவில் இருந்து சீனா வரை நீண்டிருந்தது. துருக்கியும் வடக்கு இந்தியாவும் அதில் அடங்கும் கி.பி. 11ஆம் நூற்றாண்டுக்குப் பின் பாரசீகம் மீண்டும் வலுப்பெற்றது. சாம்ராச்சிய விரிவு ஆரம்பித்தது. துருக்கியிலிருந்து இன்றைய வங்காளதேசம் வரையும் மத்திய ஆசியா உள்ளடங்கலாகப் பாரசீக சாம்ராய்ச்சியம் பரந்துகிடந்தது. இது வரலாறு. ஆனால் நவீன ஈரானுக்கு தனது பழைய வரலாறு மிகவும் முக்கியம். ஈரானின் பாரம்பரியம், கலாசாரம் கிறிஸ்தவ மதத்திற்கு அது வழங்கிய அடிப்படைக் கோட்பாடுகள் என்பன பற்றிய மதிப்பீடுகள் இப்போது செய்யப்படுகின்றன. வரலாறு வேராகவும் அதன் வளர்ச்சிப்போக்கு விருட்சமாகவும் பார்க்கப்படுவது வழமை. சுவர்க்கம், நரகம் (HEAVEN. HELL) என்ற கிறிஸ்தவ வெளிப்பாடுகள் புராதன ஈரானில் தோன்றியவை. யூத மதத்திற்கு முக்கியமான புனித தல்மூட் (HOLY PALMUD) நூலில் ஈரானிய மொழிச் சொற்களும் கருத்துக்களும் காணப்படுகின்றன. வரலாறு ஏட்டுச்சுரக்காய் அல்ல, அது வாழும், வாழவைக்கும் ரகம்.

தேசிய எழுச்சிக்கு வரலாற்று நினைவுகள் (HISTORICAL MEMORIES) முக்கிய காரணமாக அமைகிறது. தமது இனவரலாற்றின் உன்னதமான பகுதிகளை நினைவு கூறுவதும் அதுபற்றிப் பேசுவதும் எழுதுவதும் மனித இயல்பு. இதனால் தேசிய உணர்வு பலம்பெறுகின்றது. 21ஆம் நூற்றாண்டில் இஸ்லாம் - கிறிஸ்தவ மதங்களுக்கு இடையிலான முறுகல் மோசமடையலாம் என்று எதிர்வு கூறப்படுகின்றது. இஸ்லாம் மதத்தினருக்கு ஒரு அதி உன்னதமான காலம் இருந்தது. பின்பு அவர்கள் வீழ்ச்சி கண்டதோடு கிறிஸ்தவ மேற்கின் கட்டுப்பாட்டிலும் வந்து விட்டார்கள். இப்போதைய தலைமுறையினர் கொதிப்படைந்து மேற்கின் மேல் போர் தொடுப்பதற்குக் காரணம் இஸ்லாமின் வரலாற்றில் இருக்கிறது. நபிகள் நாயகம் முகமது (கி.பி 570 - 632) தோற்றுவித்த இஸ்லாம் மதத்தினர் உலக மக்கள் தொகையில் 1/7 பங்கினராக இடம்பெறுகின்றனர். இஸ்லாம் ஒரு மதம் மாத்திரமல்ல. ஒரு வாழ்க்கை முறையும் ஆகும். கி.பி 8ஆம் நூற்றாண்டில் இஸ்லாம் வட ஆபிரிக்கா உள்ளடங்கலாக இஸ்பெயின் நாடு வரையும், இந்துமாகடல் பிராந்தியம் ஊடாக பிலிப்பைன்சின் மின்டானோத் தீவு வரையும் பரவியது. 17 - 18ஆம் நூற்றாண்டுகளில் வீழ்ச்சி ஆரம்பித்தது. இஸ்லாமிய நாடுகளை மேற்குலகம் தமக்குள் பங்குபோட்டுக்கொண்டது. இஸ்லாமியத் தீவிரவாதம் வளர்ச்சி காண்பதற்கு இவ் வரலாற்று நினைவுகள் போதுமானதாக உள்ளன. மருத்துவம், வானியல், கணிதம், வேதியல், வரலாற்றியல் போன்றவற்றை ஐரோப்பாவிற்கு அன்றைய இஸ்லாம் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

விஜயனின் வருகைக்கு முன் இலங்கையில் நாகரீக வளர்ச்சி அடைந்த மக்கள் இருக்கவில்லை என்றும், தமிழர்கள் காலம் பிந்திவந்த வந்தேறு குடிகள் என்றும் சிங்களவர்கள் நம்புகின்றனர். தமிழ் சிங்கள முரண்பாடுகளுக்கு இதுதான் அடிப்படைக் காரணம். புத்தபகவான் சிங்கள - பௌத்தர்களுக்கு இத்தீவை வழங்கிவிட்டார் என்ற நம்பிக்கையும் முரண்பாட்டை வளர்க்க உதவுகின்றது. சிங்கள - தமிழ் இனங்கள் ஒன்றிணைந்து ஒற்றுமையாக வாழ்ந்த வரலாறு இந்த நாட்டில் கிடையாது. தற்கால அரசியலில் இரு பகுதியும் பிரச்சினைகளைப் பேசி தீர்ப்பதுவும் .இயலாமல் இருப்பதற்குத் தகுந்த காரணமும் உண்டு. தமிழர்களுக்கு அர்த்தமுள்ள அரசியல் உரிமைகளை வழங்கக்கூடாது என்பதில் சிங்களத் தலைமை மிகவும் உறுதியாக இருக்கின்றது. "சிங்கள - தமிழ் உறவுப் பாதையில் ஒப்பந்தங்கள், உறுதிமொழிகள், பேச்சு முடிவுகள் ஆகியவற்றின் உடைவுகள் சிந்திக்கிடக்கின்றன" என்று ஒரு பிரபல ஆய்வாளர் எழுதியுள்ளார். செங்கையாழியனின் கிழக்கும் மேற்கும் என்ற சிறுகதையில் தமிழனைத் திருமணம் செய்த ஜேர்மன் பெண்ணும் 6 வருடத்தின் பின் தாயகம் வரும் கனடாத் தமிழ் இளைஞனும் யாழ் செல்வதற்காகக் கிளாலிக் கடலோரத்தில் நிற்கிறார்கள். தனது கணவனின் பெற்றோரைப் பார்க்கச் செல்லும் அந்தப் பெண் அந்த இளைஞனோடு உரையாடும் போது நாங்கள் எங்கள் சுதந்திரத்தைப் போராடித்தான் பெற்றோம். அநியாயமாக ஜேர்மனியைப் பிரித்தவர்கள் ஆதிக்கத்தைக் கலைத்து இன்று ஒன்றுபட்டிருக்கிறோம்" என்றாள். அவன், "நீங்கள் ஒன்றுபட்டிருக்கிறீர்கள், நாங்கள் பிரிகிறதென நிற்கிறோம்" என்று சொன்னான். அதற்கு அப்பெண் சொன்ன பதில், "நீங்கள் எப்போது ஒன்றாக இருந்தீர்கள் பிரிவதற்கு?" (இரவுநேரப் பயணிகள்: சிறுகதை நூல்: வெளியீடு: 1995.)

**தொடர்ச்சியாக எழுதப்பட்ட வரலாறு ஈழத்தமிழர்களுக்கு இல்லாமை தேசிய உணர்வை ஓரளவுக்குப் பாதிக்கின்றது. தமிழ்மொழி பழமை மிக்கதாகவும், தனி மரபுகொண்டதாகவும், தானே முகிழ்த்ததாகவும், மற்றைய மொழிகளிலிருந்து கிளைக்காததாகவும், தன்னகத்தே பெருவளமிக்க தொன்மையான இலக்கியமுள்ளதாகவும் இருப்பதால் எமது தேசியமும் தமிழுணர்வும் குன்றாதிருக்கின்றன.**

ஈழத்தமிழர்களின் தேசிய அரசியல் 1921இல் தொடங்கியது. இலங்கையர் என்ற அடையாளத்தை முதன்மைப் படுத்திய பொன் அருணாசலத்தைச் சிங்களத் தலைவர்கள் ஏமாற்றினார்கள். தமிழர்கள் ஏமாற்றப்பட்டது இதுதான் முதற் தடவை. அருணாசலத்தின் தேசியம் உயிர்த்தெழுந்ததற்குக் கொடுத்த வாக்குறுதியை சிங்களத் தலைமை மீறியதே காரணம். அருணாசலம் தமிழர்களுக்கு ஒரு நாடு வேண்டும் என்ற முடிவிற்குப் புற அழுத்தம் இன்றி வந்திருந்தால் ஆரோக்கியமாக இருந்திருக்கும். அருணாசலத்திற்குப் பிந்திய தமிழ் தலைவர்கள் ஒரு பாடம் கற்றுக்கொண்டதாக வரலாறு இல்லை. ஈழத்தமிழர் வரலாற்றில் மிகவும் கேவலமான பகுதியாக இதைக்கொள்ளலாம். அருணாசலத்தின் மகன் மகாதேவா கூட விதிவிலக்காக அமையவில்லை. சிங்களவர்கள் உடனான உறவுகளை அருணாசலம் வெட்டிக்கொண்ட பின்பும் மகாதேவா சிங்கள அரசியல் தலைமைகளோடு நெருக்க உறவைப் பேணினார். இன்றைய தலைமுறை ஒட்டுண்ணிகள் எம் மாத்திரம்.

இருமொழிக்கொள்கையை மிகவும் நேர்மையாகவும் நேர்த்தியாகவும் நிர்வாகம் செய்யும் உலகின் ஒரேயொரு நாடு என்ற சிறப்பு கனடாவிற்கு உண்டு. ஆங்கிலம், பிரஞ்சு மொழி பேசும் கனடாப் பிரஜைகளின் உரிமைகளைக் குறைவின்றிப் பேணும் நாடான கனடாவையும் தமிழுக்குமுரிய அந்தஸ்து வழங்குவதாகக் கூறும் சிறிலங்காவையும் எவ்விதத்திலும் ஒப்பிட்டுப் பார்க்கவியலாது. ஆனால் அண்மைக் காலமாக கற்கை நோக்கில் ஒப்புநோக்கு ஆய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன. ருசியாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது மிகப்பெரிய தரைப்பரப்பைக்கொண்ட கனடா சமஷ்டி அரசு முறையை நடைமுறைப்படுத்துகின்றது. 10 மாகாணங்களும் 2 பிரதேசங்களும் (TERRITORIES) கொண்ட கனடாவில் குவெபெக் மாகாணம் மொழி, இன, மத வேறுபாடுகளைக் கொண்டதாக இடம்பெறுகின்றது. குவெபெக் மாகாண மக்கள் கூடுதலாக பிரெஞ்சுமொழி பேசும் கத்தோலிக்க மதத்தினராகவும் பண்பாட்டு அடிப்படையில் வேறுபட்டவர்களாகவும் அமைந்துள்ளனர். தனிநாடாகப் பிரிந்துசெல்லவேண்டும் என்ற வலுவான இயக்கம் குவெபெக் மாகாணத்தில் உண்டு. அமைதி முறையில் சனநாயக அடிப்டையில் பிரிந்துசெல்லும் கோரிக்கையை முன்னெடுக்க வேண்டும் என்பதில் இறைமைக்கான குவெபெக் அரசியல் கட்சிகள் உறுதியாக இருக்கின்றன. கனேடிய அரசியலில் வன்முறைக்கு இடமில்லை.

ஆனால் 1960இன் பிற்பகுதியில் பிரிவினைக்கான வன்முறைகளும் பயங்கரவாதச் சம்பவங்களும் நடைபெற்றன என்பதை மறுக்கமுடியாது. அவை முடிவிற்கு வந்தபின் அரசியல் வன்முறைகள் தோன்றவில்லை. கனடா அரசு 1960களின் வன்முறைகளைப் பாரபட்சமின்றி நசுக்கியது. இதற்குப் பிரெஞ்சுமொழி பேசும் மக்கள் பலரின் ஆதரவு இருந்தது. 90வீதமான பிரெஞ்சுமொழி பேசுவோர் அரசியல் வன்முறையையும் பயங்கரவாதச் செயற்பாடுகளையும் தீவிரமாக வெறுக்கின்றனர். சனநாயக வழிமுறை என்பது வேறு விடயம். குவெபெக்கில் 1960களில் தோன்றிய பயங்கரவாதத்தை நசுக்குவதற்குப் போருக்கான நடவடிக்கைச் சட்டத்தை (MEASURES ACT) கனேடியப் பிரதமர் பியர் ற்ரூடு (PIERRE TRUDEAU) பிரகடனப்படுத்தியதோடு இராணுவத்தைக் குவெபெக் மாகாணத்திற்கு அனுப்பினார். ஒக்டோபர் நெருக்கடி 1970) (OCTOBER CRISIS 1970) என்றழைக்கப்படும் குவெபெக் வன்முறைகள் இவ்வாறு முடிவிற்குக் கொண்டு வரப்பட்டன. இதில் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியது என்னவென்றால் பிரதமர் ற்ரூடு குவெபெக் தலைநகர் மொன்றியலில் பிறந்த பிரெஞ்சுமொழி பேசுபவர். அவர் இரு மொழி வல்லுனர். கனடா பிரியக்கூடாது என்பதில் தீவிரமாக இருந்தவர். அவருடைய தந்தையொரு பிரெஞ்சுக்காரர். தாய் ஒரு கனேடிய ஐரிஸ் பெண்மணி. ஒக்டோபர் நெருக்கடியின்போது குவெபெக்கின் முதல்வராக றொபெட் பூராசா (ROBERT BOURASSA) பதவி வகித்தார். இவர் ற்ரூடு வன்முறைகளுக்கு எதிராக எடுத்த இராணுவ நடவடிக்கைகளுக்குப் பூரண ஆதரவு வழங்கினார்.





**கலாநிதி க. சோமாஸ்கந்தன்**

சிறிலங்கா வன்முறைகளையும் கனடாவின் ஒக்டோபர் நெருக்கடிகளையும் ஒப்பிடும்போது கவனிக்க வேண்டிய இன்னுமோர் முக்கிய விடயம் இருக்கின்றது. ஒக்டோபர் நெருக்கடியின்போது குவெபெக் தவிர்ந்த பிற மாகாணங்களில் வாழ்ந்த பிரெஞ்சுமொழி பேசுபவர்கள் எந்தவொரு குறையையும் அனுபவிக்கவில்லை. சிறிலங்காவில் தமிழனென்றால் பயங்கரவாதி என்று அர்த்தம். கனடாவில் சட்டத்தின் ஆட்சி சரிவர நடக்கிறது. பிரெஞ்சுமொழி பேசும் குவெபெக் மாகாணத்தவர்கள் அரசியலிலும் நீதித்துறைகளிலும் அதியுயர் பதவிவகிக்கின்றனர். அனைத்துக் கனடாவின் பிரதமராகவும் பியர் ற்ரூடு மாத்திரமல்ல, குவெபெக் மாகாணத்தவரான பிரெஞ்சுக்காரர் ஜீன்ஸ் செனற்றியனும் (JEAN CHRETIEN) 1990இன் பிற்பகுதியில் பதவி வகித்துள்ளார். ஒக்டோபர் நெருக்கடியின்போது கனேடிய இராணுவம் வன்முறைக் குழுக்களுக்கு எதிராக மாத்திரம் போரிட்டது. பொதுமக்களுக்கும் அவர்களுடைய சொத்துக்களுக்கும் தீங்கு ஏற்படவில்லை. சிறிலங்காவில் முழுக்க முழுக்கச் சிங்களவர்களைக்கொண்ட இனவாத இராணுவம் ஒட்டுமொத்த ஈழத் தமிழனத்திற்கும் எதிராகப் போரிடுகின்றது. இங்கு நடப்பது இனப்போர். நாம் அடக்குமுறைக்கு எதிரான விடுதலைப் போரை நடத்துகின்துகிறோம். தமிழ் தாயகத்தைப் பொருளாதார ரீதியாக அழிப்பதில் சிங்கள அரசு ஈடுபடுகின்றது. ஆனால் குவெபெக் மாகாணத்தின் வளர்ச்சியில் கனடா அரசு தீவிர அக்கறை காட்டுகின்றது.

கனடாவில் பிரிவினை ஒரு அரசியல் பொழுதுபோக்கு என்றால் எமக்கு அது வாழ்வா சாவா என்ற ஒரு தேசியப் போராட்டம். ●

இரவின் இருள் சூழ்ந்த நேரம். இராணுவத்தின் காப்பரணில் வெளிச்சம் தெரிகின்றது. அணி நகர்ந்துகொண்டிருந்தது. அந்த அணிக்குள் தேவன் மட்டுமல்ல அவனது ஒன்றரை வயது நிரம்பிய குழந்தை, அவனது மனைவியென அவனது குடும்பமே நகர்ந்துகொண்டிருந்தது. வவுனியா இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்திலிருந்து இராணுவக் காவலரணை ஊடறுத்து வன்னி நோக்கி இரகசியமாக அவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். இராணுவத்தின் காப்பரண் வரிசையைக் கடக்கும்போது சத்தமில்லாமல் கடக்கவேண்டும் அப்போது ஏதும் அறியாக் குழந்தை சத்தமிட்டால் நிலைமை விபரீதமாகிவிடும். அதனால் ஏற்கனவே குழந்தையை ஆழ்ந்து உறங்கச் செய்திருந்தார்கள். ஆனாலும் இராணுவ வேலியைக் கடக்கவிருந்த வேளையில் வெளிச்சத்தைக் கண்டவுடன் குழந்தை விழித்துக்கொள்கிறது. குழந்தை சத்தமிட எத்தனிக்கின்றது. குழந்தையின் வாயைப் பொத்தினார்கள். ஒருவாறு காப்பரணைக் கடந்துவிடுகின்றார்கள்.


தேவனின் போராட்ட வாழ்வு இப்படித்தான் கழிந்தது. தேவன் இந்தப் போராட்டத்திற்காக எத்தனை அர்ப்பணிப்புணர்வுடன் செயற்பட்டான் என்பதற்கு இதுவொரு உதாரணம் மட்டுமே. அவனது வாழ்வில் தனித்து ஒருவனாய் அல்லாமல் போராளி அல்லாத தனது மனைவியுடனும் குழந்தையுடனும் அவன் சாதித்த சாதனைகள் நிறையவே இருக்கின்றன. தேவனின் போராட்ட வாழ்வு சண்டையில்தான் தொடங்குகின்றது. சண்டையில்தான் நகர்கின்றது. சண்டையில்தான் முடிகின்றது.

1988இல் தன்னைக் களவாழ்வுக்குள் இணைத்துக்கொண்ட நாள்முதல் வீரச்சாவடையும் வரை தேவன் அதிகம் சந்தித்தது சண்டைகளைத்தான். அவனது கன்னிச்சமர் இந்திய இராணுவத்தோடுதான். அந்தப் பட்டறிவோடுதான் வவுனியாக் கோட்டத் தாக்குதல் அணிக்குள் ஒருவனாய் தேவன் செயற்பட்டான். இந்தக் காலப்பகுதியில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் அணிகள் கோட்ட ரீதியாக பிரிக்கப்பட்டிருந்தன. 1991ஆம் ஆண்டு தேசவிரோதிகள் மீது தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிடப்படுகின்றது. அந்த அணியில் தேவனும் தெரிவுசெய்யப்பட்டிருந்தான். தாக்குதல் நடைபெறவிருந்த இடம் எமக்குப் பாதுகாப்பற்றதும் யாரும் அந்தப் பகுதிக்குப் பெரிய அளவில் செல்ல முடியாததுமான இடமாகும். ஆனால் தாக்குதலை நடாத்தியே ஆகவேண்டும். விடுதலைப்புலிகளின் அணி நகர்ந்துசெல்கிறது. சண்டை தொடங்குகிறது. தேசவிரோதிகளின் முகாம் தகர்க்கப்படுகிறது. வெற்றியோடு அணி தளம் திரும்பியது.

இந்தச் சண்டையில் தேவன் இதுவரை பெற்றிருந்த கள அனுபவத்தை நன்கு பயன்படுத்தினான். அதில் திறமையாகச் செயற்பட்டான். தேவன் ஒரு சண்டைக்காரனாக அறிமுகமாகினான். அவனது சண்டைத்திறனும் அவனது ஆளுமைத்திறனும் அவனை வவுனியாக்கோட்டச் சிறப்புப் பொறுப்பாளர் ஆக்கியது.

தேவனின் சிந்தனைகள் எப்போதும் சண்டைகளைப் பற்றியே இருக்கும். போராளிகளுடன் எப்போதும் அதைப்பற்றியே கதைத்துக்கொண்டிருப்பான். அப்போது பெரிய அளவில் தாக்குதல் மேற்கொள்வதைவிட சிறு சிறுதாக்குதல்களே மேற்கொள்ளப்பட்ட காலம். இராணுவக் காவலரண்கள் முகாம்கள் அமைந்திருக்கும் இடங்களை வேவு பார்ப்பது, பார்க்கப்பட்ட வேவுத் தகவல்களின் படி தாக்குதல்களை மேற்கொள்வதுதான் தேவனின் பணியும் பொழுதுபோக்கும். எப்படியாவது கிழமைக்கு ஒரு தாக்குதலாவது மேற்கொள்ளவேண்டுமென ஏராளமான பொழுதுகளை அதற்கே செலவுசெய்தான்.

தேவனின் சமராற்றலை வெளிப்படுத்திய மற்றொரு தாக்குதல் இது.




பிறப்பு: 25.12.1971

வீரச்சாவு: 29.03.2007

# சண்டைக்காரன்

**லெப்டினன் கேணல் தேவன்**

**இராசையா கண்ணன்**

**சொந்த முகவரி: நேரியகுளம், வவுனியா**

**தற்போதைய முகவரி: இல: 41, கட்சன் வீதி வட்டக்கச்சி**

1992ஆம் ஆண்டு காலப்பகுதியில் வவுனியா பிரப்பமரப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் கவசவாகனங்கள் சகிதம் முன்னேற்ற நகர்வொன்றை மேற்கொண்டது. உடனடியாகவே முன்னேறிவரும் இராணுவத்தை வழிமறித்து அடித்து விரட்டுவதற்குத் தேவன் தலைமையிலான அணி களம் விரைகின்றது. சண்டை தொடங்குகின்றது. சிங்களப் படைகள் தங்கள் கவசவாகனங்களிலிருந்து தானியங்கித் துப்பாக்கிகளால் தாக்கினார்கள். தேவன் தனது அணியைச் சாதுரியமாய் நகர்த்தினான். சிங்களப்படைகளைச் சுற்றி வளைக்கின்றான். சிங்களப் படை திகைப்படைந்து பவள் கவசவாகனம் ஒன்றைக் கைவிட்டுவிட்டு ஓட்டம் எடுத்தது. தேவனின் திறமையான வழிநடத்தல் சண்டையை வெற்றியாக்கியது. பவள் கவசவாகனத்தில் இருந்த L3 ஆயுதம் கழற்றியெடுக்கப்பட்டது. வன்னிமாவட்டத்தில் முதல் முதல் L3 ஆயுதத்தைக் கைப்பற்றியது தேவன்தான். அன்றைய நாளில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாய் பதிவாகியது. சண்டை நடந்த இடத்திலிருந்து பவள் கவசவாகனத்தைக் கொண்டுவர முடியாதிருந்ததால் அது தகர்க்கப்பட்டது.

இப்படியாகத் தேவன் சென்ற சண்டைகள் எல்லாம் வெற்றியாய்த் தான் முடிந்தன. ஏனெனில் அதற்காய் அணுவணுவாய் உழைத்தான். வேவு பார்ப்பதிலிருந்து தாக்குதல் நடாத்தும் வரை எல்லாவற்றிற்கும் அவன் நிற்பான். எதையுமே தான் நேரில் நின்று உறுதிப்படுத்தினால் தான் அவனிற்கு நிறைவு வரும். அன்றைய நாட்களில் இப்போது போன்று முழுமையான கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் என்று இருந்தது குறைவு. இராணுவம் எமது பகுதிக்குள் ஊடுருவி வருவான். அந்தச் செய்தி அறிந்து உடனேயே அணிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு களம் விரையும். சிங்களப் படைகள் அடிவாங்கியபடி பின்வாங்கிவிடும். அதேபோல் எங்களது அணிகளும் நீண்டதூரம் கால்நடையாகச் சென்று தாக்குதல் நடாத்தி எதிரிக்குச் சேதத்தை விளைவித்துவிட்டு தளம் திரும்புவர். இந்த நீண்டதூரப் பயணங்களில் எல்லாம் தேவன் முன்னணியில் செல்வான். சண்டைகளில் அதிகம் சாதிப்பான்.

இந்தச் சண்டைக்காரன் சுயவிருப்பின் பெயரில் சிறிதுகாலம் இயக்கத்திலிருந்து விலகியிருந்தான். 1997ஆம் ஆண்டு தேவனுக்கு திருமணம் நடக்கிறது. சுசித்திரா என்ற பெண்ணை அவன் தனது துணைவியாக்கிக்கொண்டான். இந்த நாட்களில் வவுனியாவில் இரணைஇலுப்பைக்குளத்தில்தான் தேவன் குடும்பம் வசித்துவந்தது. 1999ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்கள இராணுவம் இந்தப் பகுதிகளில் முன்னகர்வுகளை மேற்கொண்டு எமது நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களில் வாழ்ந்த மக்களுக்கு நெருக்கடிகள் அதிகரித்தன. இராணுவத்தால் இனங்காணப்படுவோர் தினமும் இராணுவ முகாமிற்கு வந்து கையெழுத்திடுமாறு மிரட்டப்பட்டனர்.

இந்த மிரட்டல்கள் தேவனுக்கு கடும் சினத்தையும் அதேவேளை இராணுவத்தின் மீது நகைப்பையும் ஏற்படுத்தியது. எத்தனை களங்களுள் இராணுவத்தினரைச் சின்னாபின்னமாக்கி, சடலங்கள் ஆக்கிய அந்தச் சண்டைக்காரனுக்கு இந்த மிரட்டல்கள் எம்மாத்திரம்?. கையில் ஆயுதம் இல்லாமல் அவன் வீட்டில் இருந்தாலும் எத்தனை களங்களைக் கண்டு எத்தனை போராளிகளோடு உறவாடி அந்த நினைவுகளை மனசுக்குள் சுமந்த அவன் முடிவெடுக்கின்றான். எந்த நிலைவரினும் இராணுவத்திடம் மண்டியிடுவதில்லையென்று. அன்றிலிருந்து தேவனின் தலைமறைவு வாழ்க்கை ஆரம்பிக்கின்றது.

அப்போது அவனிற்கும் இயக்கத்திற்கும் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. அவன் தலைமறைவாகினாலும் அவனிடம் தற்பாதுகாப்பிற்கு ஆயுதமும் இருக்கவில்லை. ஆரம்பத்தில் அவன் வைத்திருந்தது கத்தியொன்றைத்தான். போராளிகளுடன் தொடர்பை மேற்கொள்ள அவன் முயற்சித்தபோதும் தொடர்புகள் கிடைக்கவில்லை. தேவன் ஆயுதம் ஒன்று கிடைக்குமா என்று தேடிக்கொண்டிருந்தான். அவனது முயற்சிக்கு ஒரு 'சொட்கண்' கிடைத்தது. அதை வைத்துக்கொண்டு இராணுவத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டு ஆயுதம் ஒன்றைக் கைப்பற்ற அவன் முயற்சித்துக் கொண்டிருந்த போது போராளிகளின் தொடர்பு அவனுக்குக் கிடைத்தது.

தேவன் தலைமறைவானதுமே சிங்களப் படையினர் அவனைத் தேடினார் கள். தேவனின் வீட்டிற்குச் சென்று அவனது மனைவியை மிரட்டி னார்கள். இராணுவத்தின் தொல்லை அதிகரித்ததால் அவளும் அவளது குழந்தையும் தேவனுடன் சேர்ந்து தலைமறைவா கினார்கள். ஒரு குழந்தை யுடன் தலைமறைவு வாழ்க்கை என்பது எத்தனை கடினமானது. ஒவ்வொரு இரவுகளும் அவர்களுக்கு நெருக்கடியைக் கொடுத்தன. ஆனால் அந்த நெருக்கடி களுக்குள்ளாலும் தேவனின் திட்டங் களிற்கு அவள் ஒத்துழைப்புக் கொடுத்தாள்.

வவுனியாவிற்குள் சென்ற போராளிகள் தேவனின் விருப்பத்தைத் தங்கள் தலைமையகத்திற்குத் தெரிவித்து அனுமதி பெற்று அவனை இணைத்துக்கொண்டார்கள். தேவன் →

# ஒரு போராளியின் குருதிச் சுவடுகள்...

→

வவுனியாப் பிரதேசத்தின் ஊர்களையெல்லாம் நன்கறிவான். அந்த ஊர்களின் ஒவ்வொரு சந்துபொந்துகளும் அவனுக்கு நன்கு பரிச்சயமானவை. தாக்குதலுக்கான வேவுகள் பார்க்கப்பட்டன. எதிரி ஆக்கிரமித்த பிரதேசத்திற்குள் மறைந்து வாழ்ந்தபடி எதிரிக்குத் தொல்லைகொடுக்கத் தொடங்கினார்கள். எப்போதும் எந்தக் கணத்திலும் எதிரியால் உயிர் அச்சுறுத்தல் இருந்தபோதும் அவனது மனைவியும் குழந்தையும் தலைமறைவு வாழ்க்கையையே வாழ்ந்தனர். தலைமறைவு வாழ்க்கையின் அத்தனை கடினங்களையும் சிலகாலம் அவர்கள் அனுபவித்தனர்.

இந்தக் கடினங்களைத் தாங்கியபடி தேவன் நடாத்தவிருக்கும் தாக்குதலுக்கு அவனது துணைவியும் குழந்தையும் வேவு பார்த்துக்கொண்டிருந்தனர். அவள் குழந்தையைத் தூக்கிக்கொண்டு இராணுவக் காப்பரண்கள் அமைந்திருக்கும் இடம், அவர்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள், அங்கு நிலைகொண்டுள்ள சிப்பாய்களின் எண்ணிக்கை போன்ற விடயங்களை அவதானித்து வந்து தேவனிற்குக் கொடுப்பாள். போராளிகள் சேர்த்த வேவுத் தகவல்களோடு இந்தத் தகவல்கள் சரிபார்க்கப்பட்டு அதன் பின் தாக்குதல் நடக்கும்.

இரணைஇலுப்பைக் குளத்தில் தேவனால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு இப்படித்தான் வேவு பார்க்கப்பட்டது. தாக்குதல் நடைபெறவிருந்த அன்றைய நாள் காலையும், தேவனின் மனைவி வேவு பார்த்துக்கொடுத்தாள். வேவுத் தகவல்களின்படி அங்கு காப்பரண் அமைத்திருந்த சிங்களப் படைகள் மீது அதிரடித்தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. திட்டத்தின்படி தாக்குதல் வெற்றிகரமாக நடந்துமுடிந்தது. ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நான்கு துப்பாக்கிகளும் இதர பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

இதேபோல தட்சணாமருதமடுப் பகுதியில் குளத்தில் குளிப்பதற்கு வரும் இராணுவத்தினர் மீது தேவன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலில் நான்கிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. இப்படி தட்சணாமருதமடு, முள்ளிக்குளம், மடு, பாலம்பிட்டி என பல பகுதிகளிலும் தேவனின் தாக்குதல்கள் நடைபெற்றன.

தேவனுடன் சண்டைக்குச் செல்வதென்றால் போராளிகள் போட்டிபோட்டுக்கொண்டு முன்வருவார்கள். ஏனெனில் தேவனில் அத்தகைய நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. அவன் சண்டைகளைத் திட்டமிடும்போது இழப்புக்கள் இல்லாமல் எப்படி வெற்றிகரமாகத் தாக்குதலை நடத்தமுடியுமோ அப்படிச் செய்யக்கூடிய வகையில் நன்கு திட்டமிடுவான். களத்தில் முதலாளாய் தானே நிற்பான். நிலைமைகளுக்கு ஏற்றவாறு முடிவெடுத்துச் சமர்க்களங்களைச் சாதுரியமாய் வழிநடத்துவான். எந்தப் போராளியும் தேவனுடன் சண்டைக்குப் போவதென்றால் சம்மதித்துப் போய்விடுவான். தேவன் அத்தகைய சாதனைகளைச் சண்டையில் சாதித்திருக்கின்றான்.

துணிந்தவனே சமரில் வெற்றியடைவான். தேவன் துணிந்தவன். அதனால் வெற்றிகளுக்குச் சொந்தக்காரனாகினான். தேவனின் துணிவிற்கு அவனால் மேற்கொள்ளப்பட்ட 'கிளைமோர்' தாக்குதல் ஒன்று சான்று பகர்கின்றது.

கவசவாகனங்களில் ரோந்துசெல்லும் இராணுவத்தினர் மீது 'கிளைமோர்' தாக்குதலுக்கு இடம் பார்க்கப்பட்டு நாளும் குறிக்கப்பட்டது. தேவன் தெரிவுசெய்த இடம் தாக்குதலை நடாத்துவதற்கு முற்றிலும் சாதகமற்ற இடம். தாக்குதலில் சின்னப் பிசகு நடந்தாலும் தாக்குதலுக்குச் செல்லும் அத்தனைபேரும் சந்தேகத்திற்கு இடமின்றி அந்த இடத்திலேயே எதிரியால் கொல்லப்படக்கூடும். இதனால் இந்த இடத்தைத் தெரிவுசெய்யவேண்டாமெனப் போராளிகள் அவனிற்கு ஆலோசனை கூறினார்கள். அந்த இடத்தில் சிறு சிறு பற்றைகளே இருந்தன. எழுந்து நின்றால் எதிரியால் உடனடியாகவே இனங்காணப்படக்கூடிய சாத்தியம் அதிகம் இருந்தது. தேவனிற்கு இவையெல்லாம் சின்னப் பிரச்சினைகள். இந்தத் தாக்குதலை இந்த இடத்தில்தான் நடாத்தவேண்டும் என அவன் உறுதியாய் நின்றான். 'கிளைமோர்' வெடிக்கவைக்கும் ஆழியை இயக்கும் பொறுப்பையும் தானே எடுத்துக்கொண்டான். அவனுடன் சென்ற போராளிகளை நிலையெடுக்கச் செய்துவிட்டு சிறு பற்றை மறைவில் இருந்தபடி வாகனத்தை அவதானித்து கிளைமோரை வெடிக்கவைத்தான். பதட்டம் இல்லாமல் அந்தச் சிறுபற்றைக்குள் இருந்தபடி இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புக்களை அவதானித்தான். இந்தத் தாக்குதலில் 18மேற்பட்ட சிங்களப் படைகள் கொல்லப்பட்டனர்.

தேவனின் வெற்றிகரமான இந்தத் தாக்குதல்களால் எதிரி சினமடைந்தான். தேவனை எப்படியாவது கொன்றுவிடவேண்டுமென்று அலைந்துதிரிந்தான் எதிரி. ஒருநாள் தேவனின் குடும்பம் மறைவிடம் ஒன்றில் இருந்தபோது இராணுவம் சுற்றிவளைத்துக்கொள்கின்றது. தேவனின் குழந்தை பச்சைச் சீருடையுடன் வருவது போராளிகள் என நினைத்து அவர்களை நோக்கிச் சென்றது. நிலைமை இப்போது விபரீதமாகிவிட்டது. குழந்தையை விட்டுவிட்டு இருவரும் தப்பிக்கமுடியாது. உடனடியாகவே முடிவெடுக்கின்றனர். தேவனை ஓடித்தப்புமாறு சொல்லிவிட்டு மனைவி இராணுவத்திற்குத் தன்னை வெளிக்காட்டிக்கொள்கின்றாள். இராணுவம் அவளை அடித்துத் துன்புறுத்தியது. தேவன் இருக்கும் இடத்தைக் காட்டுமாறு மிரட்டியது. அவர்கள் நினைத்தது நடக்கவில்லை. அவளது தாயை அழைத்துத் தேவனிடம் இனி இவளை அனுப்பவேண்டாம் என சொல்லி ஒப்படைத்தார்கள்.



தேவனது அணியால் கைப்பற்றப்பட்ட 'பவல்' கவச வாகனம்.

**துணிந்தவனே சமரில் வெற்றியடைவான். தேவன் துணிந்தவன். அதனால் வெற்றிகளுக்குச் சொந்தக்காரனாகினான்.**

தேவன் இப்படி பல நெருக்கடிகளைச் சந்தித்தான். அவனது களவாழ்விற்குள் ஒரு பொழுதில் அரவம் தீண்டி கடும் உபாதைக்கு உட்பட்டான். இனி தப்பமுடியாது என்று எண்ணும் அளவிற்கு நிலைமை விபரீதமாக இருந்தது. தேவனிற்குப் பாம்பு கடித்த செய்தி இராணுவத்தின் காதுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. தேவன் இனி செத்துவிடுவான் என மகிழ்ச்சிக்கொண்டாட்டம் போட்டார்கள். ஆனால் தேவன் தப்பிவிட்டான்.

தேவனை எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு நடவடிக்கை ஒன்றிற்காக வருமாறு பணிப்பு வந்தது. ஆனால் தேவன் அதை மறுத்துவிட்டான். இயக்கத்திலிருந்து சிறிதுகாலம் தான் ஒதுங்கியிருந்ததால் சண்டைகளில் நிறையச் சாதித்தபின்னரே தான் வருவேன் என அடம்பிடித்தான். எனினும் அவன் கட்டாயம் வரவேண்டும் என மீள வலியுறுத்திய பின்னரே விடுதலைப்புலிகளின் வன்னித்தளம் நோக்கி வருகின்றான். 1999ஆம் ஆண்டின் 10 மாதம் தேவனின் குடும்பம் இரவோடு இரவாக எதிரியின் காவலரணூடாக பல இடர்களைத் தாண்டி வன்னித்தளம் வந்தடைந்தது.

தேவன் இதன் பின்பும் அதிக நாட்களை வவுனியா இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்திற்குள்தான் கழித்தான். இராணுவத்திற்கு தொல்லைகொடுக்கும் பல தாக்குதல்களை அங்கிருந்தபடி மேற்கொண்டான். தேவனிற்கு எப்போதும் பிடித்தது சண்டைதான். அதற்கேற்றபடியே தனக்குக் கீழிருக்கும் போராளிகளை வழிநடத்துவான். அவனது குடும்பம் வன்னிக்கு வந்தபின் அவர்களுக்குப் பாதுகாப்புக் கிடைத்ததால் தனது நேரம் முழுவதையும் போராளிகளுடனேயே செலவு செய்யவிரும்பினான். வீட்டிற்குச் சென்றாலும் 'அங்க என்னபாடோ தெரியாது' என்று சொல்லிவிட்டுப் போய்விடுவான்.

'உங்கட சேவைக்காலம் காணும்தானே' என்று கேட்டால் 'நான் சண்டைபிடித்து வீரச்சாவுதான் அடையவேண்டும் அதுதான் என்ர விருப்பம்' என்று சொல்லுவான். 'அப்பிடி நடக்காட்டி என்ர பிள்ளையள் வளர்ந்த பிறகு நான் அவயளுக்குச் சண்டை பழக்கி அவையும் சண்டை பிடிக்கத் தொடங்கினாத்தான் நான் சண்டையில இருந்து ஓய்வு பெறலாம்' என்று சண்டையைப் பற்றியே கதைத்துக்கொண்டிருப்பான்.

இந்திய இராணுவ காலத்திலிருந்து இற்றைவரை பல சண்டைக்களங்களைத் தேவன் சந்தித்திருக்கின்றான். இராணுவ நகர்வு முறியடிப்புக்கள், பதுங்கித் தாக்குதல்கள், காவலரண் மீது தாக்குதல்கள், தேச விரோதிகள் மீதான தாக்குதல், கடற்புலிகள் அணியில் சிறிதுகாலம் இருந்தபோது கடற்சண்டை என இதுவரை 55இற்கும் மேற்பட்ட களங்களைச் சந்தித்துச் சாதனை படைத்தவன் தேவன்.

இந்த நீண்ட களச் சாதனைகளின்போது பலமுறை அவன் விழுப்புண் அடைந்திருக்கின்றான். அவனது உடலெங்கும் காயத்தழும்புகள் சாட்சியமாய் இருக்கிறது. தலையில், தோள்மூட்டில், நெஞ்சுப் பகுதியில், மூச்சுப் பையில், தொடையில், காலில் என உடலின் பல்வேறு பகுதிகளிலும் விழுப்புண் தழும்புகள். இந்த விழுப்புண்களை அவன் ஒரு பொருட்டாகக் கருதியதில்லை.

தன் தாய்நாட்டிற்காகத் தான் மட்டுமல்லாது போராளி அல்லாத தன் மனைவியோடும், குழந்தையோடும் தேவன் அதிகம் சாதித்த மாவீரன். ஒரு போர் வீரன். களத்தில் சண்டையிடுவதற்கு குடும்பம் ஒரு சுமையல்ல. அது துணையென்று நிரூபித்தவன் தேவன்.

இறுதி நாட்களில் அவன் மணலாறு மாவட்டத்தில் பகுதிப் பொறுப்பாளராகக் கடமையாற்றினான். தன் பணியைச் சரிவர நிறைவேற்றுவதில் இங்கும் கடுமையாய் உழைத்தான். இந்த வீரன்தான் 29.03.2007 அன்று மணலாற்றுப் பகுதியில் எதிரியுடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வித்தாகிப் போனான். வித்துக்கள் புது வீரியத்தோடு முளைவிடும். அந்த வீரியம் இந்தத் தேசத்தை எப்போதும் காத்துநிற்கும்.

**- புரட்சிமாறன் -**

# வாகரையின் உயிர்வலி

**படீர்** படீர் என தொடர் எறிகணை வெடிப்புச் சத்தங்கள் கேட்கின்றன. வாகரையில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் படைய மருத்துவமனையானது சுறுசுறுப்படைகின்றது. காயமுற்று வரும் போராளிகளை ஏற்கத் தயாராகின்றது. ஒடுங்கிய நிலப்பரப்பினுள், இராணுவ அழுத்தம் நிறைந்த நேரத்தில், பொருளாதார மருத்துவப் போக்குவரத்துத் தடையால் மக்கள் அல்லற்படும் காலத்தில் எதிரியின் யுத்த முழக்கம் கேட்கிறது. இம் மருத்துவ மனையானது சமராடும் போராளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆளணி, உபகரண வளங்களால் வரையறுக்கப்பட்டுள்ளது. விடுதலைப் போரின் கடந்த காலங்களில் இப்பிரதேசங்களில் கரந்தடிப் போரிற்கான மருத்துவ வளங்களே பயன்படுத்தப் பட்டன. இப்பொழுது முதன் முறையாக மரபுவழிப் போரினை எதிர்கொள்வதற்கு ஏதுவாகத் தயார்ப்படுத்தப்பட்டுள்ளது. மருத்துவர் காந்தன் தலைமையிலான அணியினர் சிறு பரபரப்புடனேயே காணப் படுகின்றனர்.

எறிகணைச் சத்தங்கள் ஓய்ந்து சிறு இடைவெளி ஏற்பட்டிருந்தது. அப்பொழுது கடற்புலிகளின் 'கன்டர்' ரக வாகனமொன்று விரைந்து வருகின்றது. அவ்வாகனம் குத்தி 'பிறேக்' அடித்து நிற்கின்றது. வாகனத்தின் பின்பெட்டியை நோக்கிப் பார்வையைத் திருப்பிய காந்தன் சில கணங்கள் உறைந்துபோனான். அதனுள் காணப்பட்ட பொதுமக்கள் வயது வேறுபாடின்றி எறிகணைச் சிதறல்களினால் சிதைகாயங்களிற்கு உட்பட்டிருந்தனர். முதலுதவிக்கான கட்டுகள் கூட போடப்படாமல் இரத்தம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. காயமடைந்தவர்கள் வலியாலும், பயத்தாலும் அவலக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். "டொக்டர், கதிரவெளிப் பள்ளிக்கூட அகதிமுகாமிற்கு அடிச்சுப் போட்டாங்கள். இன்னும் காயம் வரும்..." வாகனச்சாரதி சொல்லத்தான் காந்தன் சுயநினைவிற்கு வருகின்றான்.



போராளிகளால் காயக்காரர்கள் வேகமாக வாகனத்தில் இருந்து இறக்கப் படுகின்றார்கள். ஆங்காங்கே பரவலாகக் கிடத்தப் படுகின்றார்கள். உடனடியாக உயிராபத்தான காயங்கள் தரம்பிரிக்கப்படுகின்றன. குருதிப்பெருக்கை நிறுத்துவதற்கான கட்டுகள் போடப்படுகின்றன. நோ நிவாரணியும், திரவ ஊடகமும் தேவையானவர்களுக்கு ஏற்றப்படுகின்றது. மீளவுயிர்ப்பளித்தல் செயற்பாடானது வேகமாக மேற்கொள்ளப்படுகின்றது.

பத்து வயதுச் சிறுமி ஒருத்தியின் இடதுமேல் அவயவமானது தோள்மூட்டுடன் சிதைந்து, பிய்ந்து, சிறு தோலில் மட்டும் தொங்கிக் கொண்டுள்ளது. வலது நெஞ்சறைச் சுவரில் ஒரு சிறு பகுதியைக் காணவில்லை. மூச்சுவிடும் ஒவ்வொரு முறையும், அவ்விடைவெளியினூடு நுரையீரலானது வெளியில்வந்து உட்செல்கின்றது. அவளால் கத்தவோ, கதைக்கவோ, அழவோ முடியவில்லை. அவளின் முகத்தில் தரையில் எறியப்பட்ட மீனின் அந்தரிப்புத் தெரிகின்றது. உரிய அவசர உயிர்காப்புச் சிகிச்சை அளிக்காவிட்டால் அவள் உயிர் பிரிவது நிச்சயம். கணநேரப் பார்வையில் காந்தன் நிலைமையை விளங்கிக்கொண்டான். அவளருகில் ஓடிச்சென்றான். மருத்துவப் பஞ்சனை வைத்து அவ்நெஞ்சறைத் துவாரத்தை அடைக்கின்றான். அக் காயத்தினூடாகவே றப்பர் குழாய் ஒன்றை நெஞ்சறைக்குழியினுள் செலுத்துகின்றான். அங்கு தேங்கிநின்று சுவாசத்தைச் சிரமப்படுத்திய இரத்தம் குழாயினூடு வெளியேறி அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பையினுள் சேர்கின்றது. மூச்சுவிடுவதில் ஏற்பட்ட தடைநீங்க அவள் பார்வையில் சாதகமான மாறுதல் தென்பட்டது. சிந்திப்பதற்கு நேரம் இருக்கவில்லை. மயக்க மருந்து கொடுக்கும்படி உதவிப் பணியாளரைப் பணிக்கின்றான். அவள் மயங்கியவுடன் இடது கையைத் தோள்மூட்டுடன் வெட்டியகற்றுகின்றான். உரிய கட்டுக்களைப் போட்டு சிகிச்சை முடிக்கின்றான். "இனி உயிர் தப்புவாள்... உயிர் தப்பி...?" மனதினுள் உருவான கணிப்பையும், எழுந்த கேள்வியையும் உதாசினம் செய்து நிமிர்ந்தவன் மீண்டும் அதிர்ந்தான். அப்பகுதி எங்கும் பரவலாகப் பெருமளவிலான காயக்காரர்கள் கிடத்தப்பட்டுள்ளனர். போராளி மருத்துவர்களும் ஏனையவர்களும் ஓடியோடி வேகமாகச் செயற்படுகின்றார்கள். காயமுற்றவர்களின் ஈனக்குரலும், குவிந்துவிட்ட உறவினர்களும், அவர்களின் பதைபதைப்பும் தங்களவர்களை முதலில் சிகிச்சைக்கு உட்படுத்தக்கேட்கும் நிர்ப்பந்தமும் சேர்ந்து அச்சூழலின் அவலத்தை அதிகரித்துக்கொண்டிருக்கின்றது.

இன்னொரு அம்மாவின் வயிற்றறை பிழந்துள்ளது. அதனூடாக வெளியேறியிருந்த குடலில் மண் பிரண்டிருந்தது. அவவிற்கும் நோ நிவாரணி கொடுக்கப்படுகின்றது. குடலினைக் கழுவி முடிந்தளவு மெதுவாக வயிற்றறையினுள் தள்ளுகின்றான். உட்செல்லாத பகுதியை அப்படியே வைத்து, திரவ ஊடகத்தினால் ஈரலிப்பு ஏற்படுத்தப்பட்ட முக்கோணத் துண்டினால் வயிற்றைச் சுற்றிக் கட்டுப்போடுகின்றான். "டொக்டர் காயக்காரரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பட்டாம். அங்கால ஐ.சி.ஆர்.சிக்காரர் கொண்டு போயினமாம்." திருமலை மாவட்ட சுகாதார சேவைகள் இணைப்பாளர் இவனிடம் கூறுகின்றார். முன்னுரிமை அடிப்படையில் சிறுரக வாகனங்களில் அவசர சிகிச்சைக்குரியவர்களும், ஏனையோர் உழவு இயந்திரங்களிலும் ஏற்றி அனுப்பப்படுகின்றனர். எல்லாமாக நாற்பத்தைந்து பேரிற்குமேல் சாவடைந்துவிட்டனர். காயங்களின் எண்ணிக்கை பல மடங்கு. ஒரு பெரும் மனித அவலம் சில மணிகளில் நடைபெற்று இவர்களின் கரங்களைக் கடந்து சென்றுகொண்டிருக்கிறது. ஆணிவேர் திரைப்படத்தில் இப்படியான ஒரு காட்சியில் தான் பங்குபற்றியது ஏனோ இவனிற்கு இப்பொழுது ஞாபகம் வருகின்றது.



தொடர் எறிகணை, விமானக் குண்டுவீச்சுகள் என அப்பிரதேசம் அதிர்ந்துகொண்டிருக்கின்றது. வாகரை மக்கள் பாடசாலைகளையும், மருத்துவமனையையும் தமக்குப் பாதுகாப்பான இடங்கள் என நம்பித் தங்கியுள்ளார்கள். எலிவளைகள் போன்று சிறு சிறு பதுங்குகுழிகள் அமைத்துப் பதுங்கியுள்ளனர். மனித வாழ்க்கைக்குப் பொருத்தமற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாகப் போசாக்கின்மைக்கும், தொற்று நோய்களுக்கும், சுகாதாரச் சீர்கேட்டிற்கும் உட்பட்டிருந்தனர். நிலநடுக்கம் ஏற்பட்ட இடமாகப் புறச்சூழலும், புயலடித்த பாலைவனமாக அகச் சூழலும் காணப்பட்டது. அனைவரும் ஏதோவொரு வகையிலாவது மன அழுத்தத்திற்கு உட்பட்டிருந்தார்கள். மனச்சாட்சியை உலுப்பும் மானிட அவலத்தைப் பார்த்துச் சர்வதேசம் மௌனித்திருக்கின்றது. "டொக்டர்...! செல்லடிச்சுக் கனசனம் காயப்பட்டிருக்குதாம்... உங்களக் கெதியா ஆஸ்பத்திரிக்கு வரட்டாம்.." உடனடியாகத் தனது மருத்துவ அணியினருடன் வாகரை மருத்துவமனைக்கு விரைந்தான். மருத்துவமனைக்கு உள்ளும், வெளியிலுமாக ஏராளமான காயக்காரர்கள் கிடத்தப்பட்டுள்ளனர். கணமும் தாமதிக்காது வேகமாகத் தங்களால் இயன்ற சிகிச்சையினை அளிக்கத் தொடங்கினார்கள். பெரும் அனர்த்தங்களை எதிர்கொள்ளத் தயார் நிலையில் இருக்கும் மருத்துவமனைகளே இவ்வாறான சூழலில் தடுமாறுவதுண்டு. ஆனால் இங்கு அவசியமான மருத்துவம் என்பது சாத்தியமற்றது. இங்கு முடிந்தளவிற்கு அனைவரிற்குமே நிறைவாகச் செய்வதே எழுதாத விதியானது. ஏற்கனவே பலவீனமாகக் காணப்பட்ட மக்களிடம் தேவையான இரத்த தானம் பெறுவதில் சிரமம் ஏற்பட்டது. இக்காரணத்தினாலேயே காயமுற்றவர்களினால் தாக்குப்பிடிக்கும் தன்மையும், காயம் மாறும் வீதமும் பாதிப்பிற்குள்ளாகும் என்பது வெளிப்படையானது. எது எப்படியோ இப்போது செய்யக்கூடியது குருதிப் பெருக்கை நிறுத்தி, நோ நிவாரணி, நுண்ணுயிர்கொல்லி மருந்துகளைக் கொடுத்து, உடனடி உயிரிழப்புக்களைத் தவிர்ப்பது. பின்னர் வேகமாக மட்டக்களப்பு பொதுமருத்துவமனைக்கு அனுப்புவது. இத்திட்டத்துடன் வேகமாகச் செயற்பட்டு, தரவரிசையில் காயங்களை வாகனங்களில் ஏற்றத் தயாராகினர். அப்பொழுதுதான் அச்செய்தி சொல்லப்பட்டது. "டொக்டர்... பாதை பூட்டி இருக்குதாம். இராணுவம் திறக்காதாம். அதனால காயங்களை அனுப்ப இயலாது..." இப்பொழுது இடிவிழுந்தது இவன் மனதினுள் அல்ல. மனிதாபிமானம் எனும் சொல்லின் மீது. இலங்கை அரசாங்கம் அவசர மருத்துவ தேவையையே, இராணுவ வெற்றிக்கான ஒரு மார்க்கமாக்க முனைவது விளங்கியது. நிலைமை கையை மீறும் போது விளைவுகளை எண்ணிக் கவலைப் படாமல், கடமையைச் செய்வதே இங்கு பொருந்தும் விதியானது.

இளவயது தாய் வலதுகால் தொடையுடன் சிதைந்து காணப்படுகின்றாள். அருகில் கைக்குழந்தையுடன் கணவன். எப்படியும் மனைவியைக் காப்பாற்றும்படி கெஞ்சுகின்றான். நேரத்தைப் போக்காமல், காலை வெட்டியகற்றும் சத்திரசிகிச்சையின் மூலம், தாயின் உயிரையாவது காப்பது என முடிவெடுக்கின்றார்கள். அவளின் உடல்நிலை மிகவும் பலவீனமாக உள்ளது. ஏற்றுவதற்கு இரத்தம் தேவை நிலைமையைக் காந்தன் கணவனுக்கு விளங்கப் படுத்துகின்றான்... "டொக்டர் நான் இரத்தம் தாறன். எப்படியும் தப்புவா தானே. கால் இல்லாட்டியும் பரவாயில்லை. பிள்ளைக்கு அம்மா வேணும்" இவன் பதில் கூறாமல் சம்மதக் கடிதங்களில் கையெழுத்து வேண்டும்படி கூறுகின்றான். பின்னர் கணவனின் இரத்தம் மனைவிக்கு ஏற்றப்பட்டு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படு கின்றது. எப்படியும் சில மணித்தியாலங் களில் நோயாளி சுயநினைவிற்கு மீண்டுவிடுவாள் என இவனும் எண்ணினான். எனினும் எறிகணைச் சிதறல் வடிவில் வந்த விதி வலியதாய் இருந்தது. ஏற்கனவே இருந்த பலவீனமும் அதீத இரத்தப் பெருக்கால் ஏற்பட்ட நீண்ட அதிர்ச்சியும் சேர்ந்து இவர்களது முயற்சியைத் தோல்வியடையச் செய்துவிட்டது. தாயிடம் பாலுக்கு அழும் பாலகனையும், மனைவியைப் பறிகொடுத்து தன் மழலைக்கு மாப்பால்கூட கொடுக்கமுடியாத கையறு நிலையில் நின்று கதறும் கணவனையும் காணக்காண இவன் தன் உயிர் உருகுவதாய் உணர்ந்தான். கண்களில் நீர் முட்டியது. இலட்சியத்திற்காகச் சாகத்துணிந்த போராளிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்கும், வாழ விரும்பும் மக்களுக்கு சிகிச்சை செய்வதற்கும் இடையில் ஏற்படும் தன்னிலைசார் உணர்வுப் பாதிப்பு இவனைக் கவலைகொள்ளவைத்தது. நேரம் செல்லச்செல்ல உயிரிழப்பு வீதம் அதிகரித்தது. "டொக்டர் இந்தக் கேசை ஒருக்கா வந்து பாருங்கோ!" மனதைக் கல்லாக்கி குரல் அழைத்த திசையில் நடக்கின்றான்.

**- தூயவன் -**

# செல்லுபடியாகா வல்லாண்மை

## மீண்டும் தாக்கியிருக்கிறார்கள் வான்புலிகள் இந்தமுறை பலாலிப் படைத்தளத்தில்



*மீண்டும் தாக்கியிருக்கிறார்கள் வான்புலிகள் இந்தமுறை பலாலிப் படைத்தளத்தில்*

கட்டுநாயக்கா மீதான முதற்தாக்குதல் ஏற்படுத்திய சலசலப்பு செடியிலே தங்கிய மழையாகச் சொட்டிக்கொண்டிருந்த தருணத் தில் இது நிகழ்ந்திருக்கிறது. இரண்டு தாக்குதலுக்கும் இடைப்பட்ட காலத்தில், சிறிலங்கா வான்படை இரவு பகலாக, கிட்டத்தட்ட 150 தடவை, தமிழர் தாயகத்தின் மீது தாக்குதல் நடத்தியிருந்தது. காடுகள், கரம்பைகள், குடியிருப்புக்கள், கடை வீதிகள், பாடசாலைகள், பண்ணைகள் என்று சிறிலங்கா வான்படை கண்மண் தெரியாமல் வீசியெறிந்த ஆயிரக்கணக்கான குண்டுகளின் இரைச்சல், இந்த இரண்டேயிரண்டு தாக்குதல்களின் ஓசையில் கவனிப்பாரற்றுப்போனது. இந்த இரண்டு தாக்குதல்களும், குறித்த இலக்குகளின் மேல் ஏற்படுத்திய ஓசையையும் அழிவுகளையும் விட, இலங்கைக்கான இராசதந்திரக் களங்களில் ஏற்படுத்திய தாக்கங்களே மிக அதிகமானவை. புலிகளின் வான்படைத் தாக்குதல்களையொட்டி இலங்கையிலே புதிய சாத்தியங்கள் உருவாகிவருகின்றன. இந்நிலையில் தன் பேரம் பேசும் வலுவை உள்ளேயும் வெளியேயும் காப்பாற்றக் கொழும்பு அரசாங்கம் தீவிரமாக மல்லுக்கட்டி வருகிறது.

கிளிநொச்சி பற்றிய கொழும்பின் எண்ணங்கள் பயங்கரமானவை. புலிகள் செய்தாலும் செய்யாவிட்டாலும், துறைமுகத்திற்கு வரும் எண்ணைக் கப்பல்கள், கொலந்நாவ எண்ணை சுத்திகரிப்பிடம், மின் பிறப்பாக்கும் நீரணைகள், முக்கிய பாலங்கள் என்று பல இலக்குகளை எண்ணியெண்ணிக் கொழும்பு ஏங்குவது எல்லோருக்கும் தெரியும். கிளிநொச்சி மீது பொருளாதாரத்தடை விதித்திருக்கும் கொழும்பின் குற்றமனம், அவ்வாறான பதிலடியை எதிர்பார்ப்பது வியப்பல்ல.

- சேனாதி -

அதைவிட, தமிழரின் வான் மற்றும் கடற்பரப்பில் பயணிக்கும் ஐ.நா உட்பட்ட பன்னாட்டு அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதானிகள் அனைவரும் புலிகளின் ஐ.நா நிறுவனங்களுக்கான தொடர்பலுவலகத்திற்கு அறிவித்தே செல்வது எழுதப்படாத ஏற்பாடாக நடை முறையில் இருந்துவருகிறது. இனிமேல், கட்டுநாயக்காவிலும் அம்முறைமை பின்பற்றப்படும் நிலை வரலாம். இலங்கையில் செயற்படும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் புலிகளுடைய உத்தர வாதத்தை நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ பெறவேண்டும் என்று அடம்பிடிக்கவும் கூடும். இவையெல்லாம், தமிழரின் நடைமுறை அரசானது ஒரு நடைமுறை அங்கீகாரத்தைப் பெறுவதற்கான ஆரம்பப்படிகளில் ஒன்றாக அமைந்துவிடலாம் என்ற யதார்த்தமும் கொழும்பை வாட்டிவதைக்கிறது.

சிறிலங்கா அரசிற்கு அச்சம், அவமானம், பொருளாதாரத் தடங்கல், அரசியல் ஈடாட்டம் மற்றும் இராசதந்திர வீழ்ச்சி என்பவற்றை ஒருசேரத்தந்த இந்த நடவடிக்கைக்குப் புலிகள் பயன்படுத்திய படைத்துறை வளம், சிறிலங்காவின் படை வளங்களுடன் ஒப்பிடும்போது மிக மிகச் சொற்பமானதே. இவ்வாறு, கைவசமிருக்கும் வல்லாண்மையை உச்ச அளவில் பயன்படுத்தும் படைத்துறை உத்தி, 'வல்லாண்மையைச் செல்லுபடியாக்குதல்' என்னும் பெயரில் படைத்துறையில் கையாளப்படுகிறது.

இவ்விடயம் பற்றிய கோட்பாடொன்று *பிரைன் ஹொக்கிங்ஸ்* மற்றும் *மைக்கல் ஸ்மித்* என்போரின் ஆய்வு நூலில் தரப்படுகிறது. நாடுகள் அல்லது அமைப்புக்கள் தமது படைத்துறை வல்லாண்மைத் திறனைச் செயலாக்குதல் தொடர்பான கட்டுரையிலே, முதலாவதாகச் சரியான இலக்கையும் கருவியையும் தேர்வு செய்வது பற்றியும், இரண்டாவதாக இயல்பு காட்டுதல், காலம் வரையறுத்தல், நகர்த்துதல் மற்றும் களமிறங்குதல் எனும் நான்கு வகை படைச்செயற்பாடுகள் பற்றியும் ஆய்வு செய்யப்படுகிறது.

இலக்குகள் தெரிவுசெய்யப்படும்போது அவற்றின் படைத்துறை, அரசியல், பொருளாதார மற்றும் இராசதந்திர முக்கியத்துவம் சீர்தூக்கிப் பார்க்கப்படுகிறது. நான்கு விடயங்களுமே ஒன்றிலொன்று பின்னியிருப்பவைதான். இருப்பினும் அவற்றின் முக்கியத்துவம் இலக்குகளுக்கு ஏற்ப கூடிக்குறைந்து காணப்படும். ஈழப் போரின் முக்கிய திருப்பங்களின் போது புலிகள் தேர்வுசெய்த பல இலக்குகளில் அவ்வாறான பரிமாணங்கள் இருந்ததைப் பார்க்கமுடியும்.

ஆனையிறவைப் புலிகள் மீட்ட போது, அதிலே படைத்துறை மற்றும் அரசியல் முக்கியத்துவம் முன்னின்றது. அதேபோல, முல்லைத்தீவுச் சமர் (ஓயாத அலைகள் - 1) படைத்துறை மூலோபாயத்தைத் தொனிப்பதாகவே இருக்கிறது.

திருமலைத் துறைமுகத்தின் மீது 1995 இல் நிகழ்ந்த தாக்குதலுக்கும் 2006 இல் தொடுக்கப்பட்ட தாக்குதல்களுக்குமான பரிமாணங்கள் வேறுபட்டவை. நீரடி நீச்சல் பிரிவால் நிகழ்த்தப்பட்ட முன்னைய தாக்குதல் பொருளாதாரத்தில் மெல்லிய நெருடலைக் கொடுத்தாலும் அதன் முதன்மை விளைவு படைத்துறை சார்ந்ததே. பின்னைய பீரங்கித் தாக்குதல், படைத்துறை மீதான அழுத்தங்களுக்குச் சமமாக பொருளாதார, அரசியல் அழுத்தங்களையும் சிறிலங்கா அரசிற்குக் கொடுத்தது.

பலாலி படைத்தளத்தின் மீது தொண்ணூறுகளின் முற்பகுதியில் கரும்புலித் தாக்குதல்களும், 2006 இல் பீரங்கித் தாக்குதல்களும், இப்போது வான்படைத் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளன. இதில் முதலாவது தாக்குதல், படைத்துறைக்குச் சேதம் என்ற அளவில் (வான்கலங்களும் சேதமாக்கப்பட்டன) முக்கியத்துவத்தையும், இரண்டாவதில் மூலோபாய நிலைக்கான நிரந்தர அச்சுறுத்தல் என்ற அழுத்தத்தையும், மூன்றாவதான வான்படைத் தாக்குதல், படைத்துறைச் சேதம் மற்றும் மூலோபாய அழுத்தத்தோடு அரசியல் பின்னடைவையும் சிறிலங்காவிற்குத் தந்திருக்கிறது.

கட்டுநாயக்கா தாக்குதல்கள் குறித்து விபரிக்கவேண்டியதில்லை. பொருளாதாரம், அரசியல் மற்றும் இராசதந்திர வகையில் அரசை மண்டி போட வைத்த முதலாவது தாக்குதலின் அளவிற்கு சிறிலங்கா அரசை வேறெந்தத் தாக்குதலும் உலுப்பியதில்லை எனலாம். இரண்டாவது தாக்குதல் படைத்துறையில் புதிய சாத்தியங்களைத் திறந்து விட்டிருப்பதோடு, ஒழித்து மறைக்கவேண்டிய அளவிற்குப் படைப் பொருட் பாதிப்பையும், மிதமான ஆனால் நீண்டகாலப் பொருளாதாரப் பாதிப்புக்களையும், அரசியல் மற்றும் இராசதந்திர மீள் சிந்தனைக்கு அடித்தளமாய் அமையக் கூடிய வியாக்கியானங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இதேபோன்று இங்கு விபரிக்காது விடப்பட்ட தாக்குதல்களையும் நாம் நினைவில் கொள்ளமுடியும்.

மேற்குறிப்பிட்டவற்றில் இரண்டு தாக்குதல்களைத் தவிர, (முல்லைத்தீவு, ஆனையிறவு) ஏனைய அனைத்துமே புலிகளின் சிறப்புப் படைப் பிரிவுகளால் அல்லது மரபுப் படையின் ஒரு சிறு குழுவால் மிகச் சொற்பமான வளங்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்டவை என்பது இங்கே அதிகவனத்திற்கு உரியது. இத் தாக்குதலைச் செய்வதற்கு வேண்டிய புலிகளின் வல்லாண்மை வளம், கிழக்கிலே தரைப்பரப்புக்களை கைப்பற்றுவதாலோ இரவு பகலாக குண்டு வீசுவதாலோ வடக்கின் பல்வேறு முனைகளில் படை நெருக்குவாரத்தை ஏற்படுத்துவதாலோ அற்றுப்போய்விடாது என்பதும் அவதானிப்பிற்கு உரியது.

புலிகள் மீதும் பல்பரிமாண அழுத்தம் தரக்கூடிய தாக்குதல் இலக்கொன்றை எவ்விலை கொடுத்தும் அடையக்கொழும்பு நிருவாகம் துடியாய்த் துடிப்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டியது இல்லை. ஆனால், புலிகள் தங்கள் வல்லாண்மையை வடுபடும் வண்ணம் வெளிக்காட்டுவது அரிது.

அடுத்து, *பிரைன் ஹொக்கிங்ஸூம் மைக்கல் ஸ்மித்தும்* சொல்கிற இயல்பு காட்டுதல், காலம் வரையறுத்தல், நகர்த்துதல், களமிறங்குதல் ஆகிய நான்கு வகைப் படைத்துறைப் பிரயோகங்களில், முதாலாவதான பலங் காட்டுதல் என்ற படியை மட்டுமே வான்புலிகளின் தாக்குதல்கள் செய்திருக்கின்றதென்று கொள்ளலாம். ஏனைய படிமுறைகளை புலிகள் தற்போதைக்குக் கைக்கொள்ளாவிடினும், அவ்வாறு நிகழாதெனக்கொண்டு கொழும்பு நிருவாகம் செயற்படுவது அதி முட்டாள்தனமாகவே இருக்கும்.

இன்று சிறிலங்காப் படைகள், கிழக்கிலே கைப்பற்றிய பரப்புக்களைத் தக்க வைப்பதில் எதிர்நோக்கும் சிரமங்கள் மெல்ல மெல்ல மேலெழுகின்றன. வடக்கிலே மணலாற்றிலும், தென்மராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கிலும் மன்னார் வவுனியா நெடுஞ்சாலை வழியேயும் சிறிலங்காப் படைகள் போராயத்த நிலையில் நிற்கின்றன. கணக்கிலிருந்து கழிக்கக் கூடியது என்று கருதப்படக் கூடியதும், விட்டோடிகளையும், தண்டனையாளர்களையும் கொண்டதுமான 57வது டிவிசன் மிகப்பெரிய இழப்புக்களுடன் மிகச்சிறிய நகர்வுகளைச் செய்துவருகிறது. இவ்வாறான டிவிசன்கள், நம்பகமான டிவிசன்கள் இறங்கவேண்டிய பாதையை மிருதுவாக்குவதற்காக முன்னே அனுப்பப்படுவது மிகப்பழைய போர் உத்தி.

புலிகளைப் பலவீனப்படுத்துவதற்கு கொழும்பு மேற்கொண்ட கால் நூற்றாண்டு கால முயற்சிகளில் இருந்து இவை வேறுபட்டவை அல்ல. மக்களைக் கொடுமைக்கு உள்ளாக்குவதைத் தவிர இவ்வாறான நடவடிக்கைகள் பெரிதாக எதையும் சாதித்ததும் இல்லை. ஒரு கையில் நாட்டின் நிருவாக அதிகாரம் படிப்படியாகப் படைத்துறைக்குக் கைமாறுகிறது. மறுகையில், தங்களின் அரசியல் தளங்களைத் தக்கவைப்பதற்காக வகுக்கப்படும் போர்த் திட்டங்களை அப்பாவிச் சிப்பாய்கள் நம்பும்வரை தமக்கு ஆபத்தில்லை என்று கொழும்புத் தலைவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். எப்படியிருந்தாலும், புலிகளின் அடுத்த இலக்குத் தேர்வு பற்றிய உட்பயம் முன்னெப்போதையும் விட இப்போது அதிகமாகியிருப்பதை கொழும்பு மறுக்கமுடியாது. ●

(14ஆம் பக்கம் பார்க்க)

கிழக்கின் தமிழ்த்தேசியத் தன்மையை, தனித்துவத்தை அழித்துவிட்டால் வடக்கு ஒருபோதும் தனிநாடாகிவிட முடியாது என்ற கருத்தோட்டம் டி..எஸ்.சேனநாயக்கா காலத்திலிருந்தே சிங்கள ஆட்சியாளர்களிடம் உண்டு. இது விடயத்தில் இதுவரை இருந்துவந்த சிங்கள அரசாங்கங்களுள் இராஜபக்ஷ அரசாங்கம்தான் அரசியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும், சமூகரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் அதிக செயலூக்கத்துடன் செயற்பட்டுவருகின்றது.

1987ஆம் ஆண்டு இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின்படி வடக்கும் கிழக்கும் ஓர் அரசியல் அலகு என்ற ஓர் அரசியற்தீர்மானம் எடுக்கப்பட்டது. இத்தீர்வே போதாது என்பது தான் தமிழ் மக்களின் பிரச்சினை. ஆனால் நிலைமை இப்படியிருக்க இருந்ததற்கு மாறாக வெறும் சட்டநுணுக்கப் பிரச்சினை ஒன்றைக் காரணம் காட்டி ஒரு முக்கிய அரசியல் தீர்மானத்திற்கு எதிராக வடக்கையும் கிழக்கையும் இருதுண்டுகளாக இராஜபக்ஷ அரசாங்கம் பிரித்துவிட்டது. அத்துடன் நிர்வாக ரீதியாகவும் கிழக்கின் பகுதிகள் அரிக்கப்பட்டு வருகின்றன.

சுனாமியில் பேரழிவிற்கு உள்ளானது கிழக்குத்தான். புலிகளுடனான சுனாமி கட்டமைப்பு ஒப்பந்தத்தின் மூலம் கிழக்கில் நிகழவிருந்த அடிப்படைப் பொருளாதாரப் பணிகளை இராஜபக்ஷ அரசாங்கம் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்ததன் வாயிலாகத் தடுத்து நிறுத்தியது. இவ்வாறு கிழக்கை வடக்கிலிருந்து பிரித்தமை, கிழக்கிற்கான சுனாமிப் பொருளாதாரப் பணிகளைத் தடுத்தமை என்பவற்றின் மூலம் தமிழ்த்தேசிய ஒருமைப்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் எதிரான நிரந்தரச் சீனச்சுவரை இராஜபக்ஷக்கள் எழுப்பினர்.

"இறைமை" என்று சொல்லிக் கொண்டு அனைத்து உரிமை மீறல் களையும் வாக்குறுதிகளையும் ஒப்பந்த மீறல்களையும் இராஜபக்ஷ அரசாங்கம் ஒருபுறம் அரங்கேற்றி வருவதுடன் "தேசிய பாதுகாப்பு" என்று சொல்லிக் கொண்டு அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் அநாகரிகமான அரசியல் நடவடிக்கை களையும் இராஜபக்ஷக்கள் செய்து வருகின்றனர். "தேசிய பாதுகாப்பு" என்ற பெயரில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறியவண்ணம் தனது நிர்வாணகரமான இராணுவ நடவடிக் கைகளைக் கிழக்கில் கட்ட விழ்த்து விட்டுள்ளது. தனது இராணுவ நடவடிக் கைகளின் மூலம் கிழக்கைச் சின்னா பின்னப்படுத்தி ஒரு இலட்சத்திற் கும் மேற்பட்ட மக்களை அவர்களது. சொந்த வாழ்விடங்களைவிட்டுத் துரத்தி அடித்து அகதிகளாக்கியுள்ளது. நிர்க்கதிக்குத் தள்ளியுள்ளது.

இப்பாரிய இராணுவ நடவடிக்கைகள் மூலம் பலநூற்றுக் கணக்கில் குழந்தைகள், பெண்கள், கற்பிணித்தாய்மார்கள், முதியோர் என வயது, பால் வேறு பாடுகள் எதுவுமின்றி கொரூரமாய்க் கொன்றொழிக் கப்பட்டனர். மிகப்பெரும் மனித அவலத்திற்கு கிழக்குவாழ் மக்கள் உள்ளாக்கப்பட்டனர். இதில் மிகத் திட்டமிடப்பட்ட ரீதியில் இராணுவப் பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. ஒரு முனைப்பான அரசியல் தீர்மானத்து டன், பலமான இராணுவ முனைப்புடன் இன அழிப்பு ஒடுக்குமுறை நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் முழுமூச்சாக ஏவப் பட்டது கடந்த க.பொ.த (சாதாரண) பரீட்சைக் காலத்திலாகும். தமிழ் மக்களின் கல்வி மனப்பாங்கை முற்றாக அழிக்க சிங்கள ஆட்சியாளர் விரும்பு கின்றனர். கல்வி, அறிவியல், ஊடக வியல் ரீதியான அழிப்பானது ஒரு சமூகத்தைத் தேசிய இன ரீதியில் சத்தற்றதாக்கிவிடும் என்பது ஒரு பொது உண்மை. அதனை முழு அளவில் நிறைவேற்றி எதிர்காலத்தில் தேசியப் போராட்டத்தை முன்னெடுக்க வலுவற்ற இனமாக ஆக்கிவிட வேண்டும் என்பதில் முழுநம்பிக்கை வைத்து இராஜபக்ஷக்கள் செயற்பட்டு வருகிறார்கள்.

தமிழீழ மக்கள் சிறிய பிர தேசத்தைக் கொண்ட அளவாற் சிறிய இனமக்கள். எனவே அபிவிருத்தியற்ற பின்தங்கலையும், பொருளாதார ஒடுக்கு முறைகளையும் செய்துகொண்டு கூடவே இராணுவ அநர்த்தங்களையும் புரிவதன் மூலம் மக்களின் போராடும் வலுவையும், திறனையும் விருப்பத்தை யும் இல்லாது செய்துவிடலாம் என சிங்கள ஆட்சியாளர்கள் நம்பி அதற்கான நடவடிக்கை களை முழு மூச்சுடன் இராஜபக்ஷ தலைமையில் செய்துவருகின்றனர்.

"பயங்கரவாத" முத்திரை குற்றி தமிழ் மக்கள் மீது தமது அரச பயங்கர வாத இராணுவ நடவடிக்கைகளை சிறிதும் வெட்கமின்றிச் செயற்படுத்தி வருகின்றனர். "இப்பயங்கரவாத" முத்திரைக்கூடாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தைச் சர்வதேச அரங்கிற் தனிமைப்படுத்துவதில் அதிக முனைப்புக்காட்டி வருகின்றனர்.

கிழக்கைத் துண்டாடுவது, புலிகளைச் சர்வதேச அரங்கிற் தனிமைப்படுத்தித் தமிழரை உலகரங் கில் நண்பர்களற்ற ஓரினமாக வைத்திருப்பது இராஜபக்ஷக்களின் அடிப்படை உபாயமாகும்.

பிரதேசங்களைத் துண்டாடல், வளங்களை அழித்தல், பொருளாதார ஒடுக்கு முறைகளை மேற்கொள்ளல், மக்களை அல்லலுக்கு உள்ளாக்கி நம்பிக்கைகளை அழித்தல், புலப்பெயர்ச்சிகளை ஊக்குவித்தல், வாழ்விடங்களைச் சிதைத்தல், கட்டுமானங்களை நொருக்குதல், பண்பாட்டு விவகாரங்களைத் தடுத்தல், கல்வியைச் சீரழித்தல் என பல்பரி மானம் கொண்ட ஒரு நோக்கிலான ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்களை இராஜபக்ஷக்கள் வகுத்துச் செயற் படுத்தி வருகின்றார்கள். நீண்டகால, குறுங்கால உடனடி நடவடிக்கைகள் என இத்திட்டமிடல் ஒருங்கிணைக் கப்பட்ட வகையில் வடி வமைக்கப்பட்டுள்ளது.

குடியடர்த்தியும் ஜனத்திரட்சி யும் மிக்கது குடாநாடு. ஏ 9 வீதியை மூடிக் குடாநாட்டைத் தனிமைப்படுத்தி இக்குடாநாட்டு மக்களை நயத்தாலும் பயத்தாலும் போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்துவதில் இராஜபக்ஷக் கள் பெரும் பிரயத்தனம் செய்துவரு கின்றனர். ஆட்கடத்தல், காணாமற் போதல், சுற்றிவளைத்தல், அச்ச மூட்டல், கல்வி, பொருளாதார ஸ்தம்பிதங்களை உருவாக்குதல், இராணுவ வேலிகளைக் கட்டி எழுப்புதல், இயல்பு நிலைகளைக் குழப்புதல், போராடக்கூடிய வெகுஜன சக்தியை முடக்குதல், அபிப்பிராயமற்ற மக்களாக்குதல், விரக்திக்கும் நம்பிக்கை யின்மைக்கும் மக்களைத் தள்ளுதல், பல்கலைக்கழகத்தைச் செயலற்ற நெருக்கடிக்குள் வைத்திருத்தல் போன்ற அனைத்து அம்சங்களையும் ஒருங்கிணைப்புடன் செயற்படுத்திவரு கின்றனர். குடாநாடு நூறுவீதமும் தெளிவான இராணுவ ஆட்சிக்கு உட்பட்டிருக்கின்றது. இத்தகைய இராணுவ இரும்புப்பிடிதான் இன ஒடுக்கு முறையைச் சாத்தியமாக்க வல்ல வழியென இராஜபக்ஷக்கள் நம்புகின்றனர். ஆனால் அதனை வெறுமனே தனித்த இராணுவ இரும்புப் பிடி மூலம் மட்டும் அவர்கள் செயற் படுத்தவில்லை. குடாநாட்டு மக்களை அரசியல் ரீதியாகவும், வெகுஜனப் பண்பு ரீதியாகவும் ஒரு சூனிய நிலைக்கு உள்ளாக்கிவிட்டு முழு அளவில் குடா நாட்டை தமிழ்ப் பிரதேசங்களிலிருந்தும் உலகிலிருந்தும் தனிமைப்படுத்தி விட்டனர். இதன்மூலம் தமிழ்ப்பிர தேசங்களுடனான தேசியக் கலாச்சாரப் பரிவர்த்தனைகள் அனைத்தும் தடுக்கப் பட்டுள்ளன. ஒரு பிரதேசத்துடன் இன்னொரு பிரதேசத்தினது வளப்பரிவர்த் தனை, மனித ஊடாட்டப் பரிவர்த்தனை, கருத்துருவாக்கப் பரிவர்த்தனை என்பவற்றை எல்லாம் தடுத்து நிறுத்தியமை மூலம் தேசிய இருதயத்தையே உள்ளூர அறுத்தாற்போன்ற நிலையை உருவாக்கியுள்ளனர்.

இந்த வகையில் முன்னெப் போதைய சிங்கள அரசாங்கங்களு டனும் ஒப்பிடமுடியாதளவிற்கு இராஜபக்ஷ அரசாங்கம்தான் ஒருங்கிணைந்த திட்டங்களைக் கொண்ட நீண்டகால, குறுங்கால, உடனடி அணுகுமுறைகளுடன் இன ஒடுக்குமுறையினை அரங்கேற்றி வருகின்றது.

இலங்கையின் அரியாசனத்தில் தமது வம்ஸ ஆட்சியை ஸ்தாபிப்பதற் குரிய அரிய வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக நம்பும் இராஜபக்ஷக்கள் அப்படித் தமது வம்சாட்சியை நிலைநிறுத்துவதற் குரிய முக்கிய கொள்கையாக தமிழின அழிப்புக் கொள்கையைத் தேர்ந்தெடுத் துள்ளார்கள். தம்மைச் சூழ்ந்துள்ள பண்டாரநாயக்கா, சேனநாயக்கா வம்சங்களை எதிர்கொள்வதற்காக மிகுந்த வீரியத்துடன் இனவாத அரங்கில் அவர்கள் களைக்கூத்தாடத் துணிந்துள்ளனர். அக்களைக்கூத் தாட்டத்தில் எத்தகைய தீய சக்திகளுட னும் அவர்கள் கூடிக்கூத்தாடுவதில் சிறிதும் வெட்கமற்றிருக்கின்றனர்.

துஷ்டகாமினியின் வாரிசாய் நின்று தமிழினத்தைத் தோற்கடித்தவர் என்ற காவிய நாயகப் பெயருடன் தமது இராஜபக்ஷ வம்ஸத்தை அரியாசனத் தில் நிரந்தரமாய் நிலைநிறுத்தி விடுவதே இராஜபக்ஷவின் இறுதி இலட்சியம். இத்தகைய ஆசைக்கான பலி ஆடு களாய் தமிழ் மக்களைத் தான் இராஜபக்ஷக்கள் தேர்ந் தெடுத்துள்ளனர்.




**பிரதேசங்களைத் துண்டாடல், வளங்களை அழித்தல், பொருளா தார ஒடுக்கு முறைகளை மேற் கொள்ளல், மக்களை அல்லலுக்கு உள்ளாக்கி நம்பிக்கைகளை அழித்தல், புலப்பெயர்ச்சிகளை ஊக்குவித்தல், வாழ்விடங்களைச் சிதைத்தல், கட்டுமானங்களை நொருக்குதல், பண்பாட்டு விவகாரங் களைத் தடுத்தல், கல்வியைச் சீரழித்தல் என பல்பரிமானம் கொண்ட ஒரு நோக்கிலான ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்களை இராஜபக்ஷாக்கள் வகுத்துச் செயற்படுத்தி வருகின்றார்கள்.**

---

(03ஆம் பக்கத் தொடர்ச்சி..)

ஆட்கடத்தல்கள் பற்றி, பயங்கரவாதம் பற்றி யெல் லாம் இந்த வேளையில் சிந்தித்துப்பார்க் கின்றேன். மனித உயிர்களைச் துச்சமாக என் னல், மனித உரிமைகளை மீறல், மக்களைத் தம் சுயலாபத்திற்குப் பயன்படுத்தல் போன்ற வற்றையெல்லாம் **''மதத்தின் பெயரால் நியாயப்படுத்தும் போக்கினையும் எண்ணிப் பார்க் கின்றேன். பெரும் குருதிக்களரியை ஏற்படுத்தி யிருக்கும் இம் முரண்பாட்டிற்கு இணக்கமான பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்வினைக் காண முடியும்''** கடுமையான தொணியில் திருத்தந்தை கூறியிருப்பதன் தாக்கத்தினை எவரும் உணரமுடியும்.

அடுத்த அதிர்ச்சியும் உடனே காத் திருந்தது. எந்தக் கண்காணிப்புக் குழுவை அமைக்க மகிந்தர் தயங்குகிறாரோ அந்தச் சருவ தேச கண்காணிப்புக் குழுவை அமைக்க அமெரிக்கா ஆதரவு என வெளியான செய்தி யும் அமெரிக்க பிரதிநிதிகள் அவையின் வெளி விவகாரக் குழுத்தலைவரான ரொம் லன்ரொ சின் கடுமையான கண்டனமும் அடுத்தடுத்து வெளியாகின. இவற்றினையடுத்து மகிந்தர் அடித்த பல்டியே மீண்டும் அமைதி முயற்சிக்கு மகிந்தர் பச்சைக்கொடி, விரைவில் தீர்வுப் பொதி என்கிற செய்திகளும் அதேவேளை முக்கூட்டுத் தலையரில் விதைத்த தலை யராகக் கருதப்படும் கோத்தபாய ஏபி செய்தியா ளருக்கு வருமாறு தெரிவிக்கிறார் "இப்பொழுது போர்நிறுத்த உடன்பாடு என்றொன்றுமில்லை. அதில் பொருளுமில்லை. சருவதேசத்தைத் திருப்தி செய்வதற்காக இன்னமும் இதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை" ஏபி செய்தியாளரே சொல்கிறார். இதுவொரு புதிய திருப்பம். இதுவரை புலிகள் தாக்குதல் தொடுத் தமையாலே பதில் இராணுவ நடவடிக்கை களை நாம் மேற்கொள்ள நேரிட்டது. அப்படி யிருந்தும் போர்நிறுத்தத்தை பெரிதும் மதிக் கின்றோம் இவ்வாறு அப்போது அரசுமட்டம் கூறிவந்தது. சருவதேசத்தினை ஒரு பொருட்டா கவே எடுக்காது எடுத்தெறிந்து பேசி கூறப்பட்ட இப் பதில் வாய் தவறி வந்ததா? வாய்க் கொழுப் பின் வடிவமா? தீவின் இனவெறி யாளர்க்கான தீனியா?

கெட்டிக்காரன் புளுகு எத்தனை நாட்களுக்கு நீடிக்கும். அம்மையார் காலத்தில் அண்டப் புளுகு ஆகாசப் புளுகையெல்லாம் எம் மக்கள் கேட்டவர்கள். பின் அம்மையார் அறுந்த பட்டம் போல் அலைந்து வீழ்ந்ததை யும் பார்த்தவர்கள். சந்திரிக்காவின் இருண்ட பக்கங்களை, கேவல நடத்தையை ஏமாற்றுத் தனத்தையெல்லாம் வரிக்கு வரி ஆதாரபூர்வ மாக அண்மையில் ராவய விக்டர் ஜவன் "பொய்மையின் இராணி" (THE QUEEN OF DECEIT) என்கிற பெயரில் வெளி யிட்டார். மிகப் பரபரப்பான இந் நூல் பற்றி ஐலன்ட்(25.11.2006) தலையங்கத்தில் பின்வரு மாறு எழுதியது. "இந்நூலை மகிந்தர் இவ் வாறு பயன்படுத்தவேண்டும். ஒவ்வொரு இரவும் நித்திரைக்குப் போகும்வரை வரிக்கு வரி வாசிக்கவேண்டும். அப்போதுதான் இரு விடயங்கள் அவரது கவனத்தில் உறைக்கும். ஒன்று தன்னைத்தானே தனிமைப்படுத்தித் தனக்குச் சாபத்தைத் தானே தேடிய அவர் எவ்வளவு தூரம் பிறரால் அவதானிக்கப்பட்டார் என்பது. இரண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிப் பதவியென்பது இரவல் வாங்கப்பட்ட ஒரு ஆடையே என்பது.

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் மூலோபாயப் போரியலில் இந்த ஐந்து வளையங்கள் மீதும் இயலுமானளவு பரவலாகவும் சமாந்தரமாகவும் தாக்குதல்களை போரில் ஈடுபடுகின்ற தரப்பு மேற்கொள்வதன் மூலம் போரினை வெல்வதற்குரிய சாத்தியப்பாடுகள் அத்தரப்பிற்கு மிகவும்பிரகாசமானதாகக் காணப்படும் என்று மேலும் கூறுகின்றார்.

அதாவது எதிரியின் போரிடும் உளவுரன் மிகவும் பாதிக்கப்பட்டு எதிரி தனது போர் முயற்சிகளை இதன் காரணமாக கைவிடப் பண்ணுவதே இத் தந்திரோபாயத்தின் இலக்காகும்.

இவ்வளையங்களிலே மிகவும் பிரதானமானதும் உள்வளையத்தில் காணப்படுவது அரசின் தலைமைச் செயலகம் மற்றும் கட்டளை பீடங்களாகும். இதற்கு அடுத்ததாக முப்படைத்தளபதிகளின் கட்டளைப்பணிமனைகள், கூட்டுப்படைத் தலைமையகங்கள், தொடர்பாடல் நிலையங்கள் என்பன போன்ற போரினை செயல்படுத்தும் கட்டமைப்புக்கள் காணப்படுகின்றன.

இரண்டாவது வளையத்தில் போரினை தொடர்ச்சியாக நடத்துவதற்குத் தேவையான சக்திமூலங்கள் காணப்படுகின்றன. ஒரு அரசின் பொருளாதாரம் நல்ல நிலையில் இருந்தால் மட்டுமே போரினை நீண்ட காலத்திற்கு அந்த அரசினால் நடத்த முடியும். அதாவது நிதி, மின்சாரம், எரி பொருள் போன்ற சக்திமூலங்கள் ஒரே சீராகவும் தடையின்றியும் பெறக்கூடியதாக இருந்தால் மாத்திரமே ஒரு அரசினால் தனது தலைமையகத்தையும் போர் இயந்திரத்தையும் சிறப்பாக இயக்க முடியும். சிறிலங்கா போன்ற சிறிய நாட்டின் தலைநகரான கொழும்பு நகரில் மேலே கூறப்பட்ட கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த இலக்குகள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் நேரடியாக அரச தலைமைப் பீடத்தினையும் அதனது போர் இயந்திரத்தினையும் பலமாகப் பாதிக்கும்.

அதாவது இரண்டாவது வளையத்தின் மீதான தாக்குதல்கள்,

- அரசு தனது போரினையோ அல்லது அரசியல், இராணுவ நிகழ்ச்சி நிரலையோ தொடர்ச்சியாக மேற்கொள்வதை சாத்தியமற்றதாக்கும்.
- பொருளாதார ரீதியிலான பல்வேறு மோசமான தாக்கங்களையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்துவதோடு அவ்வரசின் உள்ளக அரசியல் முரண்பாடுகளைக் கூர்மையடையப் பண்ணும்.
- இவற்றின் காரணமாக அரச இயந்திரம் முற்றாகச் செயலிழக்கும் அல்லது ஆகக்குறைந்தது முடக்கமடையும் நிலைக்குத் தள்ளப்படும்.

மூன்றாவது வளையத்தில் விமான நிலையங்கள், துறைமுகங்கள், பிரதான போக்குவரத்துச் சாலைகள், புகையிரதப் பாதைகள், பாலங்கள், நீர்த்தேக்கங்கள் போன்ற உட்கட்டுமானங்கள் காணப்படுகின்றன. இவ்வளையத்தின் மீதான தாக்குதல்கள் எதிரிகளின் போர்நடவடிக்கைகளுக்கான விநியோகங்கள் மீது பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

நான்காவது வளையத்தில் பொது மக்கள் காணப்படுகின்றார்கள். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜேர்மனியர்கள் லண்டன் மாநகரின் மீது தொடர்ச்சியாக வான் தாக்குதல்களை மாதக்கணக்கில் நடத்தியமை மற்றும் நேச நாடுகள் ஜேர்மன் நகரங்களின் மீது வான்வழியாக குண்டுமழை பொழிந்தமை போன்ற நடவடிக்கைகள் மக்கள் மீது உயிரிழப்புக்களையும் அவலங்களையும் ஏற்படுத்துவதன் மூலம் ஒரு உளவியல் போரை நடத்தி மக்களை போரில் இருந்து அந்நியப்படுத்தும் முயற்சியே இதுவாகும்.

ஐந்தாவது வளையத்தில் களமுனைகளில் நிலைப்படுத்தப்பட்டுள்ள படையினர் காணப்படுகின்றனர். போர் நடவடிக்கைகளில் களமுனைப்படையினர் முக்கியமான பகுதியாகக் கருதப்படுகின்றனர். எனினும் இவர்களின் பிரதான நோக்கம் ஏனைய வளையங்களில் காணப்படுகின்ற தலைமைப் பீடங்களையும் கட்டுமானங்களையும் சக்திமூலங்களையும் எதிரிகளின் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பதே.

இப்போது வார்டனின் ஐந்து வளையக் கோட்பாட்டின் பிரதானமான இலக்கான எதிரி அரசின் தலைமைப் பீடத்தின் அனைத்து போர் மற்றும் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற கட்டளைமையத்தை (Center of Gravity) அடையாளம் கண்டு அதனை தாக்கியழிப்பது அல்லது செயலிழக்கப் பண்ணுவது என்பது போரில் வெற்றி கொள்வதற்கு மிகவும் இன்றியமையாதது. இம் மையமானது ஒரு அரசின் அதிகாரம், பாதுகாப்பு, உள மற்றும் பௌதீக வலிமை, போரிடும் வல்லமை போன்றனவற்றின் ஆதாரமாக விளங்குகின்றது. இது தொடர்பாக குளோஸ்விச் கூறுவதாவது "ஒரு அரசானது போரினை நடத்திக் கொண்டிருக்கும் போது இயல்பாகவே அதனது அதிகாரம் மற்றும் செயற்பாடு போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிணைத்து செயற்படுத்துவதற்கான மையம் ஒன்று வளர்ச்சிபெற்று உருவாகும். இம் மையத்தை தாக்கியழிப்பதற்கே எமது அனைத்து சக்திகளும் கவனங்களும் மூல வளங்களும் பிரயோகிக்கப்பட வேண்டும்."

நான்காவது ஈழப்போரிலே வான் புலிகளின் மரபுவழிப் போர் நடவடிக்கையானது ஒரு புதிய பரிமாணத்தை திறந்துவிட்டிருக்கின்றது. கடந்த காலங்களிலே தேசியத் தலைவர் அவர்களினால் தரையிலும் கடலிலும் மரபுவழி போர்த் தகைமைகள் கொண்ட படைகளை உருவாக்கியதைப் போன்று தற்போது வான் பரப்பின் ஊடாகவும் மரபு வழிப் போரினை சிறப்பாக திட்டமிட்டுத் துல்லியமாக நிறைவேற்றக்கூடிய வான்புலிகளை எந்தவொரு நாட்டின் உதவியுமின்றி தமது சொந்த முயற்சியிலேயே உருவாக்கிவிட்ட அவரது நவீனத்துவமான படைப்புத்திறன் சிந்தனையை பல வெளிநாட்டு ஆய்வாளர்களும் ஊடகவியலாளரும் வியந்து பாராட்டுகின்றனர்.

வான் புலிகளின் மரபுவழிப் போர் என்ற இப்புதிய பரிமாணமானது தரை மற்றும் கடல் போன்றல்லாது எல்லைகள் அற்ற ஒரு புதிய தளத்தினை புலிகளுக்கு திறந்துவிட்டுள்ளது. அதாவது சிங்கள தேசத்தின் அனைத்துக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலக்குகளையும், அதாவது வார்டனின் ஐந்து வளையங்களையும் இலங்கைத்தீவின் எப்பகுதியிலும் சென்று அழிக்கக்கூடிய வல்லமையைப் புலிகள் தற்போது பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஒரு மாதகாலப்பகுதிக்குள் மூன்று வெற்றிகரமான மரபுவழி வான் தாக்குதல்களை வான் புலிகள் நடத்தியதன் மூலம் சிறிலங்கா அரசு தனது வான் ஆதிக்கத்தை புலிகளிடம் பறிகொடுத்துவிட்டது என்று சிங்கள ஆய்வாளர்கள் ஏற்கனவே புலம்பத் தொடங்கிவிட்டார்கள்.

சிங்கள அரசியல் தலைவர்களோ அல்லது சிங்களப் படைத்தளபதிகளோ கள யதார்த்தங்களையோ அல்லது விடுதலைப் புலிகளின் நவீன முறையிலான போரியல் சிந்தனைகள் மற்றும் செயற்றிறன்களையோ அறிவதற்கோ அல்லது அதனை ஏற்றுக் கொள்வதற்கோ தயாரில்லை என்பதே சிங்கள மக்களின் மிகவும் துன்பியல் நிறைந்த சோகம் என சிங்கள பத்தி எழுத்தாளரான ரிசராணி குணசேகரா தெரிவிக்கின்றார். இதைவிட துன்பம் என்னவென்றால் நாட்டின் பொருளாதாரமும் அரச கட்டுமானங்களும் சீரழிந்து கொண்டிருக்கின்ற நிலையில் மகிந்த ராஜபக்சவிற்கும் கோதபாய ராஜபக்சவிற்கும் கொழும்பு நகரின் மூலை முடுக்கு எங்கும் கட் அவுட் வைப்பதும் அவர்களைப் புகழ்ந்து விளம்பரங்கள் ஒட்டுவதும் தான் மிக மோசமான செயற்பாடு என்று மேலும் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இனிவரும் காலங்கள் தமிழீழ விடுதலைப் போரியல் வரலாற்றிலேயே புதிய புதிய பரிமாணங்கள்கொண்ட, தேச விடுதலையை விரைவுபடுத்துகின்ற தீர்க்கமான சமர்கள் இடம்பெறப் போவதையே தற்போதைய நிகழ்வுகள் சுட்டிநிற்கின்றன.

பெரும் எடுப்பிலான மரபுவழிப் போர்த் தகைமைகள் கொண்ட புலிப் படையணிகளை உருவாக்கி தரை, கடல் மற்றும் வான் என்ற முப்பரிமாணத் தளங்களிலே போர்களை சம காலத்தில் சமாந்தரமாக இனிவரும் காலங்களில் நடத்தவிருக்கின்ற எமது தேசியத் தலைவரின் மதிநுட்பம் மிக்க சிறந்த இராணுவத் திட்டமிடல்களை செயற்படுத்துவதற்கு விடுதலைப் புலிகளின் தரைப் படை, கடற்படை என்பனவற்றோடு வான் படையும் தயாராக இருக்கின்றது.



# வீரவணக்கம்

## மாமனிதர் திரு. தில்லை ஜெயக்குமார்

**தலைமைச்செயலகம்,**
**தமிழீழ விடுதலைப் புலிகள்,**
**தமிழீழம்.**

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக அவுஸ்திரேலியத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளராகச் செயற்பட்டு, எமது போராட்டத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அரும்பாடுபட்டு அயராது உழைத்த ஒரு அற்புதமான மனிதரை நாம் இன்று இழந்து விட்டோம். இந்த நல்ல மனிதரை இழந்து, எமது தேசம் இன்று சோகக்கடலிலே மூழ்கிக்கிடக்கிறது.

திரு. தில்லை ஜெயக்குமார் அவர்கள் ஒரு பண்பான மனிதர். நெஞ்சில் தூய்மையும் நேர்மையும் கொண்டவர். தன்னலமற்றவர், பொதுநலத்தையே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர். இனிமையான பேச்சும், எளிமையான பண்பும், பெருந்தன்மையான போக்குமே அவரது ஆளுமையின் அழகு. அவர் உதிரும் மந்திரப் புன்னகை அந்த அழகிய ஆளுமையை அணிசெய்தது.

இதுவே, அனைவரையும் அவரை நோக்கிக் காந்தமாகக் கவர்ந்திழுத்தது.

இவர் ஒரு சிறந்த தேசப்பற்றாளர். அவுஸ்திரேலிய மண்ணில் தளமிட்டு நின்றபோதும், தான் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த மண்ணை அவர் ஆழமாக நேசித்தார். சிங்கள அதிகார வர்க்கம் தனது இராணுவ அடக்கு முறைப் பாதையைக் கைவிட்டு, தமிழ் மக்களுக்கு என்றுமே ஒரு நீதியான தீர்வை வழங்கப்போவதில்லை என்பதை அவர் ஆழமாக உணர்ந்தவர். விடுதலையின் பாதையில் பயணித்து, சுதந்திரத் தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழியில்லை என்பதை அனுபவ ரீதியாகப் பட்டறிந்தவர். இந்தச் சிந்தனைத் தெளிவும் பட்டறிவும் அவரிடம் விடுதலைத் தீயைப் பற்றவைத்தது. அவரும் எமது விடுதலை இயக்கத்தோடு ஒன்று சேர்ந்து, போராட்ட வாழ்வில் முழுமையாக மூழ்கினார்.

கடல்கள் தாண்டி, கண்டனங்கள் கடந்து, தனது தாயகத்திற்கு வெளியே, தூர தேசத்திலே ஒருவர் எத்தனை பெரும் பணியை தனது தேச விடுதலைக்கு ஆற்ற முடியுமோ அதனைத்தான் இவர் அவுஸ்திரேலிய மண்ணில் புரிந்தார். அவுஸ்திரேலிய நாட்டின் அரசியல் போக்கையும் சட்ட நடைமுறைகளையும் சரியாகப் புரிந்துகொண்டு, தமிழீழ தேச விடுதலைக்கான போராட்டப் பணிகளைச் சாதுரியமாகவும் சாமர்த்தியமாகவும் முன்னெடுத்தார். அங்கு வாழும் எம்மக்கள் மத்தியில் தமிழ்ப்பற்றையும் இனப்பற்றையும் ஊட்டி வளர்த்து, போராட்ட விழிப்புணர்வைத் தூண்டி, எமது போராட்டத்திற்கு ஆதரவாக அவர்களை அணிதிரட்டினார். அவுஸ்திரேலிய மண்ணில் தமிழ்க் குரல் வானொலி தோற்றம் பெறுவதற்கும் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பல்வேறு நாடுகளில் தனது கிளைகளைப் பரப்புவதற்கும் துணை நின்றவர். இவர் ஆரவாரமின்றி, அமைதியாக ஆற்றிய விடுதலைப்பணி என்றும் போற்றுதற்குரியவை.

திரு.தில்லை ஜெயக்குமார் அவர்களின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது விடுதலைப் பணியைக் கௌரவிக்கும் முகமாக 'மாமனிதர்' என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். தேச விடுதலை எனும் உன்னத இலட்சியத்திற்காக உறுதியோடு உழைத்த உயர்ந்த மனிதர்களைச் சாவு என்றும் அழித்து விடுவதில்லை. எமது நெஞ்சத்து நினைவலைகளில் அவர்கள் என்றும் நீங்காத நினைவுகளாக நிலைத்து நிற்பார்கள்.

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

**வே. பிரபாகரன்,**
**தலைவர்,**
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

# வீரவணக்கம்

## மாமனிதர் கலைஞர் திரு. நாவண்ணன்



**தலைமைச்செயலகம்,**
**தமிழீழ விடுதலைப் புலிகள்,**
**தமிழீழம்.**

சுயநலன்கருதாது, நேர்மையுடனும் நெஞ்சுறுதியுடனும் எமது தேச சுதந்திரப்போராட்டத்திற்கு அரும்பணி ஆற்றிய கலைஞர் நாவண்ணன் அவர்களை நாம் இழந்து இன்றுடன் ஓராண்டு நிறைவடைகிறது.

தமிழினம் பெருமைப்படும்படியாக கலையுலகில் பெரும் சாதனைகளைப் புரிந்த இந்தக் கலைமாமணியை அவரது முதலாவது நினைவாண்டில் இன்று நாம் பெருமையோடு நினைவுகூருகிறோம்.

இவர் ஒரு சிறந்த கலைப்படைப்பாளி, இவரிடம் கலைஞர்களுக்கே உரித்தான உள்ளம் இருந்தது. வற்றாத கலையுணர்வு இருந்தது. கட்டுக்கடங்காத கற்பனை வளம் இருந்தது. கலைக்கு அணிசெய்கின்ற நிறைந்த அறிவு இருந்தது. தமிழ் மீது அளவுகடந்த பற்றும் பாசமும் இருந்தது. தனது தாய் மண்ணின் விடுதலைக்கு பங்காற்ற வேண்டும் என்ற உயரிய குறிக்கோள் இருந்தது. சுயமான ஆளுமை இருந்தது. இவை எல்லாம் ஒன்று கலந்த மனிதம் இருந்தது. இந்த அழகான மனித மாண்பே அனைவரையும் அவரை நோக்கிக் கவர்ந்து கொண்டது.

சுதந்திரப்போராட்டங்களுக்கு உந்துசக்தியாக ஊக்க சக்தியாக அமைவது தேசப்பற்று. இந்தத் தேசப்பற்று இவரிடம் நிறைந்திருந்தது. அவரது ஆழ்மனதில் ஆழமாக வேரோடிநின்றது. அவரை ஆட்கொண்டுநின்றது. விடுதலை வேட்கையாக அவரிடம் வெளிப்பட்டு நின்றது.எமது சுதந்திர இயக்கம் முன்னெடுத்துவரும் விடுதலைப் போராட்டத்திலே ஒரு இலட்சியப் பிடியை அவரிடம் ஏற்படுத்திவிட்டது. பொதுவாகவே இலட்சியத்தில் பிடிப்பு ஏற்பட்டுவிட்டால், துன்பங்கள் தெரிவதில்லை. வலிகள் புரிவதில்லை. அவரும் போராட்ட வாழ்வின் பெரும் துயர்களையும் சுமைகளையும் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, முதுமையான வாழ்வின் உடல் உபாதைகளையும் சகித்துக்கொண்டு விடுதலைப் பாதையிலே விடாப்பிடியாகச் செயற்பட்டார்.

அவர் தமிழீழ மண் தந்த ஒரு சிறந்த கவிஞர், சிறந்த ஓவியர், சிறந்த சிற்பவல்லுனர், சிறந்த நாடக நெறியாள்கையாளர். அவர் கலைகளுக்காகவே வாழ்ந்தார். கலைகள் பற்றியே சதா சிந்தித்தார். புதிய கலைவடிவங்களைக் கண்டறிந்து அவற்றோடு புதிய நுட்பங்களைப் புகுத்தி, காலத்திற்கேற்ப, வரலாற்று ஓட்டத்திற்குஏற்ப கலைப்படைப்புக்களைச் செய்தார். அவரைப் போலவே அவரது கலைப்படைப்புக்களும் அழகும் ஆழமும் வாய்ந்தவை. அனைவரையும் கவர்ந்திழுக்கும் சக்தி வாய்ந்தவை. அத்தோடு அவர் தனது கலைப் படைப்புக்கள் ஊடாக மக்களிடையே போராட்ட விழிப்புணர்வையும் ஒடுக்கு முறைக்கு எதிரான கொதிப்புணர்வையும் தூண்டிவிட்டார். சிங்கள அரசு எமது தாயக மண்ணிலே நிகழ்த்திய கொடுமைகளையும் கொடூரங்களையும் அதன் ஆழ அகலங்களில் காலவரிசைப்படி பதிவுசெய்தார். போராட்ட வாழ்வில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் எண்ணற்ற பிரச்சினைகளையும் நெருக்கடிகளையும் பல்வேறு கோணங்களில் படம்பிடித்தார். தனது கலைப்படைப்பின் உச்சமாக கரும்புலிகளது தோற்றத்தையும் வளர்ச்சியையும் எழுச்சியடையும் தனது அழகுத்தமிழிலே கரும்புலிக்காவியமாக வடித்து நூலாக வெளியிட்டார். அன்னார் ஆற்றிய பெரும் பணி என்றுமே போற்றுதற்குரியது.

கலைஞர் நாவண்ணன் அவர்களின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது விடுதலைப் பணியைக் கௌரவிக்கும் முகமாக "மாமனிதர்" என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். சத்திய இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு என்றும் அழித்துவிடுவதில்லை. சரித்திர நாயகர்களாக எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்கள் என்றும் வாழ்வார்கள்

**'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

**வே. பிரபாகரன்,**
**தலைவர்,**
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**



# முகிலைத் துளைத்த புலிகளும் நிலவைத் துடைத்த தமிழரும்

முந்தி ராவணன் ஏற்றிய புஷ்பகம்
முகில் துளைத்ததாம் அதன்பிற கின்றுதான்
சொந்தமான வானூர்தியில் தமிழனும்
சோதிமின்னிடத் தோன்றினான் ஆமிது
விந்தைதானடா. போரிடை ஆடும்மண்
விடியும் என்பதற்கான குறியுடன்
எந்தைநாடினி எதற்கும் அஞ்சாதென
இறக்கைகட்டிப் பறந்த பறப்படா.

26.03.2007 திங்கட்கிழமை
ஈழத்தமிழருக்கு முகில்கள் தலைவாரியநாள்.
நள்ளிரவிலும் வெளிச்சம் பிரகாசித்த தினம்.
நீர்கொழும்புக்கு மேலே நின்றிருந்த நட்சத்திரங்கள்
யாரிவர்கள் என்று அதிசயித்தன.
அச்சத்தில் மகிழ்ச்சி தொலைத்தவர்கள்கூட
கச்சையிறுக்கிக் காலிற் சதங்கை பூட்டினர்.
நாணற்புற்களும் தலைநிமிர்த்தி
மானத்தின் மகுடம் தரித்தன.
எம்மாலும் இயலுமெனக் காட்ட
இரவிலும் வான்புலிகள் நிகழ்த்திய கூத்தில்
உமக்கினிச் சாமத்திலும் உறக்கமில்லையென
பகைவர் காதிற் பாடிய நாள்.
கோட்பாடுகளுக்கும் மதிப்பீடுகளுக்கும்
அப்பாலான அசாத்திய அதிசயம்.
நேரிற்பார்த்த ஓரிருதமிழருக்குத் திவ்விய தரிசனம்.
இதுவரையான காலத்தில்
ஈழத்தமிழரில் இருவருக்கே
இறக்கை முளைத்திருந்தது.
அன்று இராவணனுக்கு
இன்று பிரபாகரனுக்கு.
இராவணனின் 'புஷ்பகம்'
சீதையைத் தூக்கித் திரும்பியது.
பிரபாகரனின் 'கற்பகம்'
கட்டுநாயக்காவைச் சுட்டுத் திரும்பியது.
முன்னது வால்மீகியின் கற்பனை
பின்னது வான்புலிகளின் அற்புதம்.
வன்னியிலிருந்து நீர்கொழும்புவரை பறத்தலென்பது
வல்லரசுக்குச் சுண்டங்காய்.
போரிடும் விடுதலைப் பொறிகளுக்கு
எல்லோருக்கும் எட்டாத இமயம்
எட்டாத உயரத்தைத் தொட்டனர் ஈழத்தமிழர்.
நிலத்தை வசமாக்கி
கடலை வசமாக்கி
வானத்தையும் வசமாக்கிய வல்லமையால்
ஈழத்தமிழரை எழுப்பம் தழுவியது.
வான்புலிகளின் பறத்தலென்பது
வெறும் வல்லமையை மட்டுமல்ல
ஈழத்தமிழர் அழுதகாலம் முடிந்ததென்ற
உரத்த குரலையுமே தூக்கிச்சென்றது கூடவே.
நான்கு தமிழரின் சிறகு விரிப்பில்
நாற்பது இலட்சம் ஈழத்தமிழரும் பறந்தனர்.
ஆச்சரியம் என்னவெனில்
அதிகமானோர் தூக்கத்திலிருந்தனர் அப்போது.
இது பிரகடனப்படுத்தாத யுத்தமென்பதால்
இப்போது தருமயுத்தமே நடக்கிறது.
இடைக்கிடை நகுல சகாதேவர் களம் புகினும்
இன்னும் அருச்சுனர்கள் காண்டீபம் தரிக்கவில்லை.
வீமர்கள் கதாயுதம் எடுக்கவில்லை.
எவராயினும்
கோத்தபாயாவை எழுதிவைக்கச் சொல்லுங்கள்.
சம்பூரைத் தோல்விக் கணக்கில் செலவுவைத்து
புலிகள் வெளியேறவில்லை.
வாகரையில் இருந்து புன்னகையில் அர்த்தம் சொல்லியே
புலிகள் அகன்றனர்.
வான்புலிகளின் பறத்தல் என்பது
புலிகள் அஸ்திரங்களைக் கையிலெடுத்ததற்கான அறிகுறி
கரும்புலிகள் காண்டீபம் தரித்ததற்கான சாட்சி
வெற்றியின் வரவு இனித்தான் வெளிச்சம்தரும்.
அன்றிரவு
வானில் அழகாய் நிலவிருக்க
என்றும் போல் காற்று இதமாய் வீசியது.
நள்ளிரவு
கட்டுநாயக்கா வான் பரப்பில்
புள்ளியென ஏதோ புகுந்து பெரிதாகி
வான் தளத்தில் தீபாவளியெனவே வெடிகொளுத்தி
மீண்டும் திரும்பி மிதந்தபடி போயிற்று.
ஈழத்தமிழன் இறக்கை கட்டி
முகிலினுக்குள்
வாழத்தொடங்கிய வரலாற்று நாளிதுதான்.
உலகத் திசையாவும் உதைபட்டு
அகதியென
நிலத்திற் புல்லாகி நின்ற தமிழினத்தோன்
வானத்தில் ஏறி
வரிசையெனப் பெருமகிழ்வில்
கானத்தைப் பாடிக் களித்தான்.
தமிழ்த் தலைவன்
ஈழத்தைப் பெறுவான் என்ற பெருநம்பிக்கை
காலத்தில் மீண்டும் கால்பரத்திக் கொண்டதுகாண்.
நாளாந்தம் வந்து நம்குடிமேற் குண்டெறிந்து
ஆளானதனைத்தும் அழித்தான்.
பள்ளிசென்ற
பூவைத் தொலைத்தான்.
புதுமனையைப் போட்டெரித்தான்.
சாவையெம் வாசலிலே சபையிருத்திச் சாப்பிட்டான்.
கோயிலழித்தான்.
குடியிருப்பைப் போட்டெரித்தான்.
வாயெடுத்து அழக்கூட வகையற்று
நமையழித்தான்.
காத்திருந்த தலைவன் கதைமுடிக்கத்
தேதிவைத்தான்.
சாக்குருவியெல்லாம் சாகவொரு நாட்குறித்தான்.
தாயின் முலையினிலே தமிழ்ப்பால் குடித்தவர்கள்
வாயிற்சிரிப்போடு வான்பறவை மீதமர்ந்தார்.
தலைவன் கையசைக்க
தமிழ்வீரம் மெய்சிலிர்க்க
முகிலைக் கிழித்தபடி மிதந்ததடா வானூர்தி.
முகிலேறிப் போன முதற் குருவி
நீர்கொழும்பின்
அயலேறிப் பகைவரது அஸ்திரங்கள் எரித்ததுகாண்.
மற்றக்குருவி மடியிருந்த குண்டுகளால்
கற்பனைக்கும் எட்டாத அற்புதங்கள் செய்ததுகாண்.
கொற்றம்நிறுவிவிட்டுக் கூடுவந்த குருவிரண்டும்
மற்றத்தரம் பறக்க மறுபடியும் காத்திருக்கு.
நிலம்மகிழ
அந்த நீலவான்தான் மகிழ
புலம்மகிழ
புலத்தில் போயிருக்கும் தமிழ்மகிழ
உலகம் முழுதும் உள்ள உறவுகளோ
வாழ்த்துரைக்க
ஈழவிடுதலைக்காய் எழுந்த பறப்பிதுதான்.
வாழும் காலத்தின் வரலாறு இதுவேதான்.

மானமேறி வாழ்தல் அவாவுறும்
மரபுளோய்! உன்வாசல் வரிந்திதோ
வானமேறி முகிலை உடுத்திடும்
வாழ்வுனக்கென ஆனது; தெய்வமே!
காணநூறு கண்ணில்லையே; நானதைக்
கைகளாற் தொடவில்லையே; தமிழனே!
தான தானதை தோமெனத் துள்ளியே
தமிழனேற்றிய ஊர்தியைப் பாரடா.



வியாசன்